





# தமிழரசு

16-6-1987

ரூ. 1







# சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புப் பற்றிய ஆய்வுக் கூட்டம், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தலைமையில், ஜூன் 2, 3 நாட்களில் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

அட்டை சொல்லும் செய்தி

# பாமரரைப் படிக்க வைத்த பத்திரிகையாளர்



"தினத்தந்தி"'யை நிறுவியவரும் தமிழ்ப் பத்திரிகை உலகின் மன்னருமான திரு சி.பா. ஆதித்தனாருக்குச் சென்னையில் 'தினத்தந்தி' ஊழியர்கள் அமைத்துள்ள முழு உருவச்சிலைத் திறப்பு விழா 24-5-87 அன்று மாலை நடந்தது. விழாவுக்குத் தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் தலைமை தாங்கினார்.

சிலையைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் பேசுகையில் கூறியதாவது :—

'என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே!

மறைந்த பெரியவர் சி. பா. ஆதித்தனார் அவர்களுடைய சிலையைத் திறந்து வைக்கும் வாய்ப்பு கிடைத்ததற்கு நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆதித்தனார் அவர்களுடைய வாழ்க்கையே தமிழ் வாழ்க்கை ஆகும்.

லண்டனில் படிக்கும் போதே தமிழ் ஏடுகளுக்கு நிருபராகப் பணியாற்றி வந்தார்.

நாட்டு விடுதலை இயக்கத்தை ஆதரித்தார்.

அப்போது 'தமிழன்' என்ற வார இதழ் தொடங்கினார். யுத்த காலம் ஆனதால், காகிதப் பஞ்சம் வ.ாட்டியது.

அப்போதே கையால் செய்த காகிதத்தில் 'தமிழன்' ஏட்டை வெளியிட்டார்.

பின்னர் தமிழில் நாளேடு தொடங்கினார். மாவட்டத் தலை நகரங்களில் மாலை நேர நாளேடுகளை முதன் முதலாகத் தொடங்கியவர்.

எழுதப்படிக்கத் தெரியாத ஏழை மக்கள் எழுத்துக்கூட்டிப் படிக்கத்தக்க வகையில் எளிய தமிழில் 'தினத்தந்தி' பத்திரிகையை நடத்தினார்.

எந்த ஒரு செய்தி ஆனாலும் அதனைக் கதை போலச் சொல்வது என்ற வாடிக்கையை முதலில் கையாண்டவர், ஆதித்தனார்.


பல கல்வி நிலையங்களை விட ஆதித்தனார் நடத்திய பத்திரிகைகளால் எழுத்து அறிவு, படிப்பு அறிவு பெற்றவர்கள் ஏராளம். அவர் ஐம்பத்தி இரண்டாம் வருடத்தில் மேல் - சபை உறுப்பினராக இருந்தபோது, கோவில்களில் உயிர்ப்பலி கொடுப்பதை தடுக்கத் தனிநபர் மசோதா (சட்டம்) கொண்டு நிறைவேற்றினார்.

மொழிப் பிரச்சினையில் அறிஞர் அண்ணா எடுத்த முயற்சி

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2018 மலர் : 17 இதழ் : 24

பிரபவ - ஆனி 2 16.6.1987



**ஆதித்தனார் சிலை வடித்த சிற்பி திரு எம்.என்.செயராமனுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மோதிரம் அணிவிக்கிறார்.**

களுககு ஆதித்தனாா துணை நின்றார். தமிழ்நாட்டில் 1967- ஆம் ஆண்டில் அரசியல் மாற்றம் நிகழ்ந்த நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு 'தினத் தந்தி' பத்திரிகை வாயிலாக முழு ஆதரவையும் அளித்தார். தமிழ்நாடு சட்டமன்றச் சபா நாயகராகத் திறமையாகச் செயலாற்றினார். அமைச்சராக இருந்து தனது நிர்வாகத் திறமையைக் காட்டினார்.

இலங்கைத் தமிழ் மக்களுக்காக 30 ஆண்டுகளுக்கு முன்பே குரல் கொடுத்த பெருமை அவருக்கு உண்டு. ஆதித்தனார் அவர்கள் நிறுவிய 'தினத்தந்தி' நாளேடு அவருடைய சீரிய குறிக்கோள்களுக்காக இன்றும் பணி ஆற்றி வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆதித்தனார் அமைத்த நிறுவனங்களை, அவரது புதல்வர் சிவந்தி ஆதித்தன் அவர்கள் கட்டிக்காத்து வருவதுடன் மெச்சத்தகுந்த வகையில் வளர்த்தும் வருகிறார். சிவந்தி ஆதித்தன் அவர்களுடைய தீவிர முயற்சியால் இன்று அவருடைய தந்தையின் திருவுருவச்சிலை திறந்து வைக்கப்படுகிறது.

அமரர் ஆதித்தனாருடைய இந்தச் சிலை நமக்கு எல்லாம் உழைப்பையும், தமிழ்ப் பற்றையும் நினைவூட்டிக் கொண்டு இருக்கும் என்று நம்புகிறேன். இந்த விழாவுக்கு என்னை அழைத்தவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதித்தனாரின் நினைவுக்கு என் அஞ்சலியைச் செலுத்தி, அவருடைய உருவச் சிலையை மகிழ்ச்சியுடன் திறந்து வைக்கிறேன். **இன்று முதல் ஆரிஸ் சாலை ஆதித்தனார் சாலை என்று அழைக்கப்படும்.**

அண்ணா நாமம் வாழ்க.''

சி. பா. ஆதித்தனார் சிலைத் திறப்பு விழாவில் 'தினத்தந்தி' நிர்வாக இயக்குநர் திரு பா. சிவந்தி ஆதித்தன் வரவேற்றுப் பேசுகையில், ''எனது தந்தையார் அமரர் சி. பா. ஆதித்தனார் அவர்கள் 45 ஆண்டுகளுக்குமுன்னால் அதாவது 1942-ஆம் ஆண்டில் 'தினத்தந்தி'யைத் தொடங்கினார்கள்.

''உலக யுத்தம் நடந்த அந்த நேரத்தில் பல சோதனைகளைத் தாங்கி, வெற்றி கண்டார்கள். தன் ஆற்றலால் துணிவால் எல்லாவற்றுக்கும் மேலாக, **தமிழ்ப் பற்றால்** - மாபெரும் சாதனை புரிந்தார்கள். தமிழ்ப் பத்திரிகை உலகில் மறுமலர்ச்சியையும், புரட்சியையும் ஏற்படுத்தினார்கள்.

''பத்திரிகைத் தமிழ் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற இலக்கணத்தைப் 'பேச்சு' வழக்கில் உள்ள தமிழைக் கொச்சை நீக்கி எழுத வேண்டும்' என்று மந்திரம் போல் திருக்குறள்போல் வகுத்துக் கொடுத்தார்கள். அதன் காரணமாக, பத்திரிகைத் துறையில் **ஒரு மவுனப் புரட்சியே நடந்தது.**

''இன்று தமிழ்நாட்டில் ''ஏராளமான பத்திரிகைகள் தோன்றி இந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கின்றன என்றால் -லட்சக் கணக்கில் விற்பனை ஆகின்றன என்றால் அதற்கு வழிகாட்டியாக விளங்கியவர் ஆதித்தனார் அவர்களே. அதனால்தான் மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், 'ஆதித்தனார் செயற்கரிய செய்த பெரியார்' என்று பாராட்டினார்கள். **மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் 'ஆதித்தனார் பத்திரிகை உலகின் முடிசூடா மன்னர்' என்று புகழாரம் சூட்டினார்கள்.**

''தினத்தந்தியின் தந்தை'யான ஆதித்தனார் அவர்களுக்கு, சென்னையில் சிலை நிறுவவேண்டும் என 'தினத்தந்தி' 'ராணி' 'மாலைமலர்' ஊழியர்கள் விரும்பி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அனுமதி கோரியபோது, அந்த முயற்சியை அவர்கள் பாராட்டி நல்லாசி வழங்கிய

துடன், சிலை நிறுவுவதற்குச் சிறப்புமிக்க இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தார்கள். இதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும், ஊழியர்கள் சார்பிலும், இங்குக் கூடியிருக்கும் உங்கள் அனைவருடைய சார்பிலும் நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகிறேன்'' என்று கூறினார்.

இந்த விழாவுக்குத் தலைமை தாங்கி சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசியதாவது:

''அமரர் சி. பா. ஆதித்தனாரின் சாதனைகளைச் சில வரிகளில், சில நிமிடங்களில், சில மணி நேரங்களில் சொல்லி முடிக்க முடியாது. நாள் முழுவதும் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

''ஆதித்தனார் 'தந்தி' பத்திரிகையைத் தொடங்கிய காலத்தில் வேறு பத்திரிகைகளும் இருந்தன. அந்நிய நாட்டிடம் அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியாவில் பத்திரிகை நடத்தினால் சிறைக்குப் போகாத ஆசிரியர்கள் இருக்க முடியாது. அந்த அடக்கு முறையை எல்லாம் மாற்றி, புதிய சகாப்தம் படைத்தவர் ஆதித்தனார். 'தினத்தந்தி'யை அவர் ஆரம்பித்ததன் மூலம் நடுத்தர வர்க்கத்தினர் பத்திரிகை படித்து சிறப்புப் பெற்றனர்.

''சமுதாயத்தில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் கூட மற்றவர் படித்துச் சொன்னாலே புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்குப் பத்திரிகையைப் புரிகிற தமிழில்- எளிய தமிழில் அவர் நடத்தினார்

''அதைப்புரிந்துதான் நாமக்கல் கவிஞர் அன்று பாடினார்.' பாரதி தன் பாடலால் புரட்சி செய்தார் அதைத்தான் பத்திரிகையில் ஆதித்தனார் புரட்சி செய்கிறார் என்று. அப்படிப்பட்டவர் சிலையை மாண்புமிகு முதல்வர் இன்று திறந்து வைக்கிறார்.

''முதன் முதலாக தினசரிப் பத்திரிகையில் 'கார்ட்டூன்' (கேலிச் சித்திரம்) போடும் பழக்கத்தை உருவாக்கியவர் ஆதித்தனார். ஒரு கார்ட்டூன் எப்படி இருக்க வேண்டும் என்ற இலக்கணத்தை பின்பற்றினார். 'கார்ட்டூனில் வரையப்பட்டிருப்பவர், அதைப் படிக்கும்போது அவரே சிரிக்க வேண்டும்' என்ற தத்துவத்தைக் கடைப்பிடித்தார்.''

விழாவில் 'முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பேசியதாவது: 'தமிழர்களின்



## தினத்தந்தியின் தந்தை

அமரர் சி. பா. ஆதித்தனார், 1905-ஆம் ஆண்டு செப்டம்பர் 27-ந் தேதி பிறந்தார். நெல்லை மாவட்டத்தின் தென்கிழக்குக் கோடியில் கடற்கரை ஓரம் அமைந்துள்ள காயாமொழி என்ற ஊர், ஆதித்தனாரின் சொந்த ஊர். ஆதித்தனாரின் தந்தை புகழ்பெற்ற வழக்கறிஞரான சிவந்தி ஆதித்தர். தாயார் கனகம் அம்மையார்.

ஸ்ரீவைகுண்டத்தில் உயர்நிலை பள்ளிப் படிப்பு முடிந்ததும், திருச்சி ஜோசப் கல்லூரியில் படிப்பைத் தொடர்ந்தார். கல்லூரியில் படிப்பில் முதன்மையாகத் திகழ்ந்தார். எம்.ஏ. பட்டம் பெற்றார். பிறகு 1928-இல் லண்டனுக்குச் சென்று 'பார்-அட்-லா' படித்து தேறினார். இலண்டனில் படிக்கும்போதே, பத்திரிகைத் துறையில் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது. பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதினார். அதில் கிடைத்த வருவாயைப் படிப்புக்குச் செலவிட்டார்.

இலண்டனில் பாரிஸ்டர் பட்டத்தை பெற்றுக் கொண்டு, 1933-இல் சிங்கப்பூருக்குச் சென்றார். அங்கு அவருக்கும், கோவிந்தம்மாளுக்கும் திருமணம் நடந்தது. பிறகு தமிழ் நாட்டுக்குத் திரும்பினார். பத்திரிகை நடத்த விரும்பினார். அதற்குப் பணம் திரட்டுவதற்காக மீண்டும் சிங்கப்பூருக்குச் சென்று பாரிஸ்டர் தொழில் நடத்தினார்.

பிறகு தமிழ்நாட்டுக்குத் திரும்பி, 1-11-42-இல் மதுரையில் 'தந்தி' நாளிதழைத் தொடங்கினார். பிறகு இதன் பெயர் 'தினத்தந்தி' ஆகியது.

1942-ல் 'தமிழ் ராஜ்ஜியக் கட்சி'யைத் தொடங்கினார். அது பிறகு - 'நாம் தமிழர்' இயக்கமாக ஆகியது. மாத்தூர் உழவர் போராட்டம், படஎரிப்புப்போர், இந்தி எதிர்ப்புப் போர் முதலியவற்றில் ஆதித்தனார் சிறை சென்றார். 1966-இல் , பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு, கோவையில் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டார்.

1947 முதல் 1953 வரை தமிழக மேல்சபை உறுப்பினராக இருந்தார். 1957 முதல் 1962 வரை சட்டசபை உறுப்பினராகப் பணியாற்றினார். 1967-ல் சட்டசபைக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டார். அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் மந்திரிசபை அமைக்கப்பட்டது. ஆதித்தனார் சபாநாயகரானார்.

பின்னர், 1969-இல் கூட்டுறவு அமைச்சரானார். 1976 வரை அமைச்சராக இருந்தார்.



தலைநகரான சென்னை நகரில் வரலாறு காணாத வகையில் திருவிழா நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தமிழுக்குத் தொண்டு செய்த பெரியவருக்குத் தலை நகரில் 5 வீதிகள் சந்திக்கும் இடத்தில் சிலை திறக்கப்படுகிறது.

''ஆதித்தனார், தமிழ் எழுத்து உலகில் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தார். ஆதித்தனார் உள்ளம் மிகப் பெரிய உள்ளம். தமிழுக்குத் தொண்டு செய்து விட்டதோடு நின்றுவிடாமல், உடலை மண்ணுக்கும் உயிரைத் தமிழுக்கும் தந்த பெருமகன் அவர்.

''இந்த விழா, தினத்தந்தி ஊழியர்கள் நடத்தும் விழா அல்ல. தமிழ்நாடும் தமிழ் மக்களும் கூடி நடத்தும் விழா இது!

''தமிழ் உள்ளளவும், தமிழ் இனம் உள்ளளவும் தமிழகம் உள்ளளவும் ஆதித்தனார் புகழ் மங்காது நிலைத்து நிற்கும்''.

திருக்குறள் நெறி பரப்பு மைய இயக்குநர் திருக்குறளார் திருமுனுசாமி அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

''30 ஆண்டுகளுக்கு முன்பு 'நாம் தமிழர்' இயக்கத்தைத் தொடங்கி வைத்து என் அன்பு நண்பராகவும் அரசியல் ஆலோசகராகவும் இருந்த ஆதித்தனார் பற்றிப் பேசுவதைப் பெருமையாகக் கொள்கிறேன். ஆதித்தனார் மனிதப் பிறவியில் ஒரு தத்துவமாக விளங்கினார். இந்த உலகத்தில் பிறப்பது கடினம் இல்லை. பிறப்பை வைத்துப் பெருமை பேசி வாழ முடியாது. உழைப்பை வைத்து வாழ்ந்து காட்ட வேண்டும் என்று வாழ்ந்தார்.

''உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு என்ற தத்துவத்துக்காக வாழ்ந்தார். பல அறிஞர்களின் தத்துவங்களைக் கடைப்பிடித்து வரும் முதல் அமைச்சர் அவர்கள்

## பெருகும் மக்கள் வெள்ளம்

**ஒரு நிமிடத்திற்கு 150 குழந்தைகள் இந்த உலகில் பிறக்கின்றன என்று ஐ.நா.வின் அறிக்கை தெரிவித்துள்ளது.**

**நாளொன்றுக்கு 2 இலட்சத்து 20 ஆயிரம் குழந்தைகளும், ஆண்டொன்றுக்கு 8 கோடி குழந்தைகளும் உலகில் பிறக்கின்றன.**

**நிலைமை இப்படியே நீடித்தால் 100 ஆண்டுகளில் 1000 கோடியாக மக்கள் தொகை வளர்ந்து விடும். 1986-ஆம் ஆண்டு ஜூன் 11-ஆம் நாள் உலகின் மக்கள் தொகை 500 கோடியாக உயர்ந்துள்ளது என்றும், 500வது கோடி மனிதன் பிறந்த நாளை 1986 ஜூலை 11-ஆம் நாளன்று ஐ.நா. சபை கொண்டாடிபது என்றும் அவ்வறிக்கை கூறுகிறது.**

இன்று ஆதித்தனாரது சிலையைத் திறந்து வைத்துள்ளார். திருவள்ளுவர் தத்துவத்துக்காக வாழ்ந்தவர். வடலூர் வள்ளலார் ஏழைகளின் பசிக்கும் பட்டினிக்கும் உணவு அளிக்க வேண்டும் என்ற தத்துவத்தைக் கொண்டவர். நமது முதல் அமைச்சர் சத்துணவுத் திட்டம் மூலம் அதை நிறைவேற்றி வருகிறார். அவர் கையால் சிலை திறக்கப்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது.

''10 இலட்சம் என்பதை எண்ணால் எழுதினால் எளியவர்களுக்குப் புரியாது என்பதற்காக எழுத்தால் எழுதி வைத்தார். ஆதித்தனார் சிலையைத் திறந்து வைப்பது மிகவும் முக்கியமான செயல் ஆகும்.''

திரு குமரி அனந்தன், எம்.எல்.ஏ அவர்கள் பேசுகையில் ''நாக்கு நதியில் நீந்தும் மொழி'' என்று பாராட்டிப் பேசினார். பத்திரிகையைத் தொடங்கும் நேரத்தில் எந்த மொழியில் எழுதுவது என்று வரும் போது நாட்டு மக்களின் நாக்கு நதியில நீந்தி விளையாடும் மொழி எதுவோ அப்படிப்பட்ட 'காயா மொழி'யில் எழுத வேண்டும் என்றார் ஆதித்தனார்.

''பத்திரிகை நடத்துவதில் மட்டுமல்ல, பத்திரிகைக் காகிதம் தயாரிப்பதிலும் புரட்சி செய்தவர் ஆதித்தனார். ஒன்றுக்கும் உதவாத முள் செடியில் இருந்து வெற்றிகரமாகக் காகிதம் தயாரித்த ஆராய்ச்சியாளர்''.

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில் கூறியதாவது: ''அமரர் ஆதித்தனார் அவர்கள் சட்டப் பேரவைத் தலைவராக இருந்தபோது, துணைக் கேள்விகளுககுவாய்ப்புத் தர வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினராக இருந்து வாய்ப்புக் கேட்டவன் நான. கடலில் கரை சேரத் தத்தளிக்கும் கப்பலுக்குக் **கலங்கரை விளக்கம்** தேவை. அது போல தமிழகத்திலும் தமிழர்கள் கரை சேரக் கலங்கரை விளக்கமாக எதுதேவை என்று உணர்ந்து தனது பத்திரிகையின் நிறுவனச் சின்னத்தை உருவாக்கினார்.''

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு பி.எச். பாண்டியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''ஒரு முன்னாள் சபாநாயகர் சிலைத் திறப்பு விழாவில், சபாநாயகர் என்ற முறையில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

''உலகத் தமிழ் மாநாட்டை நடத்திய, தமிழ்ச்சங்கம் உருவாக்கிய, தமிழ்ப் பல்கலைக் கழகம் கண்ட தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவரின் திருக்கரங்களால், தமிழுக்காகப் பாடுபட்ட அமரர் ஆதித்தனாரின் சிலையைத் திறந்து வைப்பது, உண்மையிலேயே தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் கிடைத்த சிறப்பாகும்.


''காலையில் சட்டசபை கூடியதும், திருக்குறளைப் படித்துவிட்டுப் பேரவை நிகழ்ச்சிகளைத் தொடங்கினார் ஆதித்தனார்.

''சட்டப் பேரவை விதிகளை ஆங்கிலத்தில் இருந்து பெயராக்கம் செய்து, தமிழைச் சட்டசபையில் நுழைத்தவர் ஆதித்தனார். அவர் எடுத்த சூளுரையை எல்லோரும் நிறைவேற்றுவோம்.''

—**நமது செய்தியாளர்**



# முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. சரண்சிங் மறைவு



மாண்புமிகு முன்னாள் இந்தியப் பிரதமர் திரு சரண்சிங் அவர்கள், தமது 85வது வயதில் மறைவெய்தினார். சுமார் ஆறு மாதத்திற்கு முன்னர் பக்கவாத நோயினால் அவதியுற்ற திரு. சரண்சிங், அமெரிக்கா சென்று சிகிச்சை பெற்றுத் திரும்பினார். முழுவதுமாகக் குணமடையவில்லை; அதனால் வீட்டில் நடமாட்டமின்றிப் படுக்கையிலிருந்து வந்தார். 29.5.'87 அதிகாலையில் திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டது. உடனே டாக்டர்கள் வரவழைக்கப்பட்டார்கள். டாக்டர்களின் சிகிச்சை பலனளிக்காமல், அதிகாலை 2.35 மணிக்கு அவரது உயிர் பிரிந்தது.

அவரது உடல் 31.5.'87 அன்று அரசு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு டில்லி ராஜ்கட் வளாகத்தில் எரியூட்டப்பட்டது.

சவுத்ரி சாகிப்'' என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட சரண்சிங் உத்தரப் பிரதேசத்தில் மீரட் மாவட்டத்தில் நூர்பூர் கிராமத்தில் 1902-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பிறந்தார்.

1923-ல் விஞ்ஞானப் பாடத்தில் பட்டதாரியான அவர் 1925-ல் ஆக்ரா பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். பிறகு சட்டம் பயின்ற அவர் வழக்கறிஞராகத் தொழில் நடத்தினார்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுப் பலமுறை சிறை சென்றார்.

## சரண்சிங்கிற்கு முதல்வர் புகழ்மாலை

முன்னாள் பிரதமர் சரண்சிங் மறைவு குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளதாவது:

''முன்னாள் பிரதமரும் மூத்த அரசியல்வாதிகளில் ஒருவருமான சரண்சிங் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைந்தேன். தேச விடுதலைக்காகவும், கிராமப்புற மக்களுக்காகவும், பிற்பட்டோருக்காகவும் தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர் அவர். தனக்கென்று ஏற்றுக் கொண்ட கொள்கைகளில் உறுதியாக நின்றவர்.

''அவரது மறைவால் இந்தியப் பொது வாழ்வு ஒரு மூத்த தலைவரை இழந்து நிற்கிறது .

''சரண்சிங்கின் துணைவியாருக்கும், அவருடைய புதல்வருக்கும், மற்றவர்களுக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்''.

1937-ல் முதல் முதல் உத்தரப்பிரதேச சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் தொடர்ந்து 1946, 1952, 1962, 1967 தேர்தல்களில் வெற்றி பெற்றார்.

1946-ஆம் ஆண்டு கோவிந்த வல்லபபந்த் அமைச்சரவையில் துணை அமைச்சரான அவர், பிறகு தொடர்ந்து காபினட் தகுதி பெற்ற அமைச்சராக விளங்கினார். பின்னர் முதல்வரானார்.

1977-ல் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் அப்போது நாட்டில் முதன் முறையாக மத்திய அரசு பதவி ஏற்ற காங்கிரசல்லாத அமைச்சரவையின் உள்துறை அமைச்சரானார்.

1979 ஜூலை 28-ஆம் தேதி நாட்டின் ஐந்தாவது பிரதமராகப் பதவி ஏற்றார். ஒன்பது பேர் கொண்ட கூட்டணி அமைச்சரவை டெல்லியில் பதவிக்கு வந்தது.


எளிய வாழ்க்கைக்குப் பெயர் போன அவர் ஏராளமான நூல்களை எழுதியிருக்கிறார்.

உத்தரப் பிரதேசத்திலும் வடநாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் செல்வாக்கு மிக்க தலைவராக விளங்கியவர் அவர்.

அவரது துணைவியார் காயத்திரி தேவியும் மகன் அஜீத் சிங்கும் தீவிர அரசியல்வாதிகளாவர்.

சரண்சிங்கின் தந்தை பெயர் மீர்சிங்— தாயின் பெயர் நேத்ரா கவுர்.





# வீடுகள் கட்டித் தந்து

## வசதி பெருக்கும் அரசு

உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றும் ஒரு மனிதனின் மிக அத்தியாவசியத் தேவைகளாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவரவர் திறனுக்கேற்ப குடியிருப்புகளைஅமைத்து கொடுக்க வேண்டுமென்பது அரசின் நோக்கமாகும். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் திரைப்படத்தில் நடித்துக் கொண்டிருந்த காலத்திலேயே 'ஆளுக்கு ஒரு வீடு கட்டுவோம்' என்று அறிவித்தவர். அந்த நோக்கத்தை நிறைவேற்றும் விதத்தில் குடிசை வாழ் மக்கள், பொருளாதாரத்தில் நலிவுற்றவர்கள், குறைந்த வருமானமுள்ளவர்கள், மத்திய தர வருமானமுள்ளவர்கள், உயர் வருமானம் உடையவர்கள், இப்படி அனைவருக்கும் வீடுகள், தவணை முறையிலும், உடனடி விற்பனைக்கும் கட்டித் தரப்படுகின்றன. மேம்படுத்தப்பட்ட மனைகளை ஒதுக்கீடு செய்தல், குடிசை வாழ் மக்களுக்கு அவர்கள் வாழும் இடங்களில் பட்டாக்கள் தந்து கடன் வசதி அளித்தல், நிலம் உள்ளவர்கள் தாங்களே வீடு கட்டிக் கொள்ளக் கடன் உதவி அளித்தல், இப்படிப்பட்ட பணிகளை வீட்டுவசதித் துறை, இந்தத் துறையின் கீழ் இயங்கும் வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியவற்றின் வாயிலாகச் செயல்படுத்தி வருகிறது. மேலும், தாட்கோ, ஆசிரியர் வீட்டு வசதிக் கழகம், காவலர்கள் வீட்டு வசதிக் கழகம், R.L.E.G.P., N.R.E.P. அரசு ஊழியர்களுக்கு அரசு கடன், மீனவர் மற்றும் நெசவாளர் குடியிருப்புகள் இப்படிப் பல பிரிவுகளின் கீழ் வீடு கட்டும் பணிகள் நடைபெறுகின்றன.

வீடுகள் கட்டப்படுவது இரண்டு வகையாகும். ஒன்று அரசு ஊழியர்களுக்கு மாவட்டம் மற்றும் கோட்ட வளர்ச்சித் தலைநகரங்களில் வாடகைக் குடியிருப்புக் கட்டித் தருதல் மற்றொன்று அரசு ஊழியர்கள் வீடு கட்டிக் கொள்ள அரசு கடன் வழங்குதல், இரண்டாவது பொது மக்களுக்கு வாடகை மற்றும் விலைக்கு வீடுகள் கட்டித் தருதல்.

வீடுகள் கட்டித் தருவதற்கு பெருமளவில் மாநிலங்களுக்கு கடன் தரும் நிறுவனமாக மத்திய அரசுடைய 'அட்கோ' (HUDCO) நிறுவனம் இருக்கிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது கடந்த ஆண்டு (1986-87)ல் 46 கோடி ரூபாயை கடனாகப் பெற்று, அனைத்திந்திய அளவில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் வீடு கட்டுகிற பணி அதிகமாக நடக்கிறது என்பதற்கு இது எடுத்துக் காட்டாகும்.

'முதலமைச்சரின் பெருமளவு வீடுகட்டும் திட்டத்தின்' கீழ் ஆண்டுக்கு 10 இலட்சம் வீடுகள் வீதம் மூன்று ஆண்டுகளில் 30 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படுமென்று சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. 1987-ஆம்ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் வீடுவசதி ஆண்டாக 'International year of Shelter for Homeless' என கொண்டாடப்படுகிறது. ஆனால் தொலைநோக்கு பார்வை கொண்ட புரட்சித் தலைவர், சென்ற ஆண்டே பெருமளவில் வீடுகள் கட்டும் திட்டத்தை அறிவித்தார். இத்திட்டம் அறிவிக்கப்பட்டவுடன் 20 கோடி ரூபாயை உடனடியாக தமிழக அரசு ஒதுக்கியது. பாரதப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் மைய அரசின் 1987-ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூபாய் 100 கோடியில் ஒரு தேசிய வீட்டுவசதி வங்கி நிறுவப்படும் என்றும், அந்த வங்கி மாநிலங்களில் மண்டல மற்றும் வட்டாரவீட்டு வசதிச் சங்கங்களுக்கு உதவியளிக்குமென்றும் அறிவித்துள்ளது வரவேற்கத் தக்கதாகும். இவ்வங்கியின் துணையோடும் முதலமைச்சரின் பெருமளவு வீடு கட்டும் திட்டத்தை வேகமாகச் செயல்படுத்தமுடியுமென நம்புகிறேன். R.L.E.G.P., N.R.E.P ஆகிய திட்டங்களுக்குதரப்படும் பணம் நேரடியாக வீடு கட்டும் பணிக்கு

பயன்படுத்தப்படாமல், கட்டடத்திறகு வேண்டிய பொருட்களைத் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பயன்படுத்தப்படும். இதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் தனியாக நிறுவப்படும். ஓடுகள், செங்கல், சுண்ணாம்பு ஆகியவை இச்சங்கங்களினால் தயாரிக்கப்படும் R.L.E.G.P. and N.R.E.P. ஆகிய திட்டங்களுக்கு மைய அரசு ஒதுக்கீடு செய்யும் நிதியினை மேற்சொன்ன முறையில் முதலீடு செய்ய மைய அரசின் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. 'இந்திரா ஆவாஸ் யோசனா' திட்டத்தில் வீடு கட்டுவதற்கான நிதியை மூலதனமாக்கி, நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்று கிராமப்புற வீட்டுவசதித் திட்டங்கள் மேற்கொள்ளலாமென்ற மைய அரசின் கருத்தும், மாநில அரசின் கருத்தோடு ஒத்திருப்பதால், மைய அரசு மாநில அரசின் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்குமென எதிர் பார்க்கிறோம். R. L. E. G. P., N. R. E. P. போன்றவற்றிற்குத் தரப்படும் சுமார் 70 கோடி ரூபாயை அடிப்படை மூலதனமாக்கி, தேசிய வங்கிகள், பிற நிதி நிறுவனங்கள் ஆகியவற்றில் சுமார் 210 கோடி ரூபாய் கடன் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் புதிய வீடுகட்டுதல், தற்போதுள்ள வீடுகளைப் புதுப்பித்தல் என இருவகையாகும். கிராமப் புறங்களில் புதிதாகக் கட்டுவது 4 இலட்சம் வீடுகள், புதுப்பிக்க இருப்பவை 3 இலட்சம் வீடுகள். நகர்ப்புறங்களில் புதுப் பிக்க இருப்பவை 3 இலட்சம் வீடுகள் ஆக 10 இலட்சம் வீடுகள் ஒரு ஆண்டில் புதுப் பிக்கவும், கட்டவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளன. இதற்கு ஆண்டுக்கு சுமார் 320 கோடி ரூபாய் செலவாகும். இத்திட்டத்தில் பயனீட்டாளர்களின் சொந்த உழைப்பும் பெருமளவில் பயன்படுத்தப்படும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அறிவித்தபடி, மூன்று ஆண்டுகளில் நிச்சயமாக 30 இலட்சம் வீடுகள் கட்டித் தர அரசு தீவிரமாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. 1978-ல் வீட்டு வசதி வாரியத்தின் மூலதன செலவு ரூபாய் 6 கோடி யாக இருந்தது. 1987-88-ல் ரூபாய் 70 கோடியாக உயர்ந்துள்ளது. இது இந்த வாரி யத்தின் வளர்ச்சியைக் காட்டுகிறது. அட் கோவிடம் 1961-77 வரை பெற்ற கடன் ரூபாய் 27 கோடி. 1977-87 வரை பெற்ற கடன் ரூபாய் 120 கோடி. அட்கோவிடம் சென்ற ஆண்டில் (1986-87) ரூபாய் 3 கோடி கடன் பெற்றிருக்கிறது. மொத்தம் 1961 முதல் 1977 வரை 16 ஆண்டுகளில் வாரியம் கட்டிய வீடுகள் சுமார் 43,000. 1977 முதல் 1987 வரை 10 ஆண்டுகளில் கட்டிய வீடுகள் சுமார் 1,05,000. முன்பு நடந்ததை விட இரண்டரை மடங்கு வீடு கட்டுகிற பணி புரட்சித் தலைவர் அரசு பொறுப்பேற்ற பின் நடந்து வருகிறது. குறிப்பாக நலிவுற்ற மற்றும் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீடு கட்டித் தருவதில் அதிக அக்கறை செலுத்தப்படுகிறது. கட்டிய வீடுகளோடு வீட்டு மனைகளையும் வாரியம் ஒதுக்கீடு செய்கிறது. 1961 முதல் 1977 முடிய 16 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட மனைகள் சுமார் 17,000. 1977 முதல் 1987 முடிய 10 ஆண்டு களில் ஒதுக்கப்பட்ட மனைகள் சுமார் 50,000 இவ்வாரியத்தில் 1961-77 வரை சுமார் 95 கோடி ரூபாய்க்கு பணிகள் நடந்துள்ளன. 1977-87-ல் சுமார் 313 கோடி ரூபாய்க்குப் பணிகள் நடைபெற்றுள்ளன.


வீட்டுவசதி வாரியத்தால், ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகளை வைத்திருப்போர் வீடு கட்டிக் கொள்ள கடன் தரும் திட்டம் இந்த ஆண்டு முதல் அமுல்படுத்தப்படும். 'அட்கோவின்' உதவியோடு முதல் கட்டமாக திருச்சி, கோவை, மதுரை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலும், சென்னையில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கும் கடன் வழங்கும் திட்டம் சுமார் ரூ. 7 கோடி யில் அமுல் நடத்தப்படும். சென்னையில் M.I.G., H.I.G. நில உரிமையாளர்களுக்கும் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வெளிநாட்டில் வாழும் இந்தியர்களுக்கு வீடுகள் கட்டித்தர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பத்திரி கையாளர்களுக்கு முதல் கட்டமாக சென்னை யில் 100 வீடுகள் தவணை விலைக்கு இந்த ஆண்டு கட்டித் தர நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார்கள். குடிசைமாற்று வாரி யம், சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள நலிந்த பிரிவினரின் துயர் துடைக்க அடுக்கு மாடி வீடுகள், குடிசைகளை மேம்படுத்தித் தருதல், வாழும் இடத்தை சொந்தமாக்கி வீடு கட்டிக் கொள்ள கடன் தருதல், இப்படிப் பட்ட பணிகளைச் செய்து வருகிறது.

1983-84-ஆம் ஆண்டுவரை வாரியப் பணிகள் சென்னையில் மட்டும் நடைபெற்றன.





புரட்சித் தலைவர் வாரியப்பணிகளை இப்போது 46 நகரங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளார். கூரையை மாற்றி ஓடுகள் போட அல்லது மண் சுவரை மாற்றிக் கல் சுவரைக் கட்டிக் கொள்ள ரூபாய் 1,500 மானியமாக வழங்கப்படுகிறது. இவற்றைப் பெற மாத வருமானம் ரூபாய் 300-க்குள் இருக்க வேண்டும். மாத வருமானம் ரூபாய் 300-க்கு மேல் இருந்தால் அபிவிருத்தி செய்ய ரூபாய் 3,000 கடனாக வழங்கப்படுகிறது. சென்னையில் சுமார் 1,50,000 வீடுகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பயன் பெற்றுள்ளன. அட்கோவின் கடன் உதவியோடும், அரசின் நிதி ஒதுக்கீட்டோடும் பணிகள் நடக்கின்றன. தற்போது மேலும் 15 நகரங்களுக்கும் வாரியப் பணிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரிவுபடுத்தியுள்ளார்கள். மேலும் படிப்படியாக மற்ற நகரங்களுக்கும் குடிசை மாற்று வாரியப் பணிகள் விரிவாக்கம் செய்யப்படும். சுமார் 8000 குடியிருப்புகள் வாடகை வீடாக இருந்தவை சொந்த வீடாக தவணை முறையில் மாற்றித் தரப்பட்டுள்ளன.

104 பிரதம கிராம கூட்டுறவுச் சங்கங்கள் வட்ட மற்றும் கோட்ட அளவில் இயங்குகின்றன. தமிழ்நாட்டில் மொத்த தாலுக்காக்கள் 168. எனவே மீதமுள்ள 64 வட்டங்களில் கிராம கூட்டுறவுக் சங்கங்கள் ஆரம்பிக்கப்படும். ரூபாய் 700-க்கு உட்பட்ட மாத வருமானம் உள்ளவர்களுக்கு ரூபாய் 6,000 கடனாக வழங்கப்படுகிறது. ரூபாய் 700-க்கு மேல் மாத வருமானம் உள்ளவர்களுக்கும் வீடு கட்ட கடன் வழங்க தாலுக்கா அளவிலான சங்கங்களின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். கிராமப்புற வீட்டுவசதி திட்டத்திற்காக கிராமப்புறச் சங்கங்களுக்காகத் தனியாக ஒரு தலைமை நிறுவனம் ஆரம்பிக்க அரசு பரிசீலித்து வருகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 2,05,000 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. இப்போது 6,000 ரூபாய் கடனை ரூபாய் 10,000 ஆக உயர்த்த அரசு பரிசீலித்து வருகிறது.

தற்போது மொத்தம் 406 பிரதம நகர்ப்புற கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் உள்ளன. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் மாநில தலைமைச் சங்கமாக இருந்து நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றுத் தருகிறது. ரூபாய் 10,000 முதல் ரூ. 80,000 வரை கடன் வழங்கப்படுகிறது. இச்சங்கம் 31-12-1986 வரை சுமார் ரூ. 200 கோடி வரை கடனாக வழங்கியுள்ளது. சுமார் 80,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. தற்போது 12 வகையான சங்கங்கள் இயங்கி வருகின்றன. அவற்றை பொது மக்களின் நலன் கருதி 4 அல்லது 5 வகையான சங்கங்களாகக் குறைக்க, சீரமைக்க அரசு பரிசீலித்து வருகிறது. இவ்வாறு மாண்புமிகு முதல்வர்புரட்சி தலைவர் தலைமையில் நலிவுற்ற பிரிவினருக்கும் முன்னுரிமை தந்து அனைத்துப் பிரிவினருக்கும் வீடுகள் கட்டித்தரும் பணிகள் தமிழகத்தில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

**[மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் சென்னை வானொலியில் ''வளரும் தமிழ்நாடு'' நிகழ்ச்சியில் 1.6.87 அன்று ஆற்றிய உரை]**

# சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு

**துரை. சுந்தரேசன், இ.ஆ.ப.**
**ஆணையர்-செயலர்,**
**சுற்றுப்புறச் சூழல் துறை.**

சுற்றுப்புறச் சூழலின் தன்மையைப் பாதுகாப்பதில் அவசியத்தின்பால் மனிதனின் கவனத்தை ஈர்க்கும் வகையில், ஜூன் திங்கள் ஐந்தாம் நாள் சுற்றுப்புறச் சூழல் நாளாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. மனித மற்றும் உயிரினங்களின் நல்வாழ்வு சுற்றுப்புறச் சூழலைச்சார்ந்துள்ளது.

விஞ்ஞான முன்னேற்றத்தினாலும், தொழில் நுட்ப வளர்ச்சியினாலும், தனது தேவைகளையும் வசதிகளையும் பூர்த்தி செய்யும் வகையில் சுற்றுப்புறச் சூழலை மாற்றும் சக்தியை மனிதன் பெற்றுள்ளான்.

சுற்றுப்புறச் சூழல், ஒன்றோடொன்று தொடர்பு கொண்ட உயிர்வாழ் மற்றும் உயிரற்ற சுற்றுப்புறங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பல்வேறு உயிரகத் தொகுப்புகளிடையே ஒரு சமநிலையைப் பேணவே இயற்கை முயற்சிக்கிறது. இயற்கையில் ஊடுருவும் மனிதனின் பல்வேறு செயல்களினால், இத்தகைய நிலை தொடர முடிவதில்லை.

பெருகிவரும் மக்கட்தொகை எவ்விடமும் பரந்து வரும் தொழிற்சாலைகள், தீவிர மற்றும் விரிவான விவசாய முறைகள் வனவளம் அழிதல், வரன்முறையற்ற நகர்ப்புறமாதல் ஆகியவை சுற்றுப்புறச் சூழல் பிரச்சினையின் ஆதாரங்களாகும்.

நீர்நிலைகளில் வெளியிடப்படும் தொழிலக மாசுப் பொருட்கள், அவற்றின் பௌதிக, இரசாயன மற்றும் உயிரகத்தன்மையை மாற்றிவிடுகின்றன. வாழ்வின் உயிர்நாடியான பிராண வாயு குறைந்து விடுகிறது. நீர் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன. செயல்முறையில் பயன்படுத்தப்பட்ட மற்றும் உற்பத்திப் பொருள்களிலுள்ள பல்வேறு வகையான இரசாயன மூலப் பொருட்களும், நீர்நிலைகளை அடைகின்றன. இரசாயனப் பொருட்கள்.பெட்ரோலிய இரசாயனம்,உலோகத் தொழிற்சாலை, பூச்சிக் கொல்லிகளைக் கொல்லி, தோல் பதனிடும் தொழிற்சாலைகள், துணி ஆலைகள் முதலிய தொழிற்சாலைகளிருந்து வெளிவருகின்றன. நீர், வாழ்க்கைக்கு இன்றியமையாதது. ஆனால், உயிர் காக்கும் நீர் மாசுபட்டால் அது விஷமாக மாறுகிறது.

இந்த கிரகத்திலுள்ள உயிர்த் தொகுப்புகளுக்கு நீரைப்போன்று இன்றியமையாதது காற்றுமாகும். இக்காற்று மண்டலத்தில் உயிர் காக்கும் பிராண வாயு (20%), நைட்ரஜன் (78%), கரியமிலவாயு (0.29%), மற்றும் மீதியுள்ள இரண்டு விழுக்காடு அரிய மூலகங்களாகும். தாவர, மனித, விலங்கினங்களின் உயிர் காக்கும் வகையில், ஒரு சமநிலையை உருவாக்கிச் செயல்படுகிறது. இருந்தபோதிலும், காற்று மண்டலத்தின் ஏற்கும் சக்திக்கு மீறிய வகையில் மனிதன் செயல்படும்போது, இந்த நிலைமை மாறுகிறது.

மனித இனத்தின் பல்வேறு செயல்கள், மாசுப் பொருட்களைத் தோற்றுவித்து, காற்று மண்டலத்தில் வெளியிடுகின்றன. வாயுக்கள், தூசி, புகை, மூடுபனி ஆகியவை சில வகையான மாசுப் பொருட்களாகும். எண்ணெய், கரி, விறகு, பெட்ரோலியப் பொருட்கள் ஆகியவற்றை எரிபொருட்ளாகப் பயன்படுத்தும்போது, கந்தக, நைட்ரஜன், கரியமில ஆக்ஸைடுகளும், ஹைட்ரோகார்பன்களும் உண்டாகின்றன.

சுரங்கப்பணிகள், மூலப்பொருளான இரசாயனங்கள், கனிமங்கள், தானியம், உயிர்க்கொல்லிகள் ஆகியவற்றைச் சேமித்தல் மற்றும் கையாளுதல், ஆகியவை தூசியைத் தோற்றுவிக்கின்றன. ஒரு சில செய்முறைகள், இன்சுவை இரசாயனங்கள் ஃபினால் கூட்டுப்பொருட்கள் போன்ற கரைப்பான்களை வெளியேற்றுகின்றன.

வாயுக் கழிவுகள் மற்றும் தூசியை, மனித மற்றும் விலங்கினங்கள் உட்கொள்ளும் போது பல்வேறு வகையான நலக்கேடுகளை ஏற்படுத்துகின்றன. செம்பு துத்தநாகம், காரீயம், பாதரசம் போன்ற ஒப்புச் செறிவெணமிக்க உலோகங்கள், தாவர வளர்ச்சி மற்றும் நுண்ணுயிர் ஆகியவற்றைப் பாதிக்கின்றன. அரிக்கும் தன்மை வாய்ந்த உப்புகளான, குளோரைடு, ஃப்ளூரைடு, சல்பேடுகள் முதலியவை கட்டடத்திற்கான பொருட்களை பாதிக்கும்.

மக்கட்தொகைப் பெருக்கமும், கிராமத்திலிருந்து நகர்ப்புறத்திற்குக் குடியேற்றமும், அத்தியாவசியத் தேவைகளான குடிநீர், வடிகால் வசதிகள் ,வீட்டுவசதி ஆகிய இன்றியமையாத தேவைகளைப் பாதிக்கின்றன.

பெருகிவரும் மக்கட்தொகையின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய, இரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தி, விரிவான மற்றும் தீவிர விவசாய முறைகள் கையாளப்பட்டுள்ளன. அளவிற்கு அதிகமாகப் பயன்படுத்துவதால், எஞ்சிய இரசாயனங்கள், மழைக் காலங்களில் வடிகால் மூலம் நீர்நிலைகளை அடைகின்றன. எஞ்சிய பூச்சிக் கொல்லி, உணவுச் சங்கிலி மூலம் பறவையினத்தைப் பாதித்துள்ளது தெரியவந்துள்ளது. எரிபொருளுக்காக மற்றும் தொழிற்சாலைகளின் மூலப்பொருட்களுக்காகவும் வனவளம் அழிக்கப்படுகிறது. காடுகள் அழிவதால், மண்ணரிப்பு, நீர்நிலைகள் வண்டல் படிதல், அரிய விலங்கினங்கள் மறைதல் ஆகியவை நிகழ்கின்றன.

மனித நல்வாழ்விற்கு ஏற்பட்டுள்ள இடையூறு காரணமாக, சுற்றுப்புறச் சூழல் தன்மையைப் பாதுகாபபது பற்றிய உணர்வு பெருகி வருகிறது. சுற்றுப்புறச் சூழலில் ஏற்பட்டுள்ள பாதிப்பு பற்றி அறிநது, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க, அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

நீர் மற்றும் காற்று மாசினைக் கட்டுப்படுத்த, மைய அரசு, 1974ஆம் ஆண்டு நீர் (மாசு

தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தையும், 1981ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தையும் இயற்றியுள்ளது. தமிழக அரசு இச் சட்டங்களை ஏற்றுக்கொண்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இச்சட்டங்களின் விதிகளைச் செயல்படுத்துகிறது. நீர் மாசு கட்டுப்பாடு சட்டத்தில் விதிகளின்படி, வடிகால் கழிவு நீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரை நீரோடை, கிணறு, வடிகால் அல்லது நிலத்தில் வெளியேற்ற, வாரியத்தின் அனுமதி பெறவேண்டும்.

காற்று மாசுக் கட்டுப்பாடு, சட்டப்படி ,மாநிலம் முழுவதும் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியாக அரசு அறிவித்துள்ளது. இச் சட்டப்படி, சட்டத்தின் அட்டவணையில் கூறப்பட்டுள்ள தொழிற்சாலைக்காக ஏதேனும் தொழிலகத்தைக் காற்று மாசுக் கட்டுப்பாட்டுப் பகுதியில் செயல்படுத்த வாரியத்தின் அனுமதி பெறவேண்டும்.

சுற்றுப்புறச் சூழலின் தன்மையைப் பாதுகாப்பதில், தொழிற்சாலைகள் ஓர் முக்கிய அங்கம் வகிக்கின்றன. கழிவு நீரை வெளியேற்றுமுன், தொழிற்சாலைகள், கழிவுநீரைச் சுத்திகரித்து வெளியேற்ற வேண்டும்.

மாநிலத்தின் பல்வேறு வகையான தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றுள் சில, எரிசாராயம், தோல் பதனிடும் தொழிற்சாலைகள், துணியாலைகள், காகித ஆலை[illegible], உரத் தொழிற்சாலைகள், பால் பதனிடும் தொழிற்சாலை, இரசாயனம் பெட்ரோலியம் எண்ணெய் சுத்திகரிப்பாலை, சிமெண்ட், அனல் மின் நிலையங்கள் ஆகியவையாகும். இத்தொழிற்சாலைகள் வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்குட்பட்டு சுத்திகரிப்பாலை நிறுவும்படியும், காற்று மாசுக் கட்டுப்பாட்டு முறைகளை கையாளும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

மாநிலத்திலுள்ள நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்காக,அரசு 6.2.84 சுற்றுப்புறத் தூய்மைக் க[illegible]ப்பாட்டுத் துறை. அரசு ஆணை எண்.1ல் நீரை அதிக அளவில் மாசுபடுத்தும் எந்த தொழிற்சாலையையும், ஆறுகள், ஓடைகள், அணைக்கட்டுகள் முதலியவற்றின் கரையிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்திற்குள் அமைக்கக்கூடாது என்று ஆணையிட்டுள்ளது.

சென்னையிலுள்ள, கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஒட்டேரி ஆகிய நீர்நிலைகளின் தன்மை பற்றியும் அரசு கவனம் செலுத்தி வருகிறது. இயற்கை மறறும் பல்வேறு நடவடிக்கைகளால், இந்நீர் நிலைகளின் தன்மை பாதிக்கப்பட்டுள்ளது. இந்நீர்நிலைகளின் சுற்றுப்புறத் தூய்மையை மேம்படுத்த, தலைமைச் செயலரின் தலைமையில் ஒரு குழுவை அரசு ஏற்படுத்தியுள்ளது. கருத்துரு தயாரிக்கப்பட்டு அரசின் பரிசிலனையில் உள்ளது.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பில் பல்முனை அணுகுமுறை தேவை. சுற்றுப்புறச் சூழலை முழுமையாகக் கருத வேண்டும் சுற்றுப்புறச் சூழலின் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்த அரசு, சுற்றுப்புறத் தூய்மைக் கட்டுப்பாட்டு துறையை ஏற்படுத்தியுள்ளது.

பிற்காலச் சந்ததியினரின் நல்வாழ்விற்காக, வளர்ச்சித்திட்டங்களினால் சுற்றுப்புறச் சூழலில் ஏற்படும் பாதிப்பு பற்றி, பணிகளின் திட்ட காலத்திலேயே பரிசிலனை செய்ய வேண்டும். அரசு, தமிழ்நாடு மாநில சுற்றுப்புறச் சூழல் நலக்குழுவை, ஓர் உயர் மட்ட ஆலோசனைக் குழுவாக அமைத்தது.

இக்குழு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்டுள்ளது. ஆணையர் மற்றும் செயல், சுறறுப்புறத் தூய்மைக் கட்டுப்பாட்டுத்துறை, இதன் உறுப்பினர் - செயலாராவார். இக்குழுவின், சுற்றுப்புறச் சூழல் தொடர்பு கொண்டு பல்வேறு துறையைச் சார்ந்தவர்கள் உறுப்பினராக உள்ளனர். ரூ.50 லட்சம் மதிப்பீட்டிற்கு மேலுள்ள வளர்ச்சிப் பணிகளைத் திட்ட காலத்திலேயே சுற்றுப்புறச் சூழல் சம்பந்தமாக இக்குழு பரிசிலனை செய்கிறது.

தமிழ்நாடு மாநில சுற்றுப்புறச் சூழல் நலக்குழு இதுவரை பதிமூன்று முறை கூடி, அனல் மின் நிலையங்கள், அணைக்கட்டுகள்,திரவ எரிபொருள் ஏவுகனைத் திட்டம் முதலிய வளர்ச்சிப் பணிகளுக்கு அனுமதி அளித்துள்ளது.

கடற்கரைகளின் அழகினைப் பாதுகாப்பதிலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது. தலைமைச் செயலரைத் தலைவராகவும், ஆணையர் மற்றும் செயலரை உறுப்பினர் செயலராகவும் கொண்டு, கடற்கரைப் பாதுகாப்புக் குழுவினை அரசு அமைத்துள்ளது. கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தூரத்திற்குட்பட்ட வளர்ச்சிப் பணிகள் இக்குழுவின் அனுமதியைப் பெற வேண்டும்.

மக்களின் நல்வாழ்விற்குகந்த தாவர, விலங்கினங்களின் வாழ்வினைக் காக்கும் உயிர்த்தொகுப்புகளின் சமநிலையை உறுதி செய்யும், சுற்றுப்புறச் சூழலைப் பேணுவதே தமிழக அரசின் நோக்கமாகும்.

## சாண எரிவாயு புகையில்லா அடுப்புகள் அமைப்பதில் தமிழகம் சாதனை

புகையில்லாத அடுப்பு அமைப்பதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது. 1986ஆம் ஆண்டு 85 ஆயிரம் என்று குறியளவு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் தமிழ்நாடு ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட புகைபடியா அடுப்புகளை அமைத்து, சாதனை புரிந்துள்ளது.

இதே போல் சாண எரிவாயு அமைப்பதில் நிர்ணயிக்கப்பட்டிருந்த குறியீட்டைவிடக் கூடுதலாக 5 ஆயிரம் சாண எரிவாயு அடுப்புகள் அமைத்து, தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது.




R K SWAMY/NIA/2977 TM

முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

(ஜெனரல் இன்ஷூரென்ஸ் கார்ப்பொரேஷன் ஆ:ப் இந்தியாவின் துணை நிறுவனம்)

**இன்சூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**

# தமிழரசு

1-7-1987 இதழ்

# தமிழ்நாடு அரசின்
# 10 ஆண்டுப்
# பணிகள்
# தொகுப்பு மலராக
# மலர்கிறது

கட்டுரைகள்,
வண்ணப்படங்கள்
தகவல்கள் அனைத்தும்
இம்மலரில் உண்டு!



அதிகப் பக்கங்கள், விலை ரூ. 1-00
விவரங்களுக்குத் தொடர்பு கொள்க :

உதவி இயக்குநர் (விற்பனை)
தமிழரசு அலுவலகம்
அரசினர் தோட்டம், சென்னை-600 002.



'கற்றலின் கேட்டலே நன்று' என்பார்கள். அவ்வாறு கேட்கச் செய்யும் செவிக்கு ஊறு நேர்ந்தால்... கெடுதல் ஏற்பட்டால்... அதற்கு என்ன சிகிச்சை செய்யலாம்? எப்படிப் பாதுகாக்கலாம்? என்ற அறிவுரைகளைக் கூறுகிறது இந்த அரிய கட்டுரை.

# காது கொடுத்துக் கேட்போம்

'செல்வத்துள் செல்வம்
செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை'
—திருக்குறள்.

நமது ஐம்பொறிகளில் செவி மிக முக்கியமானது. ஒருவன் சொல்வழி பேச்சினையும் அதன் மூலம் மொழியினையும் கேட்கும் திறன் அவசியமானதாகும். மேலும் மனவளர்ச்சி, தனித்திறன், ஆற்றல், கலை, இசை முதலியன தோன்றி, விரிவடைந்து, முழுமை பெற, செவி ஒரு பாலமாகத் திகழ்கிறது. நம் சிந்தனையைத் தூண்டி, அறிவைப் பெருக்குவதற்கு உதவுவன ஒலியும், ஒளியும்தான்.

ஒருவர் சாதாரணமாக மற்றவர் பதினெட்டு அடிக்கு அப்பால் இருந்து பேசும் பேச்சினைக் கேட்டு, அதன் பொருளினைப் புரிந்து கொள்ள முடியாத நிலையினைக் காது கேளாமை என்று கூறுகிறோம்.

காதினை, வெளிக்காது, செவிப்பறை, நடுக்காது, உட்காது என்று வகைப்படுத்தலாம்.

வெளியிலிருந்து வரும் ஒலியலைகளை சேகரித்து வெளிக்காதும், நடுக்காதும், உட்காதிற்கு அனுப்ப, அங்கு ஒலி அலைகள் **காக்லியா,** செவி நரம்புகளின் மூலம் மூளையினை அடைந்து நம் ஓசை எத்தகையது என்பதை உணர்ந்து செய்தியைக் 'கேட்கிறோம்'.

காது கேளாமையைப் பொதுவாக இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

(அ) ஒலியலைகள் செல்லும் பாதையில் வெளிக்காது, செவிப் பறை, அல்லது நடுக்காதில் நோயினால் தடங்கல் ஏற்படுவதால் உண்டாகும் **'நடுக்காது காது கேளாமை.'**

(ஆ) உட்காதிலுள்ள நத்தையின் உருக்கொண்ட காக்லியா, செவிநரம்பு பாதிப்பினால் உண்டாகும் 'உட்காது காது கேளாமை அல்லது செவி உணர்வு நரம்பு காதுகேளாமை.'


## காதுகேளாமையின் காரணங்கள்

1. குழந்தை பிறக்கும் போதே காது கேளாத நிலையில் இருக்கக் கூடும். இதற்குப் பல காரணங்களைக் கூறலாம். தாயின் வயிற்றில் வளரும் கருவின் உட்காது முதல் மூன்று மாதங்களில் பரம்பரைக் கோளாறுகள், உட்காதில் வியாதிகள், மற்றும் தாய்க்கு ஏற்படும் தொற்று நோய்கள், சிவப்புக் காய்ச்சல், தட்டம்மை, கிரந்திநோய், புட்டாளம்மை, இன்புளுயன்ஸா முதலியனவற்றால் பாதிக்கப்பட்டு வளர்ச்சியுறாமல் அழிகிறது. மேலும் குழந்தை பிறக்கும்போது, அதன் தலையில் உண்டாகும் காயம், சாமண இடுக்கி உபயோகித்து குழந்தையை வெளியேற்றுவது, நீண்ட நேர குழந்தையின் மூச்சுத் திணறல் போன்றவைகளும் காது கேளாமையை உண்டாக்கலாம்.

**டாக்டர் கோ. சுவாமிநாதன்,
இயக்குநர் மற்றும் பேராசிரியர்,
காது, மூக்கு, தொண்டை இயல் நிலையம்,
சென்னை மருத்துவக் கல்லூரி,**

இவ்விதம் பிறவியிலேயே காது கேளாமல் பிறக்கும் குழந்தை, பேசப்படும் பேச்சினைக் கேட்க இயலாத நிலையில், பேசக் கற்றுக் கொள்ள முடிவதில்லை. இதைப் பிறவி செவிட்டு ஊமை ( deaf mutism ) என்று கூறுகிறார்கள்.

காது கேளாமையின் விளைவே பேச இயலாத நிலை. சாதாரணமாக காது நல்ல முறையில் வளர்ச்சியுற்ற குழந்தை பிறந்த முதல் ஆறு மாதங்களில் சப்தம்



வரும் திசையினை நோக்கித் தன் கவனத்தைத் திருப்பும். இரண்டாவது ஆறு மாதங்களில் தாயின் குரலைக் கண்டு கொள்கிறது. ஒலிவரும் திசைநோக்கித் தலையைத் திருப்புறது. முதலாண்டு இறுதியில் அம்மா, அப்பா போன்ற சொற்களை மழலையாகக் கூறத் தொடங்குகிறது.

இரண்டாவது வயதில் சாதாரண ஆணைகளைப் புரிந்து கொள்ளவும், சொற்களை ஒன்று சேர்த்துக் கோவையாகச்சொல்லவும் தொடங்குகிறது.

குழந்தை பிறந்து 15-18மாதங்களில் புரியும்படியாக வார்த்தையினை உச்சரிக்க முடியாவிட்டால் அதன் காது கேட்கும் திறன் சரியாக வளரவில்லை என்று





## பிறந்தபின் நடுக்காது கேளாமையை உண்டாக்கும் நோய்கள்:

(அ) வெளிக்காதில் அளவுக்கு அதிகமாக மெழுகு ( Wax ) உண்டாகிக் காதினை அடைப்பது.

அவற்றில் உட்பக்கத்தில் உள்ள ஸ்டெபிஸ் என்ற எலும்பின் இயக்கத்தில் இறுக்கம் ஏற்பட்டு, ஓட்டோசுகிலிரோஸிஸ் (Otosclerisis) என்ற நோய் உண்டாகிறது. இந்த நோய் தமிழகத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. இதனைப் பற்றிச் சிறிது விரிவாக அறிதல் அவசியமாகும்.

இது ஆண்களைவிட, 20 முதல் 30 வயதுடைய பெண்களிடம் அதிகமாகக் காணப்படுகிறது. கருவுற்றிருக்கும் பெண்களிடம் தீவிரமாகப் பரவுகிறது. காது கேளாமை நாளடைவில் அதிகமாதல், கூச்சலான சூழ்நிலையில் காது நன்றாகக் கேட்டல், காதில் இரைச்சல் முதலிய குணங்கள் தென்படும், மணமாகும் முன், மாமாவின் மக்கள், அத்தையின்





அறிந்து, உடனே, காது, மூக்கு, தொண்டை நிபுணரை அல்லது காது கேட்கும் திறன் ஆய்வாளரை அல்லது பேச்சு நிபுணரை அணுகி ஆலோசனை பெறவேண்டும.

பிறவி காதுகேளா ஊமைக்கு அடிப்படை அணுகு முறையில் பேச்சுப் பயிற்சி அளிக்க வேண்டும். இதற்குப் பார்வை, தொடு உணர்வு, எஞ்சிய கேட்கும் திறனைப் பயன்படுத்துதல் வேண்டும். செவித்துணைக்கருவி உபயோகிக்க வேண்டும். சிறப்புப் பள்ளிகளிலும், துவக்கப்பள்ளிகளிலும் இதற்கான பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். கேட்பதற்கென அமைந்த மறுவாழ்வு சீரமைப்பு நிலையங்களில் கேட்கும் சாதனங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

(ஆ) டான்சில், அடினாய்டு சதைகள், வீக்கம் மூக்கு நோய்கள் ( Sinusitis ) முதலியவற்றால் உண்டாகும் வியாதிகளைக் கவனிக்காது விடுவதால், அவை காதை அடைந்து செவிப்பறையைக் கிழித்துத் துளையினை ஏற்படுத்தி, சீழ் வழிவதுடன் காது கேளாமையையும் உண்டாக்கும்.

(இ) கிரந்தி நோய் :(ஸ்பிலிஸ்) காசம், குஷ்டம் போன்ற நாட்பட்ட நோய்கள் நிரந்தரமாகக் காதினைத் தாக்கி, காது கேளாமல் செய்கின்றன.

(ஈ) நடுக்காதில் மிகச் சிறிய அளவில் மூன்று எலும்புகள் தொடராக உள்ளன. அவை முறையே சுத்தியல் (Hammer Mallus) பட்டரை (Anvil-incus) அங்கவடி (Stirrup Stepes) வடிவில் அமைந்துள்ளன.

குழந்தைகள் போன்ற இரத்த சம்பந்தமான உறவு கொண்டுள்ள பெற்றோர்களில் (consanguinous marriage) யாருக்காவது இந்த நோய் இருக்குமாயின், பிறக்கும் குழந்தை இந்த ஓட்டோஸ்கிலிரோஸிலினால் பாதிக்கப்படும் வாய்ப்புகள் அதிகமாயுள்ளது. இதனால் உண்டாகும் காது கேளாமையை, நுண்நோக்குக் கருவி துணை கொண்டு (Micro-scope) அறுவைச் சிகிச்சை மூலம் (micro-ear-surgery) சரிசெய்து காது நன்றாகக் கேட்கும்படிச் செய்யலாம்.

சென்னையிலுள்ள பொது மருத்துவமனை காது, மூக்குத் தொண்டை நிலையத்தில், இந்த வியாதிக்கு பெருமளவில் அறுவைச் சிகிச்சை செய்து காது கேளாமை முழுமையாகக் குணப்படுத்தப்படுகிறது. காது கேட்கும் திறன்

திரும்பப் பெற முடிகிறது. அறியாமை, அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுதல், காது கேளாமையை மற்றவர் அறியக்கூடாது என்று மறைத்தல் முதலியவற்றால் காலம் கடத்தினால், இந்த நோய் உட்காதிலுள்ள நத்தை ஓட்டை ஒத்திருக்கும் சுருள் வளையை **காக்லியானை** (Cohlea) பாதிக்குமானால் செவி நரம்பு பாதிக்கப்பட்டு, உட்காது உணர்வு செவி நரம்பு கேளாமையில் முடியும். காதில் இரைச்சல் அதிகமாகி, நோயாளி விரும்பினால்கூட அறுவைச் சிகிச்சை செய்ய முடியாத நிலை உண்டாகும்.

உட்காது செவி உணர்வு நரம்புக் காது கேளாமையின் காரணங்கள்: முதுமையினால் செவி நரம்பு தளர்ச்சியடைவதால் காது கேளாமை உண்டாகுதல்: மருந்துகள்: குவினீன், சலிசிலேட்ஸ், ஸ்ட்ரெப்டோமைசின், பாதரஸம், ஆர்சலிக் கலந்த மருந்துகள் முதலியவற்றை மிகையாக உபயோகிப்பதால் செவி நரம்பு அழற்சி ஏற்படுகிறது. சாராயம், புகையிலைக்கு நீண்ட நாள் அடிமையாக இருத்தலும் நாட்பட்ட நிரந்தர நச்சுநிலையை உருவாக்குகிறது. முதலில் செவி நரம்பின் புற நுனிகளைப் பாதித்து பின்னர் சமசீர்நிலைப் பகுதி நரம்பினையும் தாக்குகிறது.

எல்லா வகையான தொற்று நோய்களும் உட்செவியைத் தாக்கி அழிக்கின்றன.

நீரிழிவு, சிறுநீரக அழற்சி, கீல்வாதம் போன்ற நோய்களின் இரத்த நச்சு விளைவாலும் உட்செவியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் உண்டாகின்றன.

இரத்த நாளச்சுருக்கம் (Ather-oscierosis) இரத்த மிகு அழுத்தம் ( Hypertension ) முதலியனவும் உட்செவிக்கு இரத்தம் செல்வதைக் குறைத்து, செவி நரம்பு அழற்சிக்குக் காரணமாகின்றது.

சிகிச்சை முறை: நோயிலிருந்து சீரடைந்தவுடன் உடல் நலப் பாதுகாப்பு முறையினைப் பின்பற்றுவதன் மூலம் செவி நரம்பு அழற்சிக்குச் சிகிச்சை செய்யலாம். வேதியியல் சிகிச்சையில் வைட்டமின் பி, வைட்டமின் ஏ, ஹார்மோன்ஸ், ஸ்டிரிக்னின் போன்றவைகளைத் தரலாம்.

வெடிகுண்டு, மற்றும் சுரங்க வெடியினால் உண்டாகும் ஓசையும், அதிர்ச்சியும், செவியில் பல சிக்கல்களை ஏற்படுத்தும். செவியின் நரம்பினையும், மத்திய நரம்பு மண்டலத்தையும் பாதிக்கின்றன. காது திடீரெனக் கேளாமை, மயக்கநிலை, மனோ பாதிப்பு, பேசும் மற்றும் கேட்கும் சக்தியை இழத்தல், நரம்பு மண்டலப் பாதிப்புகள் முதலியன உண்டாகும்.

## செவியின் தொழில்வழி நோய்கள்

ஒலியினை இசை, ஓசை என்று இருவகைப்படுத்தலாம். இசை இனிமையானது, மென்மையானது. பொதுவாக எல்லோராலும் விரும்பப்படுவது. கவலையினை மறக்க, களைப்பினைப் போக்க, மகிழ்ச்சியினை அளிக்க, யாவரும் நாடுவது இசையே.

இனிமையற்ற, தேவையற்ற, வேண்டப்படாத, ஒரு கட்டுக் கோப்புக்கு அடங்காமல் ஒலிக்கும் ஒலியினை ஓசை என்று அழைக்கிறோம். இதனையே மிகுந்த சப்த செறிவுடன் ஒலியலைகள் காணப்பட்டால், நாம் அதனை **இரைச்சல்** என்றும் **பேரிரைச்சல்** என்றும் கூறுகிறோம்.

இன்றைய சுற்றுப்புறச் சூழ்நிலை நீர், நிலம், காற்று ஆகிய மூன்றுடன் கூட இந்தப் பேரிரைச்சலாலும் மாசுபடுத்தப்படுகிறது.

இந்த இரைச்சலினால் ஒருவனது மனஅமைதி, தூக்கம் ஆற்றல், சகிப்புத் தன்மை மற்றவர்களுடன் பேச்சு மூலம் தொடர்பு கொள்ளுதல் முதலியன பாதிக்கப்பட்டு, கெடுவதுடன் விரைவில் இதனைக்களையாவிட்டால், உட்காது கேளாமை நரம்புத் தளர்ச்சி, இரத்த மிகு அழுத்தம், மனதளர்ச்சி, சோர்வு மனோ வியாதிகள் முதலியவற்றை உண்டாக்கக் கூடும்.

இன்றைய வளர்ந்துவரும் நாகரீக சமுதாயத்தில் இந்த இரைச்சல் நம்மைப் பல வகைகளில் பாதிக்கின்றது. தொழிற்சாலைகள் வானிலும், தரையிலும் மிக, வேகமாகச் செல்லும் ஊர்திகள் இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு அலறும் ஒலிபெருக்கிகள் மேலைநாட்டு வாத்திய, இசை நிகழ்ச்சிகள் போன்றவை.

தொழிற்சாலைகளில் வேலை செய்யும்போது இடைவிடாத இரைச்சலும், அதிர்வும் ஏற்பட்டு முதலில் தற்காலிகமாகவும், பின்பு நிரந்தரமாகவும் காது கேட்கும் திறனைப் பாதித்து செவிநரம்பு அழற்சியை உண்டாக்கும்.

இவ்விதம் இரைச்சல் சூழ்நிலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தொழில் பாதுகாப்பு நியதிகள், தொழிற்கூட சுகாதார நெறிச் சட்டங்கள் ஏற்படுத்த வேண்டும். இயந்திரங்கள் ஊர்திகள் உண்டாக்கும் வேண்டாத சப்தத்தைப் போக்க வேண்டும். பழையவற்றினை நீக்கி, புதிய பாகங்களைப் பொருத்தலாம். வேலை செய்யும்போது தொழிலாளர்கள் காது அடைப்பான் கருவிகளை உபயோகிக்கும் படிக் கூறலாம். அடிக்கடி காது கேட்கும் திறனில் ஏதாவது குறையிருக்கிறதா என்று அவர்களைச் சோதிக்க வேண்டும்.

**காது கேளாமை என்பது தவிர்க்கக் கூடியது. வந்த பின்னும் சிகிச்சை முறையினால் போக்கக் கூடியது. அது ஒரு உடல் ஊனம் என்ற எண்ணம் மக்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து நீங்கி அதற்கு நிவர்த்தி உண்டு என்பதை உணரவேண்டும்.**

காது கேளாதவர்கள் பிறரின் பரிதாபத்துக்கு உரியவர்கள் அல்ல. அவர்களுடைய குறைபாடுகளை நீக்கி, மறுவாழ்வு அளித்து, தன்னம்பிக்கையுடன் வாழச்செய்வது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.





# முதல் ஆண்டிலேயே காய்க்கும் முந்திரிகள்

முந்திரி விதைகள் மூலம் எழுப்பப்படும் செடி நான்காவது ஆண்டிலிருந்து தான் காய்க்கத் தொடங்கும். மேலும் விதைதந்த தாய்மரம போல அந்தச் செடியிலிருந்து அதிக மகசூலைப் பெற முடியாது.

. ஆனால் முந்திரியில் முதலாண்டிலேயே மகசூலைப் பெறலாம். அதுவும் தாய் மரம்போல அதிகக் கொட்டைகளை எளிதாகப் பெறலாம். அது எப்படித் தெரியுமா? முதலில் இதற்கு நனறாகக் காய்க்ககூடிய கொத்து ஒன்றிற்கு 10-20 காய்களையும் ஒரு சதுர மீட்டருக்கு 20-25 கொததுகளையும், சராசரி அளவுள்ள கொட்டைகளையும் குணங்களாகப் பெற்ற முந்திரி மரங்களை நமது அல்லது தெரிந்தவர் தோட்டத்தில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சூலை மாதத்தில் சுண்டுவிரல் அல்லது நடுவிரல பருமன் உளள நுனிக் கிளைகளில் 2-3 அடி நீளம் அளவு வைத்து ஒரு அங்குலம் நீளத்திற்குப் பெனாக்கததியினால் பட்டையை நீக்க வேணடும். ஒரு கைப்பிடிப் பாசியை நீரில் நனைத்து 30-25 செ.மீ. அளவுள்ள பாலித்தின் தாளில்வைதது பாசிப்பட்டை நீக்கிய இடத்துல் இருக்குமாறு பாலித்தின தாளை எடுத்துப் பட்டை நீக்கிய நுனிக் கிளையில் சுற்றவேண்டும். காற்று உட்புகாதவாறு இருபுறத்திலும் நூலினால நன்கு கட்டிவிடவேண்டும். இப்படி ஒரு மரதததில் 200-300 நுனிக்கிளைகளில் கட்டமுடியும்.

இவ்வாறு கட்டிய கிளைகளில் பட்டை நீக்கிய இடத்தில் 25-30 நாட்களில் வெள்ளை வேர்கள் வளரத் தொடங்கும். வேர்களைப் பாலித்தின் தாள்கள் மூலம் நன்கு பார்க்க முடியும். 50 நாட்கள் கழித்து வேர்களுடைய நுனிக் கிளைகளை கட்டிய இடத்தின் கீழே, நல்லமுறையில் வெட்டி எடுத்து முந்திரித் தோட்டம் எழுப்பப்படும் இடத்திற்கு அன்றே கொண்டு செல்லவேண்டும். இந்த வெட்டிய வேருடன் கூடிய நுனிக்கிளைகளை '**விண்பதியம்**'' என்பர், இந்த விண்பதியத்தில் சுற்றி உள்ள பாலித்தின் தாட்களை நீக்கிவிட்டு, பாசியுடன் அவைகளை 45-45 செ.மீ. குழிகளில் வேர்கள் கெடாதவாறு நட்டு நீர்ஊற்ற வேண்டும்.

இப்படி நட்ட விண்பதியங்களில் புதிய குருத்துக்கள் 20-30 நாட்களில் வெளிவரத்தொடங்கி நன்கு வளரத் தொடங்கும். முதலாண்டுவிண்பதியச்செடி இரண்டு வயது விதை மூலம் எழுப்பப்பட்ட செடிகள் யாவும், இரண்டாம் ஆண்டு விண்பதியம் செடி, விதை மூலம் எழுப்பப்பட்ட நான்கு வயதுடைய செடி போன்று நன்குவளர்ச்சி பெற்றுக் காணப்படும்.

மேலும் முதலாண்டிலேயே 6 மாதத்தில் **விண்பதியச்** செடிகள் காய்க்கத் தொடங்கி ஏக்கருக்கு 5.10 கிலோ கொட்டைகள் கிடைக்கும். இரண்டாம் ஆண்டில் ஏக்கருக்கு 80 கிலோ வரை விளைச்சலைப பெறலாம். மூன்றாம் நான்காம் ஆண்டுகளில் இவை மேலும், அதிக மகசூலைத் தரும். மேலும் இவை **விண்பதியம்** கட்டிய தாய் மரங்கள் போல அப்படியே காய்க்கும். ஆனால் விதை மூலம் பெற்ற செடி நான்காம் ஆண்டிலிருந்து தான் காய்க்கத் தொடங்கும். அதுவும், விதை எடுத்த தாய்மரம் போல விளைச்சலைத் தராது.

ஆகவே, விவசாயிகளும் **விண்பதியம்** மூலம் முந்திரித தோட்டம் எழுப்பி முதலாண்டிலேயே அதிக மகசூலைப் பெற்று பயனடையுங்கள். இது சம்பநதமாக ''உதவி வனப்பாதுகாவலர் முந்திரி உயரகத் தோட்ட வளாகம்'' விருத்தாசலம், அவர்களிடம் தொடர்பு கொண்டு ஆலோசனை கேட்டு முந்திரி விளைச்சலைப் பெருக்கலாம்.

**மருது**



# காமராசர் மாவட்டம்... ஒரு கண்ணோட்டம்

இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பிரித்து, தனியொரு மாவட்டமாகமலர்ந்த காமராசர் மாவட்டம் கடந்த ஈராண்டில் எண்ணற்ற நலப் பணிகளை மேற்கொண்டு செழிப்புடன் திகழ்கிறது.

காமராசர் மாவட்டத்தில் வைப்பாறு, அருச்சுனா ஆறு, கௌசிகா நதி, குண்டாறு மற்றும் கிருதமால் நதி போன்ற சிறிய நதிகள் பாய்கின்றன. எண்ணற்ற காட்டாறுகளும் ஓடைகளும் மழைக் காலங்களில் மட்டுமே நீரோட்டத்தைப் பார்க்க இயலும். வற்றாத ஜீவநதிகள் இம்மாவட்டத்தில் இல்லை.

காட்டாறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே 83 அணைகள் கட்டப்பட்டுள்ளன. காட்டாறு மற்றும் ஓடைகளின் மூலமாக மழைக்காலங்களில் வரும் நீர் இவ்வணைகளின் வழியே கண்மாய்களுக்குத் திருப்பிவிடப்பட்டு பாசன வசதி அளிக்கப்படுகிறது.

மேலும் இம்மாவட்டத்தில் பிளவக்கல், குல்லூர் சந்தை மற்றும் வெம்பக்கோட்டை ஆகிய இடங்களில் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நீர்த் தேக்கங்களின் மூலம் முறையே 7,200 ஏக்கர் 2,891 ஏக்கர் மற்றும் 8,100 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறுகின்றன. மேலும் ஆனைக்குட்டம், கோல்வார்பட்டி ஆகிய இடங்களிலும் நீர்த்தேக்கத்திட்டங்கள் செயலில் இருந்து வருகின்றன. இதனால் 8,529 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

## கூட்டுறவுப் பாசனத் திட்டம்


தமிழ்நாட்டிலேயே காமராசர் மாவட்டத்தில்தான் மத்திய அரசு உதவியுடன் ரூ. 4 கோடி மதிப்பில் 'கூட்டுறவுப் பாசனத்திட்டம்' அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மாவட்டங்கள் பயன்பெறுகின்றன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.52.97 இலட்சம் செலவில் கண்மாய்கள் செயலுக்கு எடுத்து முடிக்கப்பட்டுள்ளன. இதனால் சுமார் 1,220 ஏக்கர் நிலம் பாசனம் பெறும். கூடுதல் உணவு உற்பத்தி சுமார் 926 டன்களாக இருக்கும்.


ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 55 இலட்சம் செலவில் 5 கண்மாய்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுவேலைகள் நடைபெறறு வருகின்றன. இதனால் 942 ஏக்கர் நிலம் பாசனம் பெறும். சுமார் 408 டன் கூடுதல் உற்பத்தி கிடைக்கும்.

சிறப்பு சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் ரூ. 35.84 இலட்சம் செலவில் 9 கண்மாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் 1,553 ஏக்கர்நிலம் பாசனம்பெறுகிறது. சுமார் 1,069 டன்கள் உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இம்மாவட்டத்தில் 12 புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ரூ. 216.40 இலட்சம் செலவில் செயலுக்கு எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தபடி ஒவ்வொரு மாவட்டத்



ரூபாய் 5 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள வெம்பக்கோட்டை நீர்த்தேக்கம்



ரூபாய் 3 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள குல்லூர்சந்தை நீர்த்தேக்கம்

திலும் ஒரு மூன்றாண்டுக்குரிய தொழில் திட்டத்தைஆராயுமாறு கூறியதன்படி இராஜபாளையத்தில் பல்வேறு தொழில் வல்லுநர்கள் தலைமையில் தொழில் முனைவோர் கருத்தரங்கு நடத்தப்பட்டது. கருத்தரங்கு அளித்த ஆய்வு அறிக்கையின்படி இம் மாவட்டத்தில் 1986 முதல் 1989 முடிய 3 ஆண்டுகளில் ரூ. 25 கோடி முதலீட்டில் 907 சிறு தொழில்கள் துவங்கும் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. தீப்பெட்டி, பட்டாசு, வண்ண அச்சுத்தொழில்கள் மற்றும் பருத்தி அறவைத்தொழிற்சாலைகள் தவிர்த்த பிறதொழில்கள் இம்மாவட்டத்தில் கிடைக்கின்ற மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளும், இரசாயனத் தொழிற்சாலைகளும், மின்சாரம் மற்றும் மின் அணுவியல் தொழிற்சாலைகளும் துவங்க ஊக்கம் அளிக்கத் திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டுவருகின்றது.

மேலும் இம்மாவட்டத்தில் 'சிப்காட்' தொழிற்பேட்டை ஒன்று அமைக்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

இம் மாவட்டத்தில் சிவகாசி, சாத்தூர் பகுதிகளில் உள்ள பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் குழந்தைத் தொழிலாளர் நல மேம்பாட்டிற்காக ரூ. 13.89 கோடி மதிப்பீட்டில் **இந்தியாவிலேயே முதன் முதலாக தேசிய குழந்தைத் தொழிலாளர் நலத் திட்டத்தை இங்குதான் மத்திய அரசு செயல்படுத்தத் துவங்கியது.** மேலும் தமிழக அரசு, உலகக் குழந்தைகள் நல நிறுவன உதவியுடன் ரூ.1.36 கோடி திட்டமதிப்பீட்டில் முறைசாராக் கல்வி தொழிற்சாலைகளில் வடிகால் சாக்கடை அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பட்டாசு — தீப்பெட்டித் தொழிற்சாலைகளில், பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தமிழக அரசு, கூட்டுத் தனிநபர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தைச் செயல் படுத்தி வருகிறது.

காமராசர் மாவட்டத்திலுள்ள இயற்கைச் சூழ்நிலை, பட்டுநூல் உற்பத்திக்கு மிகவும் உதவிகரமாக உள்ளது. இம்மாவட்டத்தில் மட்டும் 9 அரசு பட்டுப் பண்ணைகள் உள்ளன. இவற்றின் மூலம் 350 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். ஒரு பட்டுநூல் தொழிற்சாலையும் திருவில்லிப்புத்தூரில் உள்ளது. இம்மாவட்டத்தில் 626.15 எக்டேர் நிலப் பரப்பில் மல்பரி பயிர் செய்யப் படுகிறது.

இம்மாவட்டத்தில் உள்ள 2,012 சத்துணவு மையங்களில் மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 2,48,437 பேர் பயன் பெறுகிறார்கள். இதுதவிர, 7,213 முதியவர்களும் பயன்பெறுகிறார்கள். இம்மாணவர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் இலவசப் பாடப் புத்தகங்களும், சீருடைகளும் வழங்கப்படுகின்றன. இம்மாவட்டத்தில் 6 வயது முதல் 14 வயது வரை உள்ள 11,922 குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## சிவகாசிப் பெருமை

**சிவகாசியில் ஆண்டொன்றுக்கு ரூ. 50 கோடிக்குமேல் பட்டாசு தயார் செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கும், இந்தியாவின் பிற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இந்தியாவில் தயாராவதில் 90 சதவித பட்டாசு இப்பகுதியில்தான் தயாரிக்கப் படுகிறது. சுமார் 2 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இதன் மூலம் தொழில் வாய்ப்பும் பெற்றுள்ளனர்.**

168 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ. 6,46,800 மதிப்புள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

சாண எரிவாயுக்கலன் அமைக்கும் பணி தீவிரமாக்கப்பட்டு இதுவரை 171 கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கென அரசு மானியமாக ரூ. 2,11,190 வழங்கியுள்ளது. சூளை அடுப்புகள் 5,231 அமைக்கப்பட்டுள்ளன.

ஆதி திராவிட மக்களுக்கு ரூ. 2.65 கோடி செலவில் 4,414 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. 1986-ஆம் ஆண்டு துவங்கிய இப்பணி 1989ஆம் ஆண்டு முடியும். ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள், மயான வசதி, மின் வசதி ஆகியவையும் செய்து தரப்படுகின்றன. 215 சலவைத் தொழிலாளர்களுக்கும் 47 சவரத் தொழிலாளர்களுக்கும் தொழில் செய்து முன்னேறத் தொழிற்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

செண்பகத் தோப்பு என்ற பகுதியில் பளியர்கள் என்ற இனத்தவர் பல தலைமுறையாகக் கொத்தடிமைகளாக இருந்து வந்தனர். இதைக் கண்டறிந்த அரசு இவர்களை விடுவித்துப் புனர்வாழ்வும் அளித்துள்ளது.

# செங்கை மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

செங்கை மாவட்டத்தில் புதிய இருபது அம்சத்திட்டம், படித்து வேலையில்லாதவர்களுக்குச் சுய வேலை வாய்ப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டம், குடும்பநலத் திட்டம், சிறு சேமிப்புத் திட்டம், எரிசாண வாயுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

செங்கை மாவட்டத்தில் 1986-87ல் புதிய இருபது அம்சத்திட்டம் செயல்படுத்தப்படுவதில் பெரும் சாதனையே உருவாக்கப்பட்டுள்ளது. மொத்தம் 22 இனங்களில் குறியீட்டு அளவை விட அதிக அளவில் சாதனை புரியப்பட்டுள்ளது. மற்ற இனங்கள் அனைத்திலும் குறியீட்டு அளவை முடித்து, பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

படித்து, வேலையில்லாது இருக்கும் பட்டதாரிகளுக்குச் சுய வேலை வாய்ப்புக்காக இம்மாவட்டத்தில் சென்ற நிதியாண்டில கடனாக வழங்கப்பட்ட தொகை ரூ. 421.90 இலட்சமாகும். இதனால் பயனடைந்தோர் எண்ணிக்கை 2141 பேர்கள்.


ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.358.18 இலட்சம் செலவு செய்யப்பட்டு மொத்தம் 22,775 பேர்கள் 1986-87 நிதியாண்டில் பயனடைந்துள்ளார்கள். ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூ.463 இலட்சம் செலவில் செய்யப்பட்டு 142 விழுக்காடு என்ற அளவில் சாதனை புரியப்பட்டுள்ளது.

மேலும் 1986-87 நிதியாண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 479.58 இலட்சம் செலவு செய்யப்பட்டு 112 விழுக்காடு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கிராமப் புறங்களில் தற்சமயம் அறிமுகப் படுத்தப்பட்டு வரும் எரிசாண வாயுக் கலன்கள் அமைப்புப் பணிகள் இம்மாவட்டத்தில் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1986-87 நிதியாண்டில் இம்மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 1000. ஆனால் 1178 கலன்கள் அமைக்கப்பட்டு 118 விழுக்காடு சாதனை புரியப்பட்டுள்ளது.

குடும்ப நலத் திட்டத்திலும், 45,500 என்ற இலக்கை மிஞ்சி 50,242 என்ற அளவில் சாதனை புரிந்துள்ளது இம்மாவட்டம்.

1986-87ல் இம்மாவட்டத்தில் மொத்தம் 2,28,930 எக்டேர் நிலப்பரப்பில், நெல் பயிரிடப்பட்டது. மேலும் ராகி, சோளம், கம்பு, கரும்பு பயிறு வகைகள் முதலானவை குறிப்பிடத்தக்க அளவில் பயிர் செய்யப்பட்டுள்ளன.

பால் உற்பத்தியில் 1986-87 நிதியாண்டில் 5,35,000 லிட்டர் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 6,26,966 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு, சாதனை புரியப்பட்டுள்ளது. மேலும் விவசாயிகளுக்குக் காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி மூலம் குறுகிய காலக் கடனாக ரூ. 659.31 இலட்சமும், மத்தியக் கால கடனாக ரூ. 56.82 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 716.13 இலட்சமும் வழங்கப்பட்டு வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட்டு வருகின்றன.















**பா. நாராயணமூர்த்தி,**
உதவி செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
**செங்கல்பட்டு மாவட்டம்.**



# வளமான வாழ்வுக்கு

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்

## அளிக்கும்

# விஜய்

## உரங்கள்

உங்கள் நிலத்தில் அமோக விளைச்சலைப்பெற தழை-மணி-சாம்பல் மூன்று சத்துக்களும் தேவை. மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி விஜய் உரமிட்டு விளைச்சலைப் பெருக்குங்கள். மதராஸ் பெர்ட்டிலைசர்ஸில் உள்ள நவீன மண் பரிசோதனை நிலையம் இலவசமாக அளிக்கும் 'துரித மண் பரிசோதனை' சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். மண் பரிசோதனை செய்ய இயலாவிடில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சிபாரிசுப்படி உரமிடுங்கள்.



# 17-17-17




# 14-28-14




# டி.ஏ.பி




# யூரியா




நெல்
ஏக்கருக்கு/கிலோ

| உயர் விளைச்சல் ரகங்கள் | அடியுரம் | | | மேலுரம் |
|---|---|---|---|---|
| | விஜய் 17-17-17 | விஜய் யூரியா | பொட் டாஷ் | விஜய் யூரியா |
| குறுகிய கால ரகங்கள் | 90 | — | — | 35 |
| நடுத்தர, நீண்ட கால ரகங்கள் | 120 | — | — | 45 |
| அல்லது | | | | |
| | விஜய் 14-28-14 | விஜய் யூரியா | பொட் டாஷ் | விஜய் யூரியா |
| குறுகிய கால ரகங்கள் | 55 | 15 | 10 | 35 |
| நடுத்தர, நீண்ட கால ரகங்கள் | 70 | 20 | 15 | 45 |
| அல்லது | | | | |
| | விஜய் டி.ஏ.பி. | விஜய் யூரியா | பொட் டாஷ் | விஜய் யூரியா |
| குறுகிய கால ரகங்கள் | 35 | 20 | 25 | 35 |
| நடுத்தர, நீண்ட கால ரகங்கள் | 45 | 25 | 35 | 45 |

சமச்சீர் உரமிட

## விஜய்



மேலும் விவரங்களுக்கு : வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்**

**இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்**
மணலி, சென்னை 600068

MFL-1960-R

# பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்



பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் சிவகங்கை, மானா மதுரை, இளையான்குடி, தேவ கோட்டை, காரைக்குடி, திருப் பத்தூர் ஆகிய 6 தாலுக்காக் களையும் 498 வருவாய்க் கிராமங் களையும் கொண்டது. இம்மாவட் டத்தில், 9,72,756 மக்கள் வாழ் கிறார்கள். வானம் பார்த்த பூமி என்று சொல்லப்படும் இம்மாவட் டத்தில் கடந்த மூன்றாண்டுக ளாக வானம் பொய்த்ததன் விளைவாக 4593 கண்மாய்களும் வறண்டு கடும் வறட்சிக்குள்ளா கியது. கிணறுகளிலும் தண்ணீர் வற்றி வேளாண்மையையே முக் கியத் தொழிலாகக் கொண்டுள்ள இம்மாவட்ட மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளானார்கள். குடி நீர்ப் பற்றாக்குறையும் ஏற் பட்டது. விவசாயிகள் தங்க ளிடம் உள்ள கால்நடைகளைப் பராமரிக்க முடியாமல், வந்த விலைக்கு விற்கும் நிலைக்கு ஆளானார்கள்.

வறட்சியின் கொடுமை இம்மா வட்ட மக்களை வாட்டியது. வாட் டத்தைப் போக்கி வளப்பை ஊட்டு வகையில், இந்த மாவட் டத்தை வறட்சி மாவட்டமாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள 6 வட்டங் களிலும் வறட்சி நிவாரணப் பணி கள் மிக விரைவாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் செம்மையாகவும், மிக விரைவாக வும் நடைபெறுவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், பணிகள் நடை பெறும் இடங்களுக்குச் சென்று ஆய்வுகள் நடத்துகிறார். இம் மாவட்டத்தில் உள்ள 11 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளி லும் நடைபெறும் வறட்சி நிவா ரணப் பணிகளைக் கண்காணிக்க வும், குடிநீர்ப் பற்றாக்குறை களைப் போக்கவும் துணை ஆட்சி யர் தகுதியில் 11 மண்டல அலு வலர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் நியமித்துள்ளார்.

புதிய திறந்த வெளிக்கிணறு கள், உறைக்கிணறுகள், கிணறு களை ஆழப்படுத்துதல், கிணற்றில் ஆழ்குழாய் போடுதல், கைப்பம்பு கள் அமைத்தல், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி, போர்க்கால நடவடிக்கையில் பணிகள் முடிக்கப்பட்டு இம் மாவட்டத்தில் நிலவிய குடிநீர்ப் பற்றாக்குறை தற்போது நீங்கி வருகிறது. மேலும் நகர்ப்புறங் கள், கிராமப்புறங்களில் லாரிகள் மூலமாகவும் குடிநீர் வழங்கப் பட்டு வருகிறது.

இம்மாவட்டத்திலுள்ள மக்க ளுககு வேலைவாய்ப்பைக்கொடுப் பதற்காக வேலைவாய்ப்புத் திட் டத்தில் ஊருணிகளை ஆழப்படுத் துவதற்காக ரூ. 30.43 இலட்சம் செலவில் 697 ஊருணிகள் ஆழப் படுத்தப்பட்டுள்ளன. ரூ 13 .15 இலட்சம் செலவில் 41 திறந்த வெளிக்கிணறுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின் றன. 5.10 இலட்சம் செலவில் 167 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு வருகின்றன. 11.30 இலட்சம் செலவில் 218 உறைக்கிணறுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1.30 இலட்சம் செலவில் 65 கிணற்றுல் ஆழ் குழாய் அமைக்கும் பண்கள் மேற் கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. நகராட்சிகள், ஊராட்சிப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு ரூ. 2.25 இலட்சம் செலவில் லாரிகள் மூலமாகக் குடி நீர் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ரூ. 87 இலட்சம் செலவில் 290 அடிபம்பு கள் போடப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே இம்மாவட்டத்தில் உள்ள 2029 அடி பம்புகள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. மாவட்ட ஆட்சித்தலைவரின் உத்தரவின் பேரில், பழுதடைந்த கைப்பம்புகளைப் பழுதை நீக்கிச் சரிசெய்ய மண்டல அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். ரூ. 53.5 இலட்சம் செலவில் 66 விசைப் பம்புகள் போடப்பட்டு வருகின் றன. ஏற்கெனவே உள்ள 361 விசைப் பம்புகளையும் சேர்த்து 427 விசைப்பம்புகள் இம்மாவட் டத்தில் போடப்பட்டுள்ளன.

இளையான்குடியில் ரூ. 71 இலட் சம செலவிலும், கண்டனூா புது வயலில் 51.56 இலட்சம் செல விலும், திருமணவயலில் ரூ.39.2 இலட்சம் செலவிலும் கூட்டுக் குடி நீர்த்திட்டம் முடிவுற்றது. தாய மங்களத்திலுள்ள கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின்மூலம் ரூ.5 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்பட்டு 67 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப் பட்டு வருகின்றது. கோட்டை யூரில் ரூ. 43.5 இலட்சம் செல விலான கூட்டுக் குடிநீர்த்திட்டம் செயல்பட உள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 3 கோடி செலவில் 165 கைப்பம்புகளும், 220 விசைப் பம்புகளும், 300 கிராமங்களில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட் டுள்ளது.

டி. இளங்கோவன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
பசும்பொன் முத்து ராமலிங்கம்
மாவட்டம்

லாரிகளில் குடிநீர் வழங்குதல் போன்றவற்றின் மூலமாக இம்மாவட்டத்தில் ஏற்பட்டிருந்த குடிநீர்ப் பற்றாக்குறை போக்கப்பட்டு வருகிறது. மேலும் விசைப் பம்பிற்காக 6 அங்குலக் குழாய் மூலம் அமைக்கப்பட்ட ஆழ் குழாய்க் கிணற்றில் விசைப்பம்பு அமைப்பதற்கு ஏற்படும் கால அளவில், அந்த ஆழ்குழாயில் கைப்பம்பு அமைத்து அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தீவனமும் குடிநீரும் இல்லாததால் கால்நடைகளை வெளி மாநிலங்களில் விற்க நேரும் நிலையைத் தவிர்க்க, அண்டை மாவட்டங்களில் வைக்கோல் வாங்கி அதே விலைக்கு ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக விற்கப் பட்டு வருகிறது. வைக்கோல் கொண்டுவருவதற்கான போக்கு வரத்துச் செலவுகளை அரசே ஏற்றுக்கொள்கிறது. இந்தத்திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப் படுவதால் விவசாயிகள் பயன் பெற்று, கால்நடைகளை நன்கு பராமரிக்கிறார்கள்.


# தென்மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு

தமிழ்நாட்டில் போதிய மழை பெய்யாததால் மாவட்டங்களில் குடிநீர்த் தட்டுப்பாடும், வறட்சி நிலையும் ஏற்பட்டுள்ளன. குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கான வழிமுறைகளைப் பற்றி ஆலோசிக்க தென்மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாடு 28.5.87 அன்று புதுக்கோட்டையில் நடை பெற்றது.

இம்மாநாட்டில் திருச்சிராப்பள்ளி தஞ்சாவூர், புதுக்கோட்டை இராமநாதபுரம், மதுரை, பசும்பொன் முத்துராமலிங்கம், அண்ணா, காமராசர், திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களின் ஆட்சித்தலைவர்கள் பங்கேற்றனர்.

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு.எஸ். திருநாவுக்கரசு அவர்களும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு எஸ்.டி. உக்கம்சந்த் அவர்களும் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

வறட்சி நிலவும் மாவட்டங்களில் குடி தண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு தீவிர நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.



மாநாட்டில் மேலும் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:

கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் நீர் கிடைக்காமல் இருந்தால் வேறு இடங்களில் தண்ணீர் கண்டு பிடிக்கப்பட்டு தற்காலிக மேல் நிலைத் தொட்டி அமைக்கப்படும். உடனடி குழாய் இணைப்புகள் கொடுக்கப்படும்.

தமிழ்நாட்டில் 2 ஆயிரம் கிணறுகள் தோண்ட அரசு திட்டமிட்டு, அதில் 1,995 முடிக்கப் பட்டுவிட்டன. 2வது கட்டமாக 1,826 கிணறுகள் அமைக்கும்திட்டம்உள்ளது. அதில் 800 முடிக்கப்பட்டு விட்டது. மற்றவைகள் ஜூன் மாதம் முடிவடையும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 250 முதல் 360 வரை கிணறுகள் அமைக்கப்படும். புதுக்கோட்டை மாவட்டத்தில் மேலும் 100 கிணறுகள் வரை தோண்டப்படும்.

85 முதல் 87 வரை 6500 குடியிருப்புகளுக்கு, குடி தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. 87 முதல் 88 வரை 4500 குடியிருப்புகளுக்குக் குடி தண்ணீர் வழங்கப் படும். இதற்காக ரூ. 47 கோடி செலவிடப்படும். மாநாடு முடிந்த பிறகு மேற்கண்ட தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

# தமிழால் முடியும்

**மாண்புமிகு சுற்றுலா மற்றும் மின்துறை அமைச்சர்**
**திரு வி. வி. சுவாமிநாதன்**



"காலஞ்சென்ற திவான் பகதூர் டி. எம். சரவணபவாநந்தம் பிள்ளை தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றினார். அவர் "பவாநந்தர் கழகத்தை" நிறுவி தனது சொந்த இடத்திலேயே நூலகத்தையும் ஏற்படுத்தினார்.

"தமிழ் தொடர்பான புத்தகங்களை எல்லாம் தமிழக மக்கள் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு நூலகத்தைத் தொடங்கினார். 1916-ஆம் ஆண்டிலேயே தமிழில் உள்ள இலக்கியங்களையும், இலக்கணத்தையும் புத்தகமாக வெளியிட்டார்.

"படித்தவர்கள் ஆங்கிலத்தில் தான் பேசுவது பெருமை என்று அந்தக் காலத்தில் எண்ணி வந்தார்கள். திவான் பகதூர்தமிழ்ப்பற்றுடையவராக இருந்து, தமிழுக்குத் தொண்டாற்றினார் என்றால் அது பாராட்டுக்கு உரிய செயலாகும்.

"தாய்மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்த நாடுகள் முன்னேறி வருகின்றன. பேரறிஞர் அண்ணாகூட தமிழ் இலக்கியத்தால் மக்களை ஈர்த்தார். பட்டி தொட்டிகளிலே எல்லாம் தமிழில் சிறப்பாகப்பேசி, மக்களைக் கவர்ந்து ஆட்சியைப் பிடித்தார்.

"தமிழால் எதுவும் செய்ய முடியாது என்று கருதுகிறார்கள். அந்த எண்ணத்தை மாற்ற வேண்டும். பொறியியல் துறையிலும் மருத்துவத்துறையிலும் தமிழ்மொழியைப் பயன்படுத்த முடியாது என்று சிலர் கருதுகிறார்கள். எதையும் தமிழில் கற்க முடியும் என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

"மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பாடங்களைத் தமிழில் சொல்லிக் கொடுக்கத் தேவையான நடவடிக்கைகளையும், முயற்சிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும்".

[சென்னை வேப்பேரியிலுள்ள பவானந்தர் இலக்கியக் கழகத்தின் சார்பில் 25.4.87 அன்று நூலகத்தை மாண்புமிகு சுற்றுலா மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் திறந்து வைத்து ஆற்றிய உரையிலிருந்து]

## திவான்பகதூர் டி. எம். சரவணபவாநந்தம்.

கர்னல் டி. வெல்டன், சி.ஐ.சி. அவர்கள் அக்காலத்துச் சென்னை காவல்துறை ஆணையாளராய் விளங்கினார். காவற் படையின் வலிமையினையும், திறமையினையும் பெருக்கக் கருதிய அவர், கல்வியில் தேர்ந்த இளைஞரைக் காவற்படையில் சேர்க்க விரும்பினார்; தக்க இளைஞரைத் தேர்ந்தெடுக்கத் தேர்வு ஒன்றினை நடத்தினார். அதில் பவாநந்தம் பிள்ளை அவர்கள் முதல்வராய்த் தேர்ந்தார். கர்னல் வெல்டன் துரை பெரிதும் மகிழ்ந்து, அவர்களைக் குற்றவியல் துறைக்குத் தம் நேர்முகச் செயலராய் நியமித்துக் கொண்டார்.

1904 முதல் 1912 வரை சென்னை நகரக் காவல் குற்றவியல் துறைத் தலைவராய் விளங்கி அரிய சேவை செய்தார்.

மேதகு வேல்ஸ் இளவரசரும், இளவரசியும் 1906 சனவரித் திங்கள் சென்னையில் தங்கியிருந்தபோது, அவர்களுக்கு பவாநந்தம் பிள்ளை அவர்கள் மெய்க்காப்பாளராய்த் திகழ்ந்தார். இவர் செயல்திறனை வியந்த இளவரசர், தம் திருக்கைகளாலேயே சிறப்பு விருது ஒன்றினை அளித்து, அதற்குரிய பதக்கத்தினையும் அணிவித்தார். மின்டோ பிரபுவும், ஹார்டிஞ்சு பிரபுவும் சென்னையில் தங்கி இருந்தபோதும் இவரே அவர்களுக்கு மெய்க்காப்பாளராய் விளங்கி, அவர்கள் போற்றும் வகையில் செயலாற்றினார். 1918-இல் தென்சென்னைக் காவற்படைத் தலைமைப் பிரதிநிதியாய் விளங்கி, இவராற்றிய பணிகளை அரசினர் பெரிதும் பாராட்டினர். இவ்வாறு 35 ஆண்டுகள் இவராற்றிய அரிய தொண்டுகளைத் தம் அறிக்கைகளிலும், இரண்டு அரசு இதழ்களிலும் வெளியிட்டு அரசினர் பெருமை கொண்டனர்.

1889-இல் காவல் துறையில் புகுந்த இவர், படிப்படியே உயர்ந்து 1908-இல் உதவி ஆணையர் பதவியினையும், 1918-இல் துணை ஆணையர் பதவியினையும் மேற்கொண்டார்.


மாட்சிமை தங்கிய சக்கரவர்த்திக்கும், அரசிற்கும், நாட்டிற்கும் இவராற்றிய நற்பணிகளைப் போற்றும் வகையில் திங்கள்தோறும் அறுநூறு ரூபாய் வருவாய் தரத்தக்க ஜாகீர் ஒன்றினையும் தம் வாழ்நாள் வரை இவர் அனுபவிக்குமாறு அரசு இவருக்கு அளித்தது. 12-4-1922 முதல் அஃது இவர் ஆளுகைக்கீழ் வந்தது.

இவர் தூய பிரம்மச்சாரி; பழகுதற் கினியர்; நற்பண்புகளுக்கு உறைவிடம்;, கலையுணர்வு மிக்கவர்; இன்மொழியினர்; நுண்ணிய கேள்வியர்; வள்ளன்மை மிக்கவர்; அன்னார் 2-5-1932இல் இயற்கையெய்தினார்.


# இந்தியக் குடியரசுத் தலைவர் தமிழ்நாட்டுக்கு வருகை



மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில்சிங் அவர்கள் 24.5 87 அன்று சென்னைக்கு வருகை தந்தபோது, மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களும், மாண்புமிகு சுற்றுலா மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி. வி. சுவாமிநாதன் அவர்களும் சென்னை விமான நிலையத்தில் வரவேற்றனர்.



ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி ஆலயத்திற்கு வருகை புரிந்தபோது (25.5.87)



தஞ்சை பெரியகோவிலுக்கு வருகை புரிந்தபோது (25.5.87)

தஞ்சாவூரில் தந்தை பெரியார் நூற்றாண்டு நினைவு மகளிர் பல்தொழில் பயிலகத்தின் விடுதிக் கட்டடத்தைத் திறந்துவைத்த போது (25.5.87)





சென்னை அறிஞர் அண்ணா நகரில், அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரிக் கட்டடத்தைத் திறந்துவைத்த போது (26.5.87)



தமிழ்நாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு புதுடெல்லி புறப்பட்ட மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களை, மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களும் 26.5.87 அன்று சென்னை விமான நிலையத்தில் வழியனுப்பி வைத்தார்கள்.

# அண்ணாவின் இலட்சியத்தை நிலைநிறுத்துவீர்!

**மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில்சிங்**

"1985-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27-ந்தேதி இந்தக் கல்லூரிக்கு நான் அடிக்கல் நாட்டினேன். இப்போது மிகப்பெரிய கட்டடமாக இது வளர்ந்து இருப்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

"பெண்கள் கல்விக்காக ரூ.1 கோடி செலவில் இந்தக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. இது சமுதாயத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்கு வகிக்கும். வறுமை, பசி, நோய், அறியாமை ஆகியவற்றை எதிர்த்துப் போராடிய தலைவர்களில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் அண்ணா. அவருடைய உயர்ந்த நோக்கங்களுக்கு இந்தக் கல்லூரிக் கட்டடம் மாபெரும் பரிசாக இருக்கும்.

"அண்ணாவுக்கு மரியாதை செலுத்தும் வகையில் பஞ்சாப் சங்கம் இந்தக் கல்லூரியை உருவாக்கி இருக்கிறது. இந்த மாதிரியான கல்லூரிகள் மாபெரும் தலைவர்களின் நினைவுச் சின்னமாக நின்று விடாமல், நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு ஏற்ற வகையில் செயல்படவேண்டும்.

"பெண்களுக்கு எங்கு அதிக மரியாதையும், மதிப்பும் கொடுக்கப்படுகிறதோ, அந்த நாடு வேகமாக முன்னேற்றம் அடைகிறது. நமது தேசத் தலைவர்களான ராஜாராம் மோகன்ராய், சுவாமி விவேகானந்தர், ரவீந்திரநாத் தாகூர், ஜவகர்லால் நேரு ஆகியோர், பெண்கள் கல்வியின் அவசியத்தை வற்புறுத்தி வந்தார்கள். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, பெண்கள் கல்வியில் மிகப்பெரிய வளர்ச்சியை நாம் அடைந்து இருக்கிறோம். இதை நாம் முழுமையாக அடைய நாம் எவ்வளவோ தூரம் போக வேண்டி இருக்கிறது. இப்போது பெண்கள், பத்திரிகை, காவல் ஆகிய துறைகளிலும், மற்ற துறைகளிலும் உயர் அதிகாரிகளாப் பணிபுரிந்து வருகிறார்கள்.

"பெண்களுக்காகத் தொடங்கப்பட்ட இந்தக் கல்லூரிக்கு மறைந்த அண்ணா பெயரை பஞ்சாப் சங்கம் சூட்டி இருப்பதை எண்ணிப் பாராட்டுகிறேன். இந்தக் கல்லூரியில் படிக்கும் மாணவிகள், அண்ணாவின் லட்சியத்தை நிலைநிறுத்தி, தாய்நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வலுப்படுத்தப் பாடுபடுவார்கள் என நம்புகிறேன்.

"இந்திய நாட்டின் எந்தப் பகுதியிலும் மொழி வேறுபாடின்றி வசிக்க உரிமை உண்டு. ஆனால் அந்த மாநில மக்களுடன் மக்களாக இணைந்து அவர்களின் வளர்ச்சிக்கு உதவ முயற்சிக்க வேண்டும். அந்த வகையில் பஞ்சாப் சங்கம் தமிழ்நாட்டில் 75 நிறுவனங்களை நடத்தி, தமிழக மக்களுக்குச் சேவை செய்து வருவதைப் பாராட்டுகிறேன்.

"நட்புக்கும், சகோதரத்துவத்துக்கும் நாம் மதிப்பு அளிக்க வேண்டும். நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்கச் சிலர் முனைகிறார்கள். அவர்கள் தேச விரோதிகள். ஜனநாயக நாட்டில் கருத்து வேறுபாடு இருப்பது இயற்கை. ஆனால் அந்தக் கருத்துவேறுபாடு அண்ணன்-தம்பிகளுக்கு இடையே உள்ள கருத்து வேறுபாடுகளாக இருக்க வேண்டுமே தவிர, பகையை வளர்க்கின்ற வகையில் இருக்கக்கூடாது. நமது நாட்டின் நலனுக்காக எந்தத் தியாகத்தையும் நாம் செய்யத் தயாராக இருக்க வேண்டும்.

[சென்னை அண்ணா நகரில் உள்ள அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரிக் கட்டடத்தைத் திறந்து வைத்து (26.5.87) மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)

## நூலக வேலை நேரம் சீரமைப்பு

தமிழ்நாட்டில் உள்ள நூலகங்கள் ஒரே சீரான வேலை நேரத்தில் இயங்க வேண்டும் என்ற நூலக ஆணைக்குழு ஊழியர்களின் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாணையின்படி நூலகங்கள் காலை 8 மணிமுதல் 11 மணி வரையிலும் பிற்பகல் 4 மணிமுதல் 7.30 மணி வரையிலும் இயங்கும்.

மாவட்ட நூலகங்களைத் துப்புரவு செய்வதற்கும், குடிதண்ணீர் வைப்பதற்கும் பகுதி நேர ஊழியரை அமர்த்திக் கொள்ளவும் அரசு ஆணையிட்டுள்ளது.

## 1987-88-ஆம் ஆண்டில் குடிநீர் வசதிக்கென ரூ 46 கோடி

தமிழகக் கிராமங்களிலுள்ள 2 ஆயிரத்து 834 குடியிருப்புகளுக்கு ரூ 22 கோடியே 2 இலட்சம் செலவில் 1985-86ஆம் ஆண்டில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. 1986-87-ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 837 குடியிருப்புகளுக்கு ரூ. 48 கோடியே 13 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

1987-88 ஆம் ஆண்டில் ரூ 46 கோடியே 87 இலட்சம் செலவில் 4 ஆயிரத்து 200 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரத் திட்டமிடப்பட்டுள்ளது.





# "திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்"

வற்றாத பொருளையும், குன்றாத செழுமையும் தன்னகத்தே கொண்ட நெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடந்த பல மாதங்களாக, குடிதண்ணீருக்கான நீர் நிலைகள் வறண்ட நிலையில், குடிநீர் பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ளது. பொது மக்களுக்காக தமிழ்நாடு அரசின் உத்தரவின் படி போர்க்கால நடவடிக்கைகள் மூலம் துரித மாக நிவாரணப் பணிகள் நடைபெற்று வரு கின்றன.

1986-87-ஆம் ஆண்டில் வறட்சி நிவா ரணத் திட்டத்தில் ரூ. 72.68 இலட்சம் செலவில் 284 ஆழ்குழாய்க் கிணறுகள் இது வரை அமைக்கப்பட்டுள்ளன.

24 மாற்று ஆழ்குழாய்கள் அமைப்பதற்கு ரூ. 6 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சிப் பகுதிகளில் 2 புதிய கிணறுகள் அமைத்திட ரூ. 1.20 இலட்சம் செலவு செய் யப்பட்டுள்ளது.

1986-87-ஆம் ஆண்டில் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக 621 பணிகள் ரூபாய் 39.92 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள் ளன.

லாரி, டிராக்டர், வண்டி மூலம் குடிநீர் விநியோகம் நகராட்சிப் பகுதிகளுக்கு ரூபாய் 2.68 இலட்சம் செலவிலும், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு ரூ. 36 ஆயிரம் செல விலும் செய்யப்பட்டுள்ளது.

மேலும் குடிநீர் ஆதாரங்களை அபி விருத்தி செய்ய நகராட்சிப் பகுதிகளுக்கு ரூபாய் 9 இலட்சமும், பேரூராட்சிப் பகுதி களுக்கு ரூ. 2.15 இலட்சமும் செலவு செய்யப் பட்டுள்ளது.

# நெல்லை பால் வளத்தின் ஓராண்டுச் சாதனை

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத் தலைநகரில் அமைந்திருக்கும் நெல்லை பால்வள ஒன்றியத்திற்கு 23-5-86-ல் நாள் ஒன்றுக்கு 7000 லிட்டர் பால்மட்டுமே உற்பத்தியாளர்களிடமிருந்து கிடைத்து வந்தது. ஆனால் தற்போது நாள் ஒன்றுக்கு 40,000 லிட்டர் பால் உறபத்தியாகி வருகிறது.

1985-86-ல் நெல்லை பால்வள ஒன்றியத்திற்கு தேவைக்கதிகமான பாலை, மதுரை பால்வள ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு பவுடராக்கியதில் இவ்வொன்றியத்திற்கு ரூ. 11 இலட்சம் நஷ்டம ஏற்பட்டது. இந்த ஒரு வருடத்தில் இந்த நஷ்டத்தை ஈடுசெய்து சுமார் 5 லட்சத்திற்கு மேல் லாபத்தில் நெல்லை பால் வள ஒன்றியம் இயங்கி வருகிறது.

மேலும், தற்போது 26 ஆயிரம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மீதமுள்ள பால் கன்னியாகுமரி, மதுரை ஒன்றியங்களுக்கு விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

நெல்லை பால்வள ஒன்றிய உற்பத்தியாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு வருகின்ற பால் எந்தக் கலப்படமும் செய்யப்படாமல் அப்படியே ஒன்றியத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும் எனவும், எல்லாக் கேன்களும் சீல் செய்த நிலையில் கொண்டு வருதல் வேண்டும் என ஆணையிடப்பட்டு அடிக்கடி நேரிடையாகச் சென்று சோதனை செய்யப்படுகிறது. அவ்வாறே விற்பனைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றபாக் கட்டுகளிலும் தவறுகள் நடைபெறக்கூடாது என்றும், பாக்கெட்டுகள் உடைக்கப் பெற்ற நிலையில் விநியோகம் செய்யக்கூடாது என்றும் உத்தரவிடப்பட்டு அவ்வப்போது சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

திருநெல்வேலி கட்டபொம்மன் ஆட்சித் தலைவரிடமிருந்து 20 ஏக்கர் நிலத்தைப் புல் வளர்ப்பதற்காக வாங்கப்பட்டு 20 வருடம் அவற்றைப் பயன்படுத்தவும் அவ்வாறே சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து 20 ஏக்கர் பட்டா நிலம் வாங்குவதற்கான உத்தரவு பெறப்பட்டு, புல் வளர்க்கும் பணி தொடங்கப்பட உள்ளது.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 7.05 கோடி, பால்வள ஒன்றியத்தில் வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்காகவும் பெறப்பட்டுள்ளது.

விதவைப் பெண்களுக்கும், கைவிடப்பட்ட பெண்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழைகளுக்கும், இலங்கையிலிருந்து வந்த அகதிகள், உடல் ஊனமுற்றோர் ஆக மொத்தம் 32 நபர்களுக்கு பாலகம் அமைக்கும் கடைகளுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1987-88-ஆம் ஆண்டிற்கு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை ரூ. 12.49 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சிப் பகுதிகளுக்கு ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ. 88 ஆயிரம் வரை செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 420 கிணறுகள் ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் ஆழப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது.

1987-88-ஆம் ஆண்டிற்கு 250 ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்க அனுமதி கிடைத்து 170 பணிகள் இதுவரை முடிவுற்றுள்ளன.

இவை தவிர குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக நார்மல் திட்டத்தின்கீழ் 211 ஆழ் குழாய்க் கிணறு போடுவதற்கு அனுமதி கிடைக்கப் பெற்று, இதுவரை 67 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

லாரி, வண்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ. 7.90 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் 50 புதிய கிணறுகள் வெட்ட ரூ. 15 இலட்சம் அனுமதிக்கப்பட்டு எல்லா வேலைகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும் வட்டக் கிணறுகள் வெட்டுவதற்கு ரூ. 2 இலட்சம் அனுமதிக்கப்பட்டு குருவிகுளம், நாங்குனேரி, மானூர், பாளையங்கோட்டை, வள்ளியூர் ஆகிய ஒன்றியங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கிராமப்புற மக்களுக்கு வறட்சிக் காலங்களில் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு கருதி பல்வேறு வேலைவாய்ப்பளிக்கும் திட்டங்களை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ. 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்று 272 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக இதுவரை ரூ. 16.17 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறையின் மூலம் ரூ. 7 இலட்சம் செலவில் 38 பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதுவரை 3.69 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. விவசாயப் பொறியியல் துறையின் மூலமாக ரூ. 2 இலட்சம் செலவில் 3 பணிகள் எடுக்கப்பட்டு, பணி முன்னேற்றத்திலுள்ளது.

மேலும் 663 வேலைகள் நடைபெற ரூ. 190.41 இலட்சம் நிதி ஒதுக்கீடு கேட்டு தமிழ்நாடு அரசிற்குத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மு. அண்ணாமலை
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி.

# நூல் நயம்

### கலைவாணர் என்.எஸ்.கே.

தொகுப்பு: கழஞ்சூர் செல்வராஜ்

வெளியீடு: குத்தூசி குருசாமி பதிப்பகம், வேலூர், வடஆர்க்காடு மாவட்டம்.

விலை ரூ.100 பக்கம்894

'கலைவாணர் ஒரு சகாப்தம்' என்று குறிப்பிட்டார் பேரறிஞர் அண்ணா. கலைவாணர் ஒரு துறையில் மட்டுமல்ல, பலதுறைகளிலும் வல்லவராக விளங்கியிருக்கிறார். பலரையும் கவர்ந்திருக்கிறார்.

கலைவாணரின் வாழ்க்கை வரலாறு, கலைவாணரைக் குறித்துக் கவிஞர்கள் தீட்டிய கவிதைகள், எழுத்தாளர்கள், கலையுலகப் பெருமக்களின் கட்டுரைகள் ஆகிய அனைத்தும் தொகுக்கப்பெற்று சுவைக் களஞ்சியமாகத் திகழ்கிறது. இந்நூல்.

பல்வேறு அறிஞர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு கால கட்டங்களில் கலைவாணரைக் குறித்து எழுதிய கருத்து மணிகளை இந்நூலில் ஒருசேரக் காண முடிகிறது. கலைவாணர் அவ்வப்போது இதழ்களில் எழுதிய கட்டுரைகளும், வானொலியில் ஆற்றிய உரைகளும் இந்நூலுக்கு அணிசேர்க்கின்றன.

கலைவாணர் சம்பந்தப்பட்ட அபூர்வமான புகைப்படங்கள், கலைவாணர் பல பிரமுகர்களுக்கு எழுதிய கடிதங்கள் ஆகியவை நூலின் சிறப்பம்சங்கள் ஆகும்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் இந்நூலுக்கு அளித்துள்ள அணிந்துரைகள் நூலுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

இந்நூலைத் தொகுக்க மேற்கொண்ட முயற்சி குறித்துத் தொகுப்பாசிரியர் எழுதியுள்ள கட்டுரையின் மூலம் அவரது உழைப்பையும் அறிந்துகொண்டதுடன் அவர் பட்ட சிரமத்தையும், சில இடங்களில் ஏற்பட்ட தொல்லையையும்நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

மொத்தத்தில் கலைவாணரி குறித்த 'என்சைக்ளோபிடியா'வாக இந்நூல் திகழ்கிறது.


—எஸ். எஸ். சுந்தரம்

### புலமைப் புறா

ஆசிரியர் : சேயோன்

வெளியீடு: முரளி பதிப்பகம், 3/61 காரணீசுவரர் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004.

விலை : ரூ. 11. பக்.144



'புலமைப்புறா' இலக்கிய நயம் செறிந்த இன்றமிழ் நூல். வளமார் வாழ்வுக்கு வழி காட்டும் தொல்காப்பியம் கூறுகின்ற வாழ்வியல் சிந்தனைகள் இந்நூலில் நன்முறையில் தெளிவாக்கப்பட்டுள்ளன.

குறள் வழி நின்று சிறந்தொளிரும் சிலம்பு போன்ற இலக்கியங்களின் உயர்ந்த கருத்துக்கள் இதனுள் சுவைபட விளக்கப்பட்டுள்ளன. பவணந்தியார் குறிப்பிடும் ஆசிரியர்-மாணவர்க்குரிய விதிகளும் தகுதிகளும் உறவும் என்றென்றும் அனைவர் உள்ளங்களிலும் இடம் பெற வேண்டியவை என்பதை, 'நன்னூல் நவிலும் நன்னெறிகள்' எனும் கட்டுரை மூலம் உணர்த்துகின்றார் ஆசிரியர்.




உலகெங்கும் அமைதி வேண்டி நிற்கும் இந்நூலில், அன்றைய அமைதிப் புறாக்களாக இலங்கிய புலவர் பெருமக்களின் புலமையும் நுண்ணறிவும் அழகுறப் புலப்படுத்தப்பட்டுள்ளன' 'புலமைப்புறா' எனும் கட்டுரையில்.

'அம்புலியின் அற்புதங்கள்' எனும் கட்டுரையில் பலபிள்ளைத் தமிழிலுள்ள அம்புலிப் பருவப் பாடல்கள் அழகுற விளக்கப்பட்டுள்ளன.

'சங்ககால-இடைக் கால—தற்கால இலக்கியக் கருத்துமுத்துகள் பின்னிப்பிணைக்கப்பட்டு அழகுற மிளிர்கின்றன.

—டாக்டர் சிவ அரசி முத்துக்காளத்தி

### சுக்கு, மிளகு, திப்பிலி சுலப வைத்தியம்

ஆசிரியர்: டாக்டர் திருமலைநடராசன்

வெளியீடு: தமிழ்ச்செல்வி நிலையம்; 133, சித்திரைக்குளம்வடக்குத் தெரு, மயிலாப்பூர், சென்னை-4

விலை: ரூ.5 பக்கம் : 68

சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றில் எவ்வாறான சத்துக்களெல்லாம் இருக்கின்றன; எப்படிப்பட்ட மருத்துவக் குணங்களெல்லாம் உள்ளன; எது போன்ற உடல் உபாதைகளையெல்லாம் அவை நிவர்த்திக்க உதவுகின்றன என்பதை மருத்துவ ரீதியில் ஆராய்ந்து இந்நூலில் எழுதியிருக்கிறார் ஆசிரியர்.

தன்னுடைய முன்னுரையைத் தொடர்ந்து இராமலிங்க அடிகளார் எழுதிய 'நித்திய ஒழுக்கம்' என்னும் உலகியல் உணவு ஆகார வகை' என்ற கட்டுரை இணைக்கப்பட்டிருக்கிறது நூலுக்குச் சிறப்புச் சேர்ப்பதாக உள்ளது. நாம் நோயின்றி வாழநம்முடைய உணவில் என்னவெல்லாம் சேர்க்கலாம், எதையெல்லாம் நீக்கலாம் என்று வடலூரார் அந்தக் கட்டுரையில் வகைபடச் சொல்லியிருக்கிறார். படித்துப் பயன் பெறலாம்.

— இந்திரன்

### மன அமைதிக்குக் குறள் காட்டும் வழி

ஆசிரியர் : பி.சி. கணேசன்,

வெளியீடு: குமரிப் பதிப்பகம், 20 பெருமாள்தெற்கு வீதி. நாகப்பட்டினம்-511 001.

பக்: 84. விலை ரூ. 5.75

உள்ள அமைதியும் உடல் நலமும், நீடித்த நல்வாழ்வுக்கு வழி வகுக்கும்.

மனநிம்மதிக்கு உலை வைக்கும் எந்தவித ஊறுக்கும் இடங் கொடாது வாழும் வாழ்க்கைக்கு வழித் துணை இந்நூல். ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் வள்ளுவர் குறள் மூலம் எடுத்தியம்பிய கருத்துக்கள் ஆசிரியரின் எண்ணங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

நல்ல பல அறிவுரைகளைக் கொண்ட இந்நூலைப் படித்துப் பயன்பெறலாம்.

**உயிர்காக்கும் உண்ணாநோன்பு**

ஆசிரியர் : சி. சுப்பிரமணியம்

வெளியீடு: தமிழ்நாடு இயற்கை மருத்துவ சங்கம் மதுரை-625020.

பக்: 92. விலை: ரூ. 5.

ஒரு தொழிற்சாலைபோல இடைவிடாமல் இயங்கிக்கொண்டிருக்கும் குடலின் மற்றும் உடல் உறுப்புகளின் நீடித்த செயல் பாட்டுக்கு உதவும் உண்ணா நோன்பின் அவசியம் இந்நூலில் விளக்கப்படுகிறது. செழுமையான உடல்நலத்திற்கு ஓர் எளிய முறையான உண்ணாநோன்பு நம் பழந்தமிழர் பழக்க வழக்கங்களில் ஒன்று.

நமக்கு நீடித்த ஆயுளை வழங்க இந்நூல் துணை புரியும்.

—வி. இராவணன்

**சிந்து முதல் கங்கை வரை**

ஆசிரியர்: ராகுல சாங்கிருத்தியாயன்

வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600092

விலை: ரூ.35 பக்கம்:472

செங்கற்களில் பிராமி எழுத்தில் காணப்பட்ட குறிப்புக்களைக் கொண்டு அரிதின் முயன்று எழுதப்பட்ட வரலாற்று நாவல். கி.மு.5ஆம் நூற்றாண்டை ஒட்டியது.

வைசாலி நாட்டைச் சேர்ந்த பிரதம சேனாபதியான சிம்மனின் வாழக்கை வரலாற்றையும், அவன் காலத்தையும் உணர்த்துவது. அவன் வாழ்க்கையில் நிகழ்ந்த பலவேறு நிகழச்சிகளும், போரும், போர்க்களங்களும் வணிகர் நிலையும் பிறவும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. வரலாற்று நூலில் காதல் வாழ்வும் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

என்றாலும் இந்நாவலின் சில பகுதிகளில் வரும் சில வகுப்பாரின் பழக்க வழக்கங்கள் இன்றைய நிலைக்கு ஒவ்வாதனவாகவே உள்ளன. அவை அந்தக் காலப்பழக்க வழக்கங்கள் என்ற அளவிலேயே கொள்ளத்தக்கன. மிக விளக்கமாக அமைந்துள்ள சுவையான, சிறந்த வரலாற்று நாவல்.

— எம். ஆர். சி.

> **உண்மையின் பெருங்கடல் நம்மால் அறியப்படாமல் பரந்து கிடக்கின்றது. நாமோ, கடற்கரையில் விளையாடி, அங்குமிங்கும் ஓடி, அழகான ஒரு சிப்பியையும் மெல்லிய ஒரு கடற்பாசியையும் கண்டு மகிழ்ந்து நிற்கும் சிறு குழந்தைகளைப் போல் இருக்கிறோம்.**
>
> **—ஆவ்பரி**

**குகாநூறு**

ஆசிரியர் : திருச்சி பாரதன்

வெளியீடு: சரவணா பிரசுரம் 2497, தெற்கு ராஜ வீதி புதுக்கோட்டை- 622 001.

விலை : ரூ. 14. பக்: 150.

அழகன் முருகனுக்கு அன்னைத் தமிழில் பாமாலை சூடி மகிழ்கிறார் ஆசிரியர். அவன் அருமை பெருமைகளை அன்பர்கட்கு அருள்புரியும் அவன் ஆற்றலை ஒவ்வொரு வரியிலும் படித்துத் தெரிந்து கொள்கிறோம்.

ஆறுபத்து வீடுடைய அழகன், படை வீடுறை காவலன், ஸ்கந்தகிரி வேலன், போற்றி சூழ் புனிதன், தண்ணொளிர் தலங்கள்-இப்படிப் பல தலைப்புகளில் திருமுருகனின் திருவிளையாடல்களை, தெய்வத் தன்மைகளை அழகுபட விவரிக்கிறது இந்நூல். முருக அன்பர் மட்டுமல்ல, கவிதை ஆர்வம் மிக்கோரும் படித்து மகிழலாம்.

**அறிஞர் அண்ணாவும் அருமைக் குழந்தைகளும்**

ஆசிரியர்: எஸ்.குலசேகரன்

வெளியீடு: அமிழ்தம் பதிப்பகம், 15, முத்துப்பிள்ளைத் தெரு, வ.உ.சி நகர், வேலூர்-1 (வ.ஆ)

விலை: ரூ.9 பக்கம்:97

எழுத்திலும், பேச்சிலும்இணையற்றவராகத் திகழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவரது எழுத்துக்கள், பேச்சுக்கள் எல்லாமே இலக்கியங்களாக விளங்கின.

அண்ணல் காந்தியடிகள், பண்டித நேரு, தந்தை பெரியார், சர் பிட்டி தியாகராயர், பாவேந்தர் பாரதிதாசனார், டாக்டர். மு.வ., கலைவாணர் என்.எஸ். கே. ஆகியோர் பற்றிய குறிப்புகளும், அவர்களைப் பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்துக்களும் நூலில் அழகாகத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கட்டுரையின் முடிவிலும், நூலாசிரியர் தம் கருத்துக்களை, அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. மாணவர்கள் படித்துப் பயன்பெறலாம்.

— பி.வி.ஜி.

**பூந்தோட்டக்கலை**

ஆசிரியர்கள்:

டாக்டர் ஆ. துரைப்பாண்டியன்

டாக்டர் சா.முத்துசாமி

வெளியீடு: நியூ செஞ்சரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ எஸ்டேட். சென்னை-600098.

விலை ரூ.15 பக்கம்: 136.

பூந்தோட்டக் கலையின் நுணுக்கங்களை எல்லோரும் அறியும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. பொதுவாக இது போன்ற நூல்கள் ஆங்கிலத்திலேயே வெளியிடப்பட்டுள்ளன. தமிழ் மட்டுமே படிக்கத் தெரிந்தோர்க்கும் பயன்படும் வகையில் இந்நூலை உருவாக்கிய முயற்சி பாராட்டத்தக்கது.

— அ. மருதவிநாயகம்

# தம்பி நீ உயர்க!



—சீ. பொன்ராஜ்

உயர உயரப் பறந்துபாரு சிறகுகள் விரியும்-நீ
உட்கார்ந்து சோம்பிவிட்டால் சக்தியும் குறையும்.
அயர்வில் லாத வாழ்க்கைதான் பொன்னான சொத்து-நல்ல
அறிவு சேர்க்கும் வள்ளுவரின் திருக்குறள் கொத்து!

கூவுகுயில் சோலை என்று இயற்கையை நேசி-பள்ளிக்
கூடந்தன்னில் சொல்லித்தந்த பாடத்தை வாசி.
மேவுபுகழ் பெறுவதற்கு வழிகளை யோசி-உன்னை
மேன்மேலும் உயர்த்துமடா பெரியவர் ஆசி!

வாழ்வில் நேரும் துன்பமெல்லாம் மெல்லிய தூசி-என்று
வாட்டமின்றி உழைத்தால்தான் வெற்றியின் காட்சி.
ஏழ்மை உலகில் மாறவேண்டும் என்று எண்ணடா-நம்மில்
எவரும் இங்குத் தாழவில்லை என்று சொல்லடா!

படித்ததெல்லாம் வாழ்க்கையிலே பயன்பட வேண்டும்-நீ
பாடுபட்டுப் பெரியவனாய் உயர்ந்திட வேண்டும்
எடுத்ததற்கும் கோபப்பட்டால் வாழ்க்கை வீணாகும்-நீ
எப்போதும் பொறுமைகொண்டால் வாக்கும் தேனாகும்!





# தெரிந்து கொள்ளுங்கள்

இலண்டனிலுள்ள 'தாமஸ் டிலாரு' என்ற கம்பெனி 1856-லிருந்து 1926 வரை இந்திய அஞ்சல் தலைகளை அச்சிட்டு வந்தது. பிறகு தான் இந்திய செக்யூரிட்டி பிரஸ் நாசிக்கில் நிறுவப்பட்டு இங்கேயே அஞ்சல் தலைகள் அச்சடிக்கப்பட்டன.

தபால் தலை வெளியிடுவது மூலமாக, காந்தியடிகளை முதன் முதலாக கௌரவித்த அன்னிய நாடு அமெரிக்கா தான். இங்கிலாந்தில் ஆங்கிலேயர் அல்லாத ஒருவரை தபால்தலை வெளியிடுவது மூலமாகக் கௌரவவித்ததும் காந்தியடிகளை மட்டும் தான்.

உலகின் முதலாவது அஞ்சல் தலை எது, அது எப்போது வெளி வந்தது தெரியுமா? பென்னி பிளேக்; 1840-ஆம் ஆண்டு மே 6ஆம் தேதி வெளி வந்தது.

ஆசியாவிலேயே வெளியாகிய முதல் அஞ்சல்தலை எது தெரியுமா? நமது நாட்டில் சிந்து மாகாணத்தின் (இப்பொழுது பாகிஸ்தான்) கமிஷனர் பார்ட்ஸ் ஃபெரேரா, 1852-ல் புழக்கத்துக்குக் கொண்டு வந்த காகித அஞ்சல் தலை தான்.

இரண்டாம் எலிசபெத்தின் பாட்டனாரான ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் தபால் தலை சேகரிப்பதில் பெரும் ஆர்வம் உள்ளவராயிருந்தார். அவர் சேகரித்து வைத்திருந்த விலை மதிப்பற்ற அபூர்வ தபால் தலைகளைக் கொண்ட 300 ஆல்பங்கள் பிரிட்டிஷ் மியூசியத்தில் பார்வைக்காக வைத்துள்ளனர்.

பொட்டாசியம் என்ற உலோகத்தைத் தண்ணீரில் போட்டால் அது மிதந்து இங்குமங்கும் அலைந்து கொண்டே தீப்பற்றி எரியத்தொடங்கும். காலியத்தை (Gallium) நம் உள்ளங்கையில் வைத்துக் கொண்டாலே அது நமது உடற் சூட்டினாலேயே உருகி விடும். சோடியம், காற்றுப் பட்டாலே பாதிப்புக்கு உள்ளாகும்.

தேன் சேகரிக்கும் பருவத்தில் ஒரு தேனீக் குடும்பம் குறைந்தது 250 கிலோ கிராம் தேனைச் சேகரித்து விடுகிறது. தேனில் 60 சதவிகிதம் நீர்தான் உள்ளது. சில தேனீக்கள் தேனை வாயில் அடக்கி வெப்பத்தை உண்டாக்கி நீரைத் தனியே பிரித்து வெளியேற்றி விடுவதுண்டு.

ஒளியைக் கொடுக்கும் பொருளின் ஒளிச் செறிவினைப் பொறுத்து அது செல்லும் தூரம் இருக்கும். ஒரு எரியும் தீக்குச்சியினைச் சில மீட்டர்கள் தொலைவிற்கு மட்டும் காணமுடியும். ஆனால் சூரியனிடமிருந்து வரும் ஒளி ஏறத்தாழ 150 மில்லியன் கி.மீ. தொலைவிற்குப் பயணமாகிறது.

அன்னாசிப் பழத்திற்கு விதைகள் கிடையாது. செடியின் உச்சியில் இருக்கும் முடியையோ, அடித்தண்டிலிருந்து கிளைக்கும் குருத்தையோ நட்டுத்தான் அன்னாசியைப் பயிரிட வேண்டும்.

—தொகுப்பு
ஆர். எஸ். சுப்பிரமணியன்

# இது உங்கள் பக்கம்



**மா**ணவ மணிகளே!

இது உங்கள் பக்கம்.

குட்டிக்கதைகள், கட்டுரைகள், பொது அறிவுத் துணுக்குகள், கவிதைகள் முதலானவை எழுதி அனுப்பலாம். கதை, கட்டுரை, கவிதைகள் சொந்தமானவையாக இருத்தல் வேண்டும். துணுக்குகளுக்கு ஆதாரம் இருத்தல் வேண்டும்.

கல்வியோடு கதை, கட்டுரை எழுதுதல், விளையாட்டு, நாடகம், ஓவியம், பேச்சு முதலானவற்றில் திறமையுள்ள மாணவ, மாணவிகள் தங்களைப் பற்றிய குறிப்புடன், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தையும் இணைத்து, வகுப்பு ஆசிரியர் கையொப்பமுடன் அனுப்பி வைக்கலாம்.

பள்ளி சார்பில் நடக்கும் நாட்டு நலப்பணித் திட்டம் (என். எஸ். எஸ்.) பற்றிய செய்திகளையும் புகைப்படத்துடன் ஆசிரியர்கள் அனுப்பி வைக்கலாம்.

—ஆசிரியர்.

# அறிவுச் சுடர்

1. அனிச்சைச் செயலைக் கட்டுப்படுத்துவது எது?
தண்டுவடம்.

2. எக்ஸ்ரே கதிர்களைக் கண்டறிந்தவர் யார்?
ரோண்ட்ஜன்

3. மூச்சு விடமுடியாமல் அவதியுறுவோருக்கும், மலையேறுவோர்க்கும் உயிர் காக்கும் மருந்து எது?
ஆக்ஸிஜன்.

4. 18 காரட், 22 காரட், 24 காரட் தங்கநகை வகைகளில் சுத்தமான தங்கம் எது?
24 காரட்.

5. கண்ணீரைச் சுரக்கும் சுரப்பி எது?
லேக்ரிமல்

6. வறண்ட நிலத் தாவரங்கள் என்றால் என்ன?
வறண்ட நிலத்தில் விளையும் சப்பாத்திக் கள்ளி, எருக்கு போன்ற தாவரங்கள்.

7. கலர் ஐஸ், மிட்டாய்களுக்கு இனிப்பு கொடுக்கக்கூடிய சாக்ரின் எதிலிருந்து செய்யப்படுகிறது.?
தாரிலிருந்து



8. பார்க்கர் என்ற பெயர் சம்பந்தப்பட்ட பொருள் என்ன?
பேனா.

9. சந்திரனில் இறங்கிய முதல் மனிதன் யார்?
நெயில் ஆம்ஸ்ட்ராங்.

10. துளசி இலையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் எதற்குப் பயன்படுகிறது?
பூச்சிகளைக் கொல்வதற்கு.

11. ஒரு கோழிக்குத் தினம் தேவைப்படும் உணவு, நீர் இவைகளின் அளவு என்ன?
உணவு 100 முதல் 120 கிராம்.
நீர் 200 முதல் 300 மில்லி.


12. வாசனைப் பொருள்கள் நான்கு கூறுக.
இஞ்சி, கொத்தமல்லி, ஏலம், இலவங்கம்.

13. மருந்துத் தாவரங்கள் 4 கூறுக
சின்கோனா, கீழாநெல்லி, துளசி, வில்வம்.

14. ஆசிரியர் தினம் யாருடைய பிறந்த நாளில் கொண்டாடப்படுகிறது?
டாக்டர் இராதாகிருஷ்ணன்.



15. ஜப்பானில் பிறந்த தற்காப்புக் கலை எது?
கராத்தே.



## விளையும் பயிர்

பெரியார் மாவட்டம், ஈரோடு கலைக் கல்லூரியில் இளம் வணிகவியல் இறுதியாண்டு பயிலும் மாணவர் கோ. இரா. செல்வன்.

தமிழார்வம் மிக்க இவர் கதை. கட்டுரை, கவிதை எழுதுவதுடன், பேச்சுப் போட்டிகளிலும் பரிசுகள் பெற்றுப் பலரின் பாராட்டுதல்களைப் பெற்று வருகிறார்.

## விந்தை விலங்குகள்

'ஆக்டோபஸ்' (octopus) என்றால் 'எட்டுக் கால்களைக் கொண்ட' என்று பொருள். இவ்விலங்குகளுக்கு தலையிலிருந்து கால்கள் முளைத்திருப்பதுபோலத் தோன்றும். எனவே இவ்விலங்குகளை உள்ளடக்கிய குடும்பத்திற்கு 'கெஃபாலோபாட்' (cephalopod) என்று விலங்கியலார் பெயரிட்டனர். இச்சொல்லுக்குத் தலையில் கால்களைக் கொண்டவை என்று பொருள்.

□ கலைக்கதிர்




# பல கோடி நூல்கள் தரும் பாட நூல் நிறுவனம்

எண்ணும் எழுத்துமே ஒருவரை ஏற்றமுறச் செய்வன.

கண்ணின் மணியாகக் கருதுவதும் இவற்றையே!

'புண்ணென்று ணவக்கப்படும்' என்றார் வள்ளுவர், கண்ணிருந்தும் கல்லாதவரை!

எனவே, கல்வியே ஒருவர்க்கு அழியாச்செல்வமாக—கண்ணாக விளங்குகின்றது. அந்தச் செல்வத்தைப் பெற்றவரே செல்வர்—பெருஞ்செல்வர். அதில் 'செல்வச் சீமானாக' விளங்கிட—அறிவு மேதையாகத் திகழ்ந்திட வேண்டும் என்பதுதான் வாழ்க்கையின் இலட்சியமாக இருக்க வேண்டும்.

அதற்கு வழிகோலுவதுதான் அறிவாலமாய் விளங்கிடும் பள்ளிகள், கல்லூரிகள்.

தேர்வுகள் முடிந்து பள்ளிகள் எல்லாம் திறக்கப்பட்டுவிட்டன.

மாணவ மணிகள் படிக்கத் தயாராகிக்கொண்டிருக்கின்றனர்.

ஆயிரம், இரண்டாயிரம் அல்ல பல இலட்சம் மாணவ மாணவியர் படிக்கப் பாட நூல்கள் வேண்டுமல்லவா?

அதனை நிறைவேற்றும் அரும் பெரும் பணியினைச் செயலாற்றி வருகின்றது, தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம். தற்போது இது பள்ளி - கல்லூரிகளுக்கான பாட நூல்களை விற்பனைக்குத் தயார் நிலையில் வைத்திருக்கின்றது.

பள்ளிப் பாடநூல்களின் நாட்டுடமையாக்கும் திட்டமானது தமிழகத்தில் 1960-ஆம் ஆண்டு தொடங்கியது. ஆனால், 1970-ஆம் ஆண்டு முதல்தான் இது முனைந்து செயல்படத் தொடங்கியது.

இப்போது தொடக்க நிலை, நடு நிலை, இடை நிலை, மேல் நிலை ஆகிய பள்ளிக் கல்வியின் எல்லா நிலைகளுக்குமான பாட நூல்களை ஏறத்தாழ அனைத்தையுமே நிறுவனம் வெளியிட்டு வருகின்றது.



தமிழ்நாட்டுக்கு வருகை தந்த சீனத் தூதுக் குழுவினர்க்கு, பாடநூல் நிறுவன வெளியீடுகளை அதன் மேலாண்மை இயக்குநர் திரு கா. லியாகத் அலிகான் விளக்கிக் கூறுகிறார்.

1970-ஆம் ஆண்டு 36 பாட நூல்கள் மட்டுமே அச்சிடப்பட்டன. அவற்றின் மொத்தப்படிகள் 61.24 லட்சங்களாகும். ஆனால், 1984-85ஆம் ஆண்டுக்கு அச்சிடப்பட்ட பாடநூல்களின் எண்ணிக்கையோ 315 ஆக உயர்ந்தது. அச்சிடப்பட்ட மொத்தப் படிகளின் எண்ணிக்கையோ 3 கோடிகளுக்கு மேலாகும்!

பாட நூல்களை வெளியிடுவது தான் நிறுவனத்தின் முதன்மையான பணியாக இருப்பினும், கல்லூரி மாணவர்களுக்கான தமிழ் வழிப் பாட நூல்களையும் நிறுவனம் சிறப்பாக வெளியிடுகின்றது.

பாடநூல்களுக்கு அடுத்தபடியாக இன்றியமையாததாகத் தேவைப்படுவது, பயிற்சி ஏடாகும். வெளிச்சந்தையில் பயிற்சி ஏடுகள் தயாரிப்பதிலும், விற்பனை செய்வதிலும் முறைகேடுகள் இருந்தபடியால், 1979ஆம் ஆண்டு முதல் பயிற்சி ஏடுகளைத் தயாரித்து வழங்கும் பொறுப்பினைத் தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்திடம் ஒப்படைத்தது. அப்பணியும் இன்றளவும் பலரும் பாராட்டும் வகையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சிறப்புப் பணிகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து இந்நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு கா. லியாகத் அலிகான் அவர்கள் கூறும்போது குறிப்பிட்டார்—

"பாடநூல் நிறுவனம் முப்பெரும் இலட்சியங்களை முன் வைத்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. தரமான பாடநூல்களைத் தயாரிக்க வேண்டும்; அவற்றை நியாயமான விலையில் விற்பனை செய்யவேண்டும்; உரிய காலத்தில் மாணவர்களின் கையில் பாடநூல் இருக்குமாறு வழங்கல் பணி நடைபெற வேண்டும். இந்த மூன்று அடிப்படை இலட்சியங்களுடன் புதிய சமுதாயக் கடமை ஒன்றும் இப்போது பாடநூல் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் இலவசப் பாடநூல் திட்டமே அந்தப் புதிய பொறுப்பு.

"இந்தக் கல்வி ஆண்டில் புதிய பாடநூல்கள் எவையும் வெளியிடப்படவில்லை. பழைய பாட நூல்களை மறுபதிப்புச் செய்து வழங்குகிறோம். இந்த மறு பதிப்புப் பணி வெறும் அச்சுப் பணி மட்டுமே. எனினும் கூட 329 பள்ளிப் பாடநூல்கள் ஏறத்தாழ 40 ஆயிரம் பள்ளிகளில் பயிலும் ஒன்றே கால் கோடி மாணவர்களின் கைகளில் சேர்ப்பிக்கப்பட வேண்டும் அல்லவா? பிரம்மாண்டமான இந்தப் பணியை உரிய காலத்தில் நிறைவேற்றுவது முன் கூட்டியே திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது. எனவே, கடந்த நவம்பர் மாதமே அச்சுப்பணி தொடங்கப்பட்டுவிட்டது. ஜனவரி முதல் அச்சிட்ட பாடநூல்கள் வரத் தொடங்கின. எனவே, பிப்ரவரி முதற்கொண்டே இந்த ஆண்டில் பாடநூல்கள் வெளியூர்களுக்கு அனுப்பப்பட்டு விட்டன.

"பாடநூல் நிறுவனத்துக்கு முன்பு சென்னை நீங்கலாக வெளியூர்களில் ஐந்து வட்டார அலுவலகங்கள் இருந்தன. நெல்லை, மதுரை, கும்பகோணம், சேலம், கோவை ஆகிய இந்த இடங்களில் இருக்கும் இந்த வட்டார அலுவலகங்கள் கடந்த ஆண்டு வரை குறிப்பேடு தயாரிப்புப் பணியிலும் குறிப்பேடு விநியோகப் பணியிலும் மட்டும் ஈடுபட்டு வந்தன. இந்த ஆண்டில் பாடநூல் நிறுவனத்தின் வட்டார அலுவலகங்கள் பாடநூல் விநியோகப் பணி

யிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. எனவே, பாடநூல் விநியோகம் கடந்த ஆண்டுகளை விடச் செம்மையாக நடைபெறும் என்று எதிர்பார்க்கிறேன். மேலும் 2 இடங்களில் இந்த ஆண்டு வட்டார அலுவலகங்களைப் பாடநூல் நிறுவனம் திறந்திருக்கிறது. வேலூர், திருச்சி ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் இந்தப் புதிய வட்டார அலுவலகங்கள் மாணவச் சமுதாயத்துக்குப் பணி செய்வதில் நிறுவனத்துக்குத் துணை நிற்கும் என்று நம்புகிறோம்.

''பாடநூல்களுக்குச் சமமான அளவில் மாணவர்களுக்குப் பயன்படுபவை குறிப்பேடுகள் ( Note Books) ஆகும். இதுவரை பாடநூல் நிறுவனம் பள்ளிகளுக்கு மட்டுமே நேரடியாகக் குறிப்பேடுகளை வழங்கி வந்திருக்கிறது. அதாவது, கடைகளில் குறிப்பேடுகள் சில்லறைக்கு விற்பனை செய்யப்படுவதில்லை. பாடநூல்களை போலவே தரமான குறிப்பேடுகளை, நியாயமான விலைக்கு மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதுதான் பாடநூல் நிறுவனத்தின் நோக்கம். நிறுவனம் தயாரித்து வழங்கும் குறிப்பேடுகளின் தரம் மிக உயர்ந்ததாக இருப்பினும் - பக்கங்களின் எண்ணிக்கை மிகவும் துல்லியமாக இருப்பினும் போதிய அளவு விற்பனையாகவில்லை. இதற்குக் காரணம், கடைகளில் இந்தக் குறிப்பேடுகள் விற்பனை செய்யப்படுவதில்லை. பள்ளிகளின் மூலமாக மட்டும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

''இப்போது பாடநூல் நிறுவனத்தின் கையிருப்பில் ரூ.6 கோடி பெறுமானமுள்ள குறிப்பேடுகள் உள்ளன. இவற்றில் ஒரு பகுதியைக் கூட்டுறவுக் கடைகளின் மூலம் விற்பனை செய்ய வரும் ஆண்டு முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு மொத்த விற்பனையாளர்கள் பெறும் குறிப்பேடுகளில் 50 சதவிதம் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டு நேரிடையாக மாணவர்களுக்கு வழங்கப்படும். மீதியுள்ள 50 சதவிகிதம் குறிப்பேடுகள் கூட்டுறவுக் கடைகள் மூலம் மாணவர்களுக்குச் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படும். இதனால் இந்த ஆண்டில் தமிழ்நாட்டின் எல்லா ஊர்களிலும் பயில்கின்ற எல்லா மாணவர்களுக்கும் சிரமம் இல்லாமல் இந்நிறுவனத்தின் தரமான குறிப்பேடுகளை மட்டுமே வாங்கிப் பயனடையும் நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

''இதேபோல, இதுவரை, அரசின் கல்வித்துறையினால் அங்கீகரிக்கப்படாத பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இந்நிறுவனத்தின் குறிப்பேடுகள் விற்கப்பட்டதில்லை. வரும் ஆண்டில் இந்த வகைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் கூட்சலுகை விலையில் தரமான குறிப்பேடுகளை வழங்க இந்நிறுவனம் அனுமதி கொடுத்திருக்கிறது.

> **தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் 329 வகையான பாடநூல்கள் அச்சடிக்கப்படுகின்றன.**
>
> **இவை 40 ஆயிரம் பள்ளிகளுக்குப் போய்ச்சேர்கின்றன.**
>
> **இதன் மூலம் 1.25 கோடி மாணவ, மாணவியர் பயன்பெறுகின்றனர்.**

''இந்நிறுவனத்தின் இன்றைய தலையாய நோக்கம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் 13 கோடி ரூபாய் மதிப்பில் இலவசப் பாடநூல் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்த வேண்டும் என்பதுதான். ஏனென்றால் தமிழ் மண்ணில் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க இந்தத் திட்டம் நேரடியாக முனைகிறது. ஒவ்வொரு ஆண்டும் மாநிலம் முழுவதும் சுமார் 70 இலட்சம் குழந்தைகளுக்கு இலவசப் பாடநூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்புப் பாடநூல் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதே எங்களுக்கெல்லாம் பெறுவதற்கரிய பெரும்பேறு என்று கருதுகிறோம். அப்பணி சிறக்க வரும் கல்வி ஆண்டில் நாங்கள் எங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம்.

''வெளிநாட்டிற்கு இணையாகப் பாடநூல்களை உருவாக்கிட 10 கோடி ரூபாய் முதலீட்டில் நவீன அச்சகம் ஒன்று நிறுவ முனைந்து வருகிறோம். ஆரம்பத்தில் 53 மையங்களில் பாடநூல்களை விநியோகித்த வந்த நாங்கள், புத்தக விநியோகத்தைப் பரவலாக்கவும், எளிதாக உரிய காலத்தில் மாணவர்களுக்குக் கிடைத்திடச் செய்யவும் தற்போது மாவட்டக் கல்வி அதிகாரிகள் மூலம் 151 கல்வி மையங்களில் பாடநூல்களை விநியோகித்து விரைவுபடுத்தியுள்ளோம். மேலும் ஏற்படும் குறைபாடுகளைக் களைய எங்களின் வட்டார அதிகாரிகளை மாவட்டக் கல்வி அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றிடும் Co - ordinator களாகவும் செயல்படச் செய்துள்ளோம். ''Earn while you learn'' என்ற சொல்படி எதிர்காலத்தில் மாணவர்களே நோட்டுப்புத்தகம் தயாரிக்கவும், அதற்குரிய கருவிகளை வாங்கவும் நாங்களே கடன் கொடுக்கவும் திட்டமிட்டுள்ளோம். அதற்கென ரூ. 20 இலட்சம் ஒதுக்கவும் முனைந்துள்ளோம். இந்நிதி பள்ளிகளுக்கு நீண்டகாலக் கடனாக வழங்கத் திட்டமிட்டுள்ளோம்.

''பாடநூல் நிறுவன உபரி நிதியிலிருந்து பள்ளிக் கட்டடம் கட்டுவதற்காக ரூ. 25 இலட்சம் கொடுத்து வந்தோம். இந்த ஆண்டு முதல் அதை 50 இலட்சமாகக் கொடுத்து வருகிறோம். புதிதாக தென் ஆர்க்காடு, தர்மபுரி, பெரியார் ஆகிய மாவட்டங்களில் வட்டார அலுவலகங்கள் திறக்கவும் முனைந்து வருகிறோம்.


''சிறுபான்மை மொழி பேசும் மாணவர்களுக்காக 1 முதல் 3ஆம் வகுப்பு வரையிலான மொழிப் பாடநூல் மட்டும் நாங்களே அச்சடித்துக் கொடுக்கிறோம். 4 முதல் 8-ஆம் வகுப்புவரை அந்தந்த மாநிலங்களிலிருந்து வாங்கி விற்பனை செய்கிறோம். இது லாப நோக்கின்றி அச்சடிக்கப்பட்ட விலைக்கே இந்த ஆண்டிலிருந்து விற்பனை செய்து சிறுபான்மை மொழியினரின் நலனில் அக்கறை காட்டி வருகிறோம்.

ஒரு கோடி ரூபாய் சுழல் நிதியிலிருந்து 914 கல்லூரிப் பாடநூல்களை அச்சடித்துக் கல்லூரி மாணவர்களுக்குக் கொடுத்துள்ளோம். கல்லூரிப் பாடநூல்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள சில இடங்களில் அந்தக் கல்லூரிப் பாடநூல்களை மட்டும் மறுபதிப்பு செய்து அச்சடித்து மாணவர்களுக்கு வழங்கி வருகிறோம்.''

இவ்வாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் அறியாமை போக்கிட-அறிவொளி எங்கும் பரவிட-'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்று பலரும் போற்றிட நாளும் நற்பணியாற்றி வருகிறது.

பேட்டி : **பி.வி. கிரி**

# அவருக்குத் தொழில் கவிதை



நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற் குழைத்தல் — என்றார் மகாகவி சுப்ரமணிய பாரதியார்.

அவரை மானசீக குருவாகக் கருதி வந்த கவிஞர் கண்ணதாசனும் அதே கொள்கைக்குச் சொந்தக்காரராகத்தான் விளங்கினார். பாரதியைப் போல, நமக்குத் தொழில் கவிதை என்று அவர் சொல்லவில்லையே தவிர அந்த முறையிலேதான் செயல்பட்டார்.

போர் என்று சேதி கேட்டால் தினவெடுத்த தோளுடனும் திரண்டு வரும் மகிழ்வுடனும் களம் நோக்கிச் செல்வார்களே புறநானூற்று வீரர்கள், அதே போல் கவிதை என்றவுடன் தமக்கிருக்கும் கவலைகள், தொல்லைகள், உடல் உபாதைகள் எதையும் பொருட்படுத்தாமல் உள்ளம் குளிர, உவகை மிளிர, கவிதை மலர்களை அள்ளிக் குவிக்க முனைந்து விடுவார் கவிஞர் கண்ணதாசன்.

பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பார்களே அந்த முதுமொழியைப் பொய்மொழியாக்கிய பாவலர் அவர். 1944-ல் முதல் கவிதையை எழுதினார். 1981-ஆம் ஆண்டு ஜூலை மாதம், முதல் நாளன்று தமிழகத்தில் கடைசிக் கவிதையை எழுதியிருக்கிறார். அதன் பின்னர் அமெரிக்கா சென்று, சீர்காழி கோவிந்தராஜனின் இசை நிகழ்ச்சிக்குப் பாடல் எழுதித் தந்திருக்கிறார். ஏறக்குறைய 37 ஆண்டுகள், பல்லாயிரக் கணக்கான கவிதைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தும் அவருக்குச் சலிப்பு ஏற்பட்டது கிடையாது. புதிய உற்சாகத்துடனேயே எழுதுவார். உரையாடல், சிறுகதை, தொடர் கதை எழுதுவதிலும் மேடையில் பேசுவதிலும் கூட அவர் சில நேரங்களில் சலிப்படைந்ததுண்டு. ஆனால் கவிதை தீட்டுவதில் அவர் சலிப்போ -களைப்போ ஒருநாளும் அடைந்ததில்லை. எத்தகைய சூழ்நிலையிலும் கவிதை எழுதும் திறம் பெற்றிருந்தார். கவிதைகளை ஓடுகின்ற ஓட்டத்திலும் எழுதியிருக்கிறார்; அரசியல் போராட்டக்களத்திலும் உருவாக்கித் தந்திருக்கிறார். கைதியாகச் சிறையிலிருந்த போதும் எழுதியிருக்கிறார்; கல்லூரிகளுக்குச் சொற்பொழிவாற்றச் சென்றபோதும் எழுதியிருக்கிறார். அவர், கவிதை எழுதிய சூழ்நிலைகளை எண்ணிப் பார்த்தால் அவரது மேதை எளிதாகப் புலனாகும். வாராது வந்த மாமணி அவர் என்பது தெளிவாகும்.

தொடக்க காலத்தில் கவிதையில் சிறிதளவு ஆர்வமும், கதை கட்டுரை எழுதுவதில் பேரார்வமும் கொண்டிருந்த கண்ணதாசன் அச்சுக் கோப்பாளர் ஒருவரால்தான் கவிஞராக்கப்பட்டார். இலக்கணத்தில் வருகின்ற ஏவுதற் கருத்தா-இயற்றுதற் கருத்தா என்பது போல அச்சுக்கோப்பாளர் 'சிறிது இடம் இருக்கிறது. ஏதாவது ஒரு மேட்டர் கொடுங்கள் சார்' என்று திருமகள் பத்திரிகை ஆசிரியரான கண்ணதாசனிடம் கேட்கவே, அவர், 'கட்டுரை எழுதிவிட்டோம்; கதை எழுதிவிட்டோம், சரி, ஒரு கவிதையை எழுதிக் கொடுப்போம்' என்ற எண்ணத்துடன் 'அவள்' என்ற தலைப்பில் அகப்பொருள் கவிதை ஒன்றைப் புதிய கோணத்தில் எழுத, அன்று முதல், கவிதை ஆர்வம் அவருக்கு ஏற்பட்டு விட்டது. முதற் கவிதைக்குக் கிடைத்த பாராட்டு அவரைக் கவிதை உலகத்திற்குத் தள்ளியது. சில ஆண்டுகளில் திரைப்பட உலகத்திற்கு அழைத்துச் சென்று பாடலாசிரியராக அவரை மாற்றியது. கவிஞர் என்ற அடைமொழியையும் பெயருடன் இணைத்துவிட்டது.

**தமிழ்ப்பித்தன்**

1953-ஆம் ஆண்டு! அண்ணா அவர்கள் வகுத்த மும்முனைப் போராட்டத்தில் ஒன்றான டால்மியாபுரம் பெயர் அழிப்புப் போராட்டத்தில் மூன்றாவது அணியின் தலைவராகப் பங்கு பெற்றார் கண்ணதாசன். ஏற்கெனவே இரண்டு அணிகள் கைது செய்யப்பட்டுவிட்டன. 3வது அணிக்குத் தலைமை ஏற்று அவர் புறப்படும்போது பகல் 1.30 மணி இருக்கும். அதுவரை அவர் எதுவும் சாப்பிடவில்லை. போர்க்களமும் காவல் துறையின் கட்டுப்பாடும். கெடுபிடியும் அந்தச் சூழ்நிலையும் பசியை மறக்கச் செய்திருந்தன. தமது குழுவினருடன் வீரநடை போட்டுக் களத்தில் இறங்கினார். தத்துவமேதை டி. கே. சீனிவாசன் அந்தநேரத்தில் மசால் வடைகளையும் தேநீரையும் வாங்கி வந்து கண்ணதாசனிடம் கொடுத்தார். அவற்றை அரைகுறையாகச் சாப்பிட்டுவிட்டுக் களம் நோக்கி விரைந்தார் கண்ணதாசன்.

அந்த நேரத்தில் தமது வார இதழுக்கு ஏதாவது ஒரு கவிதை எழுதித் தாருங்கள் என்று டி. கே. சீனிவாசன் கேட்க, அந்தக் குழப்பமான சூழ்நிலையிலும் மனம் சலிக்காமல், ஆத்திரம் அடையாமல் ஒரு கவிதையை எழுதித் தந்துவிட்டு, தண்டவாளத்தைநோக்கி விரைந்தார் கண்ணதாசன்.

அதன் பின்னர் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். சிறையிலிருந்தபோது 'மாங்கனி' என்ற அருமையான காவியத்தைத் தீட்டினார். வெஞ்சிறையில் பிறந்த தீஞ்சுவை அமுதாகத் திகழ்கிறது மாங்கனி காவியம்.

தென்றல் இதழில் 'ஐயம் அகற்று' என்ற பகுதியைத் தொடங்கி வாசக நேயர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்து வந்தார் கண்ணதாசன்.

கரூரைச் சேர்ந்த வாசகர் ஒருவர்,

தண்டமிழ் வண்ணக் கோவை
  தந்திடும் கண்ண தாச !
கண்டுளேன் நுமது தென்றல்
  கவினுறுந் தேனை யுண்டேன்
வண்டெனும் உருவெ டுத்து
  வண்டமிழ்ச் சோலை புக்கச்
கொண்டுளேன் ஆசை! ஐயா
  கூறிடும் சிந்நாட் கள்தான்!

என அறுசீர் விருத்தத்தில் ஒரு வினாவைத் தொடுத்திருந்தார்.

அந்த வினாவிற்குரிய விடையை அதே அறுசீர் விருத்தத்தில் அமைத்திருந்தார் கண்ணதாசன். அது வருமாறு:

கண்படு நூல்கள் யாவும்
  கற்பவன் மேதை! நெஞ்சம்
பண்படும் அதனால்! அஞ்சாப்
  பாவலன் ஆவான்! ஆயின்,
புண்படு நூல்கள் நீக்கிப்
  பொறுப்புடன் கற்றல் வேண்டும்
எண்படு பொருளை மீண்டும்
  எதிரொலி செய்தல் நன்றே!

இன்னொரு வாசகர் கண்ணதாசனுக்குக் கோபத்தை ஊட்டும் வகையில் ஒரு கவிதை வினாவைத் தொடுத்திருந்தார். அது இது தான்!

ஏடா கவிஞா! என்னடா துணிவு!
மூடா நீயும் முறையே கற்றியோ?

இதற்குக் கண்ணதாசன் அளித்த மறுமொழிக் கவிதையில் சொற்பெருக்கும், வாதத் திறனும் மின்னிச் சிதறி வந்தன. அந்தக் கவிதை இதோ!

வாடா தம்பீ! வாய்மொழி அழகே
மூடன் எப்படி முறையே கற்பான்!
தேடா தடைந்த செல்வம் எங்கள்
தேன்தமிழ் எனக்குத் தந்த வெற்றியே!
பாடும் திறனும் பதுங்காத் தன்மையும்
பீடுறு நடையும் பேறும், நெஞ்சில்
ஆடும் பொருளை அவையினில் கூறும்
வாய்ப்பும் என்பதை மன்றினில் அறிக!

1955-ஆம் ஆண்டு பொங்கல் விழாவை யொட்டி எட்டணா விலையில் ஒரு மலரை வெளியிட்டது தென்றல். அதன் உட்புற அட்டைக்கு விளம்பரம் கிடைத்தால் வசதியாகஇருக்கும் என்று நினைத்த கண்ணதாசன், அண்ணாவின் நண்பரான ஒரு வண்ணப்பூச்சு நிறுவன உரிமையாளர் ஒருவரை அணுகினார். ''வண்ணங்களைக் குறித்து உங்களது கவிதையுடன் வெளியிடுவதாக இருந்தால் நான் விளம்பரம் தருகிறேன்' என்று அந்த நண்பர் சொல்ல, கண்ணதாசன் ஒப்புக் கொண்டார். 'வண்ணக் காவியம்' என்று தலைப்பிட்டு அவர் எழுதிய விளம்பரக் கவிதை இதோ:

**கருநிறக்** கூந்தல் கண்டேன்
கலையெழில் ஆடல் கண்டேன்
ஒருகரம் கூந்தல் தாங்கி
உவப்புறக் கண்டேன் கண்டேன்;


**செந்நிற** அதரங் கண்டேன்
சித்திர வடிவங் கண்டேன்
இன்னொரு உருவம் அந்த
இதழ்களை மூடக் கண்டேன்

**வெண்ணிறக்** கழுத்தும் கண்டேன்
வியப்புறும் நகைகள் கண்டேன்
அண்ணலின் கைகள் அஃதை
அணைத்திடக் கண்டேன் கண்டேன்

சோலையில் இயற்கை காட்டும்
**சுந்தர வர்ணங்** கொண்டாள்
பாலையிற் பசுமை காட்டும்
பைங்கொடி வாழ்க வாழ்க!

1956-ஆம் ஆண்டு தென்றல் பொங்கல் மலரில் வெளியிடப்பட்ட சில புகைப்படங்களுக்குரிய விளக்கங்களைக் கவிதையிலேயே வடித்திருந்தார்.

மரம் ஒன்று பல கிளைகளுடன் காட்சி தருகிறது ஒரு புகைப்படத்தில். அதற்கு அவர் எழுதிய கவிதை விளக்க வரிகளில் தமிழ்



## தாழ்த்தப் பட்டோர், பழங் குடியினர் மேம் பாட்டுப் பணியில் தமிழகம் முன்னணி

**தா**ழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினருக்கு நிலங்களை விநியோகம் செய்வதிலும், வீட்டு மனைப் பட்டா வழங்குவதிலும் தமிழ்நாடு முன்னணியில் இருக் கிறது. இத்தகவலை, தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடி மக்களின் மேம்பாடு குறித்து ஆராய மத்திய அரசால் நிய மிக்கப்பட்ட குழு தெரிவித் துள்ளது.

1987 மே திங்களில் தமிழ்நாட் டில் வடஆர்க்காடு, தென்ஆர்க் காடு, திருச்சி மாவட்டங்களில் பயணம் செய்து, மத்திய-மாநில அரசுகளின் உதவியுடன் கூடிய திட்டங்கள் தாழ்த்தப்பட்டோருக் கும் பழங்குடியினருக்கும் எவ் வாறு நிறைவேற்றப்படுகின்றன என்பதைக் குழு நேரில் தெரிந்து கொண்டது.

மொழியின் வரலாறே பொதிந்து கிடக்கிறது. இதோ அந்தக் கவிதை :

தமிழ்வேரில் கிளைமொழிகள் பலஉதித்த
சங்கதியைச் சொல்வதற்கோ
உருவெடுத்தாய்?

மற்றொரு புகைப்படம்; அதிலே ஓர் இளம்பெண் மாம்பழம் விற்கிறாள். இளைஞன் ஒருவன் மாம்பழம் வாங்குகிறான். இதற்கு-கண்ணதாசன் தந்த கவிதை விளக்கத்தில் கற்பனை-அகப்பொருள் சுவை பொங்கிவழிந் தது. அது இது:

அவள்: கட்டி மாம்பழம் கையிலிருக்குது
கண்ணுக்கு வேலையில்லை
அவன்: ஒரு
பெட்டி மாம்பழம் எதிரிலிருக்குது
பேச்சுக்கு நேரமில்லை.

1959-ஆம் ஆண்டு தென்றல் பொங்கல் மலரில் வெளியிடப்பட்ட சில வண்ணப்படங் களுக்கு விளக்கங்களைக் கவிதையிலேயே தெரிவித்திருந்தார் கண்ணதாசன்.

குழந்தையைத் தோளிலே போட்டுக் கொண்டு நிற்கும் தாயின் ஓவியம் மலரின் முகப்பிலே வெளியிடப்பட்டிருந்தது. அந்த ஓவியத்துக்கு அவர் தந்த கவிதை வரி விளக் கம்:

பிள்ளையைச் சுமக்கும்போது
பெற்றவள் பெறும்பே ரின்பம்
உள்ளத்தைச் சுமந்த காளை
உடலுயிர் சுமக்கும் வேளை
எள்ளள வேனும் பெற்றாள்
என்றில்லை; அதனால் வாழ்வில்
பிள்ளையாய்த் திரிவ தொன்றே
பிறந்தவர் பெரும்பே ரின்பம்

பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தை வெளியிட்டு அதற்கு அளித்திருந்த விளக்கம் இதோ!

குலமுறை 'அண்ணா' என்னும்
கொடிநிழல் 'தலைவா' என்னும்
கலைமனம் 'அறிவே' என்னும்
கவிக்குரல் 'புலவா' என்னும்
அலைதமிழ் 'உயிரே' என்னும்
அவனியே 'புனிதா' என்னும்
தலைமுறைக் கிவரல் லாது
தலைவரென் றொருவர் இல்லை.

மதுரையில் பாத்திமா மகளிர் கல்லூரி தொடங்கப்பட்ட புதிது. கல்லூரித் தமிழ் மன்றத்தின் சார்பில் சொற்பொழிவாற்ற 1959ல் சென்றார் கண்ணதாசன். வருகை யாளர் குறிப்புப் புத்தகத்தை நீட்டி, அதில் ஏதாவது கருத்துரை எழுதும்படி அவரிடம் கேட்டுக் கொண்டார் கல்லூரி முதல்வர் திருமதி சகுந்தலா அம்மையார்.

உடனே பாத்திமா கல்லூரியை வாழ்த்தி ஒரு கவிதையை வருகையாளர் குறிப்புப் புத்த கத்தில் எழுதினார். அந்தக் கவிதை வருமாறு:

தூங்கிய பெண்மையின்
தூக்கம் தீர்ந்தது
வேங்கையின் இனமென
விழிப் பெழுந்தது.
பாங்குறும் இந்நிலை
படரும் நாட்டினில்
பாத்திமா பெண்களின்
கல்லூரி எழுந்தது.

புகழ்பெற்ற வார ஏடு ஒன்று, நேரு நினைவாக சிறுவர் சிறப்பிதழ் வெளியிட முனைந்தது. அதில் கண்ணதாசனின் கவிதை ஒன்று இடம் பெற வேண்டும் என விரும்பியது. அதற்காகத் தனது நிருபரை அனுப்பி வைத் தது. கண்ணதாசனைச் சந்திக்கச் சென்ற நிருபர், அவர், உறவினர் ஒருவரின் திருமண விழாவை முன்னிட்டு காரைக்குடிக்குச்சென்றி ருக்கிறார் என்ற செய்தி அறிந்து அதிர்ச்சி யடைந்தார். தனது ஆசிரியரிடம் அந்தச் செய்தியைத் தெரிவிக்க, "பரவாயில்லை! காரைக்குடிக்குச்சென்று கவிஞரைச் சந்தித்துக் கவிதையைப் பெற்று வாருங்கள்" என்று அவர் கட்டளையிட, நிருபர் காரைக்குடியை நோக்கிப் பறந்தார்.

கண்ணதாசன் தங்கியிருந்த இல்லத்தைத் தெரிந்து கொண்டு அங்கே சென்று, அவரைச் சந்தித்தார். அப்போதுதான் அவர் திருமண விழாவிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

பத்திரிகை நிருபரை ஏற்கெனவே தெரிந்து வைத்திருந்த கண்ணதாசன் 'என்ன விஷயம்' என்று விசாரிக்க, நிருபர் விவரத் தைச் சொல்ல, உடனே கவிதையை டிக்டேட் செய்ய உதவியாளரைத் தேடினார்.

'கல்யாணத்துக்கு நேரம் ஆச்சுங்க' என்று உறவினர் ஒருவர் கண்ணதாசனிடம் நினைவு படுத்தினார்.

''சரி, சரி! பத்து நிமிஷ வேலைதான்'' என்று சொல்லியவாறு கவிதையை டிக்டேட் செய்தார் கவிஞர். கவிதையைப் பெற்றுக் கொண்டு சென்னையை நோக்கி விரைந்தார் நிருபர். திருமண விழாவிற்குச் செல்லுகின்ற அவசரத்திலும் கவிதை எழுதுகின்ற திறமையும் மனநிலையும் அவரிடம் குடிகொண்டிருந்தன.

1966-ஆம் ஆண்டு பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் தலைமையில் கவிஞர் கண்ணதாசன், இசையமைப்பாளர் எம். எஸ். விசுவநாதன் ஆகியோர் சோவியத் நாட்டுக்குச் சென்றிருந்தனர். லெனின் பல்கலைக் கழகம் அவர்களுக்கு வரவேற்பளித்தது.

அந்த விழாவில் முஸ்லீம் கலைஞர் ஒருவர் டேப் அடித்துப் பாடினார். நீலக்குயில் என்னும் மலையாளப் படத்தில் ஒலித்த 'காயல் அருகத்து வலை எறிஞ்சப்போ கரையில் சிக்கிய சுந்தரி' என்ற பாடலை அவர் பாடினார். அந்த மெட்டைக் கேட்டவுடன் இசையமைப்பாளர் விஸ்வநாதனுக்கும் கவிஞர் கண்ணதாசனுக்கும் பேரானந்தம் ஏற்பட்டது. அதே மெட்டில் ஒரு பாடலை எழுத வேண்டும் என்ற ஆர்வம் கண்ணதாசனுக்கு எழுந்தது. உடனே எழுதத் தொடங்கினார். அந்தப் பாடலின் பல்லவி வருமாறு:

'வெள்ளி மாடத்துப் புள்ளி மானிடம்
உள்ளம் வைத்தவன் யாரடி?'

பாடலைக் கேட்ட விஸ்வநாதன் உவகையடைந்து அந்த முஸ்லீம் பெருமகனாரிடம் இருந்த டேப்பை வாங்கித் தாளம் போட்டுப் பாட ஆரம்பித்துவிட்டார். பல்கலைக் கழக மாணவர்கள் பாடலின் வார்த்தைகளையும் இசை அமைப்பையும் ஆரவாரத்துடன் ரசித்தனர்.

1981-ஆம் ஆண்டு வார இதழ் ஒன்று, 'தேவை ஒரு முதலடி' என்று ஒரு பகுதியை தொடங்கியிருந்தது.

''கவிஞர் கண்ணதாசனின் கற்பனையைக் கிளறக் கூடியதாக ஒரு முதலடி எழுதியனுப்புங்கள். நீங்கள் அடி எடுத்துக் கொடுக்க கவிஞர் கவிதை எழுதுவார். முதலடியை 'ஒரு கார்டில்' எழுதியனுப்பினால் போதுமானது. கவிஞர் தேர்ந்தெடுக்கும் முதலடிக்கு ரூ. 25 அன்பளிப்பு உண்டு'' என்று வாசகர்களுக்கு அறிவித்திருந்தது.

அதன்படி ஏராளமான வாசகர்கள், கவிஞர்கள் முதலடிகளை எழுதியனுப்பியிருந்தனர். இரண்டு மூன்று இதழ்களில் முதலடிக் கவிதைகளும், கவிஞரின் கவிதைகளும் வெளியாயின.

இந்தச் சமயத்தில் உலகக் கவிஞர்களின் மாநாட்டையொட்டி கண்ணதாசன் அமெரிக்காவுக்குப் புறப்படத் திட்டமிட்டிருந்தார். பயணநாளும் வந்தது. அன்று நண்பர்கள், உறவினர் பலரும் அவரைச் சந்தித்துவாழ்த்துக் கூற அவரது இல்லத்திற்கு வந்திருந்தனர். இரவு 9.30 மணிக்கு விமானம் புறப்படுகிறது என்று தெரிந்தும் 9 மணி அளவில் 'கருவறை முதலாய்க் கல்லறை வரையிலும்' என்ற முதலடியை எடுத்துக்கொண்டு ஏனைய வரிகளை எழுதிக் கொண்டிருந்தார்.

கவிதை முடிந்தது. பயணத்துக்குத் தயாரானார். அப்போது அவரது உதவியாளரும் அணுக்கத் தொண்டருமான வசந்தன் அவரருகில் வந்து ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் சென்னையில் உருவாக்கிவரும் ஐயப்பன் ஆலய கும்பாபிஷேக மலருக்கு ஒரு கவிதை கேட்டார்கள் என்பதை நினைவுறுத்தினார்.

மறுவிநாடி! மடைதிறந்த வெள்ளம் போல் அறுசீர் விருத்தம் அவரது நா அருவியிலிருந்து குதித்து வந்தது. மூன்று பாராக்கள் கொண்ட கவிதையை 5 நிமிடத்திற்குள் எழுதி முடித்து விட்டார்.

இவ்வாறு, எந்தச் சூழ்நிலையிலும்-எவ்வளவு துன்பம் வந்து மோதுகின்ற காலத்திலும் - எத்தனையோ இன்பம் வந்து குவிகின்ற நேரத்திலும்-ஏன்-பற்பல வேதனை நிலைமைகளிலும் கவிதை மழையைப் பொழியும் வல்ல சித்தராகக் கண்ணதாசன் விளங்கியிருக்கிறார்.

கவிதை அவருக்குக் கரும்பு. கவிதை எழுதுவதற்கு அவர் சலிப்போ தயக்கமோ ஒரு போதும் அடைந்ததே கிடையாது. அவரது உடம்பில் எந்த நேரமும் கவிதை சுரந்து கொண்டே இருந்தது. கவிதை ஊற்று அவர்; கவிதை, அவருக்குத் தொழில் மட்டுமல்ல— மூச்சும் கூட!

## தமிழக மாம்பழங்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி

தமிழ்நாட்டிலிருந்து சிங்கப்பூர், மலேசியா, துபாய் போன்ற வெளி நாடுகளுக்கு இவ்வாண்டு 5 ஆயிரம் டன் மாம்பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தற்சமயம் ஒரு இலட்சத்து 13 ஆயிரம் ஏக்கரில் மாமரங்கள் பயிர் செய்யப்பட்டுள்ளன. இதில் தருமபுரி மாவட்டத்தில் மட்டும் சுமார் 13 ஆயிரம் ஏக்கர்.

தருமபுரி, சேலம்; மதுரை மாவட்டங்களில் மாம்பழ மகசூல் சுமாராகவே உள்ளது. வடஆர்க்காடு மாவட்டத்தில் இவ்வாண்டு நல்ல மகசூல். ஆனால் புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியின் காரணமாகப் பெரும் பாதிப்பு.



# கன்னியாகுமரியில் நவீன பேருந்து நிலையம்

நேசமணி போக்குவரத்துக் கழகம் கன்னியாகுமரியில் ரூ. 40 இலட்சம் செலவில் நவீன முறையில் கட்டியுள்ள பேருந்து நிலையத்தைத் (21-5-87) திறந்து வைத்தும், ரூ. 20 இலட்சம் செலவில் புதிதாக அமைக்கப்படவுள்ள பணிமனைப் பணிகளைத் தொடங்கி வைத்தும், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ரூ. 5 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பயணிகள் நிற்கும் இடத்தைத் திறந்து வைத்தும், மாண்புமிகு தமிழகப்போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் கூறியதாவது:

''தமிழக அரசு, மக்களின் முன்னேற்றத்திற்காக மக்களின் எண்ணத்தை அறிந்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வருகிறது. கட்டபொம்மன் போக்குவரத்துக்கழகம் நெல்லை, குமரி மாவட்டங்களை இணைத்துக் கொண்டு செயல்பட்டபோது அதை நிர்வாக வசதிக்காக இரண்டாகப் பிரித்து, குமரி மாவட்டப் போக்குவரத்துக் கழகத்திற்கு நேசமணி பெயர் வைக்கப்பட்டது. இங்கு கட்டப்பட்டுள்ள பேருந்து

சேலத்தில் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் 26 ஏக்கர் நிலத்தில், இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத அளவு ஒரு பேருந்து நிலையம் கட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. சேலம் பேருந்து நிலையத்திற்கு 3,600 முறைகள் பேருந்துகள் வந்து செல்கின்றன. இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பேருந்து நிலையம் அமைக்க 3 கோடி ரூபாய் அனுமதித்துள்ளார்.






1977-ஆம் ஆண்டு ஏழு போக்குவரத்துக் கழகங்கள் மட்டுமே இருந்தன. இப்போது 15 போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன. 350 பேருந்துகளுக்குக் கீழே இல்லாமல் 600-க்கு அதிகமான பேருந்துகள் இருந்தால் அவை நிர்வாக வசதிக்காகப் பிரிக்கப்படுகின்றன. அதனால்தான் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில் வெற்றியைக் காண முடிகிறது.

நிலைய கட்டடம் மிகவும் நன்றாக உள்ளது. இந்தக் கட்டடம் முறையாகப் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த உணர்வு மக்களுக்கு ஏற்படவேண்டும்.

1977ஆம் ஆண்டு இந்த ஆட்சி பொறுப்பேற்றபோது, 7 போக்குவரத்துக் கழகங்கள் மட்டுமே இருந்தன. இப்போது அவை 15 போக்குவரத்துக் கழகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 350பேருந்துகளுக்குக்கீழே இல்லாமல் 600க்கு அதிகமாக பேருந்துகள் இருந்தால் அவை நிர்வாக வசதிக்காகப் பிரிக்கப்படுகின்றன. அதனால்தான் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் வெற்றியைக் காண முடிகிறது.

''நாங்கள் ஆட்சிப்பொறுப்பேற்றபோது தமிழ்நாட்டில் 4 ஆயிரம் பேருந்துகள் இருந்தன. ஆனால் இன்று 11 ஆயிரத்து 200 பேருந்துகள் ஓடுகின்றன. இதைப் போன்று நாங்கள் ஆட்சிப்பொறுப்பேற்றபோது 40 ஆயிரம் தொழிலாளர்கள் போக்குவரத்துத் துறையில் இருந்தனர். ஆனால் இன்று அவர்கள் 80 ஆயிரமாகப் பெருகியுள்ளனர்.

''ஒரு பேருந்தை 6 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தக்கூடாது

> **1967-ஆம் ஆண்டு முதல் 1977-ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட சிறு தொழில்கள் 7 ஆயிரம் ஆகும். பின்பு 1977-ஆம் ஆண்டு முதல் 1987-ஆம் ஆண்டுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழில்கள் 63 ஆயிரம் ஆகும்.**

என்றும் முதல்வர் கட்டளையிட்டுள்ளார். இதனால்தான் மத்திய அரசு நமது போக்குவரத்துக்கழ கத்தை, 21 முறை சிறந்த போக்குவரத்துக் கழகமாகத் தேர்ந்தெடுத்துப் பாராட்டியுள்ளது. 1979-ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பேருந்துத் தொழிலாளர்கள் எவ்விதப் போராட்டத்திலும் ஈடுபடாமல் பணியாற்றி வருகிறார்கள். பேருந்து தொழிலாளர்களுக்காக 1980, 1983, 1986 ஆக்ய மூன்று ஆண்டுகள் ஒப்பநதம் செய்து கொண்டோம். அவர்களது ஒப்பந்தம் தீர்வதற்கு முன்பே அவர்களது கோரிக்கைகளைக் கேட்டு வாங்கி அவைகளைத் தீர்க்க முயல்கிறோம், தீர்க்கிறோம்.

''இன்று பேருந்துத் தொழிலாளர்களின் குழந்தைகள் முன்னேற்றம் அடையும் வகையில் 12 தொழிற் பயிற்சிப் பள்ளிகளும், பொறியியல் கல்லூரி ஒன்றும், மருத்துவக் கல்லூரி ஒன்றும் அமைத்துள்ளோம். பொறியியல் கல்லூரியில் 60%ம் மருத்துவக் கல்லூரியில் 30%ம் அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

''எஞ்சினியரிங் கல்லூரியை 12 கோடி ரூபாயில் அமைக்க 360 ஏக்கர் நிலத்தில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதுவரையில் 4 கோடி ரூபாய்க்கான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. 306 படுக்கைகளோடு ஒரு மருத்துவமனையும், மருத்துவக்கல்லூரியும் ரூ. 7 கோடி செலவில் வேலைகள் நடைபெற்று வருகின்றன''.

விழாவிற்குப் போக்குவரத்துத் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு.கே.வெங்கடசுப்பிரமணியம் தலைமை வகித்தார். குமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. எஸ். மூனிர்ஹோதா, இ.ஆ.ப. அவர்கள் முன்னிலை வகித்தார். விழாவில் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். நேசமணி போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு செயராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார். விழா முடிவில் நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

வை. புண்ணியமூர்த்தி

**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**நாகர்கோவில்,**
**கன்னியாகுமரி மாவட்டம்.**

## கைத்தறி போற்றுதும்!
## கைத்தறி போற்றுதும்!

**வண்ணவண்ணச் சேலைகள்**
**வகைவகையாம் வேட்டிகள்**

**கண்ணைக்கவரும் துண்டுகள்**
**கவின்மிகுந்த கைலிகள்**

**பட்டும்நல்ல பருத்தியும்**
**பாலியஸ்டர்மெல் லிழைகளும்**

**கொண்டுநெய்யப் பட்டவை**
**கொள்ளைமகிழ்ச்சி தருபவை**

**உடுப்பதற்கு ஏற்றவை**
**உடல்நலமும் காப்பவை**

**தாராளத் தள்ளு படியுடன்**
**குறைந்தவிலையில் கிடைப்பவை**

**பதினான்கு லட்சம்பேர்**
**பாடுபடும் நெசவாளர்**


**காணும்வாழ்வு உயரவே**
**கைத்தறியால் வாழ்ந்திடும்**

**மூன்றுபத்து லட்சம்பேர்**
**முகங்கள்மலர்ச்சி எய்தவே**

**கைத்தறியைப் போற்றுவோம்!**
**கைத்தறியைப் போற்றுவோம்!**



தேவ. நடராஜன்



# தர்மபுரியில் வளர்ச்சிப் பணிகள்

தர்மபுரி மாவட்டம் 2-10-65 முதல், சேலம் மாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தின் பெரும்பகுதி புஞ்சை நிலங்களே ஆகும். இம்மாவட்டத்தில் நடுத்தரப் பாசன நதிகளான பென்னாறு, தொப்பையாறு, சின்னாறு, வாணியாறு ஆகியவைகள் உள்ளன. இம்மாவட்டத்தின் முக்கியத் தொழில், விவசாயம் ஆகும். 19,93,290 மக்கள் தொகையைக் கொண்டதாகும். இம்மாவட்டம் 18 வளர்ச்சி வட்டாரங்களையும், 18 பேரூராட்சிகளையும், 588 ஊராட்சிகளையும் மற்றும் 2 நகராட்சிகளையும் கொண்டதாகும். பின்தங்கிய இடத்திலுள்ள இம்மாவட்டத்தை முன்னேற்றம் அடையச் செய்ய அரசு பல சீரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

மைய அரசும், மாநில அரசும் இணைந்து செயலாக்கம் செய்து வரும் மாபெரும் வளர்ச்சித் திட்டமாகும். இத்திட்டம் 2-10-1980 முதல் இம்மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி அவர்கள் செம்மையாக வாழ வேண்டும் என்ற நோக்கத்திற்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு, தேசியமயமாக்கப்பட்ட மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், இரட்டை மாட்டு வண்டிகள், உழவு மாடுகள் தொழில் மற்றும் வியாபாரம் போன்ற பல்வேறு இனங்களுக்கு மான்ய அடிப்படையில் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

> **பட்டு வளர்ச்சியில், தமிழ் நாட்டிலேயே தருமபுரி மாவட்டம் தான் முன்னணியில் உள்ளது.**
>
> **இங்கு சுமார் 20,000 ஏக்கர் நிலப்பரப்பில் முசுக்கொட்டை பயிரிடப்படுகிறது.**
>
> **கடந்த பத்தாண்டுகளில் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ 2 252 இலட்சத்தில், இதுவரை ரூ 2,121 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.**

இத்திட்டத்தின் வாயிலாக 1986-ஆம் ஆண்டு முடிய 47,263 நபர்கள் பயன் அடைந்து உள்ளனர். இதில் 20,439 நபர்கள் தாழ்த்தப் பட்டவராவார்கள். வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூ. 1,464 இலட்சங்களாகும். இதில் மான்யமாக வழங்கப்பட்ட தொகை ரூ.639 இலட்சங்களாகும்.

**கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டம் இம்மாவட்டத்தில் 1983 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் சமூக மற்றும் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதல்வரின் இலட்சியத்தை நனவாக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் பயன் பெறும் ஒவ்வொரு குழுவிற்கும் மத்திய அரசு மற்றும் மாநில

அரசு தலா ரூ. 5,000-ம் யுனிசெப் நிறுவனம் ரூ. 5,000-ம் ஆக மொத்தம் ரூ. 15,000 சுழல் நிதியாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் சிற்றுண்டிச் சாலை, கூடைமுடைதல், பாய் நெசவு, கம்பளி நெசவு, கயிறு திரித்தல், மீன் பிடித்தல், ஆடு வளர்ப்பு, பட்டு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, துண்டு மற்றும் சேலை நெசவு, பட்டு நூற்பு, காலணி தயார் செய்தல் போன்ற தொழில்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் 355 குழுக்கள் அமைக்கப்பட்டு 6,614 மகளிர் பயன் அடைந்து உள்ளனர். இதன் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகை ரூபாய் 53,25,000.

## வேளாண்மை பெருக்கும் திட்டம்

சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடைந்து, உணவு உற்பத்தியினைப் பெருக்கும் நோக்குடன் இம்மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் புதிய கிணறு வெட்டவும் பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும், ஆயில் எஞ்சின், மின்மோட்டார் வாங்கவும், சிமெண்ட் குழாய்கள் அமைக்கவும், நிலச் சீர்திருத்தம் செய்யவும் வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. அதற்கான மான்யமும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக 7,188 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். இதன் வாயிலாக ரூ. 367.94 இலட்சம் கடன் தொகையாகவும் மற்றும் ரூபாய் 187.83 இலட்சம் மான்யமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

## தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் 2,375 ஆதிதிராவிடர்கள் குடியிருப்புகள் 360 சத்துணவுக் கூடங்கள், 152 பள்ளிக் கட்டடங்கள் மற்றும் சாலை அமைத்தல், சிறு பாலங்கள் அமைத்தல் போன்ற 10,792 இதர வேலைகள் ஆக மொத்தம் 13,679 பணிகள். செய்து முடிக்கப்பட்டன.

இத்திட்டத்தின் மூலம் ரூபாய் 99.83 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் பணி செய்யப்பட்டு ரூ. 7.27 இலட்சம் நபர்கள் பயன் அடைந்துள்ளனர்.

## ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் 48 ஊரக இணைப்புச் சாலைகள், 111 சிறுநீர்ப்பாசனத் திட்டப் பணிகள், 110 கசிவு நீர்க் குட்டைகள், 2,711 ஆதி திராவிட குடியிருப்புகள், 295 கிராமப்புற சுகாதாரக் கழிப்பிடங்கள், 3 பல் நோக்கு சமுதாயக் கூடங்கள் ஆக மொத்தம் 3,278 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் 51.46 மனித நாட்கள் உற்பத்தி செய்யப்பட்டு 51.4 இலட்சம் நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

இதைத் தவிர, தரிசு நிலக்காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகியவற்றின் மூலம் 123.9 இலட்சம் மரக் கன்றுகள் வளர்க்கப்பட்டு 3,222 எக்டேர் நிலப்பரப்பில் 82.2 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

## வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்

இத்திட்டம் கடந்த பத்தாண்டு காலமாக இம்மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் வறட்சித் தன்மையைப் படிப்படியாகக் குறைந்திடவும், வறட்சியின்போது ஏழை எளிய மக்களின் வருமானத்தைப் பெருக்கவும், வறட்சியினால் ஏற்படும் சீர்குலைவைச் சமன் படுத்துவதும் இத்திட்டத்தின் தலையாய நோக்கங்களாகும்.

இத்திட்டத்தின் மூலம் வேளாண்மைத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு 25,000 எக்டேர் நிலப்பரப்பில் மண் வளப்பாதுகாப்பும், 460-க்கும் மேற்பட்ட கசிவு நீர்க்குட்டைகளும், மூன்று துணை நீர் ஒப்படைப்புத் திட்டங்களும் முடிக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரி அருகே எண்ணெய் வித்து செயல் விளக்கப்பண்ணை ஒன்றும், 80 எக்டேரில் மாபெரும் பழப் பண்ணை ஒன்றும் தோற்றுவிக்கப் பட்டுள்ளது. இவைகள் தவிர 900 எக்டேர் தோட்டப்பயிர் பரப்புக்கும், 8,000 எக்டேர் 'மா' நோய்த்தடுப்பு நடவடிக்கையும் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பட்டு வளர்ச்சியில் இம்மாவட்டம் முன்னணியில் உள்ளது. இச்சிறப்பிற்கு இத்திட்டமே மூலகாரணமாகும். சுமார் 20,000 ஏக்கர் நிலப் பரப்பில் முசுக்கொட்டை பயிரிடப்பட்டு வருகிறது. இதற்குத் தேவையான முட்டைகள் வழங்க இரண்டு முட்டை வித்தகங்களும் பட்டுக்கூடு விற்பனை நிலையங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும் இங்கு உற்பத்தியாகும் பட்டுக் கூடுகளைப் பயன்படுத்த அரசுத்துறைகளிலேயே நூற்பகங்களும், நூல் முறுக்பகங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.


இத்திட்டத்தில் ஆண்டுதோறும் 500 முதல் 1,000 எக்டேர் வரை நல்ல மரங்கள் கொண்ட அடர்த்தியான காடுகள் உருவாக்கப்பட்டன. இதுவரை 15,000 எக்டேர் நிலப்பரப்பில் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் கால் நடை வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு 1,800 மந்தை ஆடுகள் வழங்கப்பட்டு, கூடுதலாக 8 கால்நடை மருந்தகங்களும் ஏற்படுத்தப்பட்டன.

பால்வளத்தைப் பெருக்கும் நோக்குடன் இத்திட்டத்தின் மூலம் 325 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு அவைகளுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டன. பால் குளிரூட்டும் நிலையங்கள் மூன்று ஏற்படுத்தவும், கிருஷ்ணகிரியில் பால் பவுடர் தொழிற்சாலை ஒன்று தோற்றுவிக்கவும் வழிவகைகள் செய்யப்பட்டன.

இத்திட்டத்திற்காக, கடந்த பத்தாண்டுகளில் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 2,252





**இலட்சத்தில், இதுவரை ரூபாய் 2,121 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.** வேளாண்மைத் துறைக்கு ரூ. 560 இலட்சமும், பட்டு வளர்ச்சிக்கென ரூ. 246 இலட்சமும் நீர்ப்பாசனத் திட்டத்திற்காக ரூ. 562 இலட்சமும், கால்நடை பராமரிப்பிற்கு ரூ.135 இலட்சமும், பால் வளத்திற்கு ரூ. 120 இலட்சமும், மீன் வளத்திற்கு ரூ. 54 இலட்சமும், காடு வளத்திற்கு ரூ. 321 இலட்சமும், கூட்டுறவு மற்றும் பனை வளத்திற்கு ரூ. 70 இலட்சமும், கோழி வளர்ப்பிற்கு ரூ. 7 இலட்சமும், செலவு செய்யப்பட்டுள்ளது.

குழந்தைகள் கல்வி சத்துணவு மையங்கள் 1,381, பள்ளி சத்துணவு மையங்கள் 2,068 ஆக மொத்தம் 3,449 மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

2 வயது முதல் 4 வயது முடிய உள்ள 44,777குழந்தைகள் பயன் பெறுகின்றனர். இதில் 23,653 குழந்தைகள் தாழ்த்தப்பட்டவர்களாவர். அதேபோல் 5 வயது முதல் 15 வயது முடிய உள்ள மாணவ மாணவியர் 2,87,311 பேர் பயன்பெறுகின்றனர். இதில் 69,543 மாணவ, மாணவியர் தாழ்த்தப்பட்டவர்களாவர். மேலும் இத்திட்டத்தின் மூலம் 10,740 ஓய்வு ஊதியம் பெறும் முதியவர் மற்றும் முன்னாள் ராணுவத்தினர் பயன் பெறுகின்றனர்.

இத்திட்டத்தின் வாயிலாக 1,305தாழ்த்தப்பட்டவர் மற்றும் மலைவாழ் மக்களும், 2,162 கைம்பெண்கள் கணவரால் கைவிடப்பட்டவர்களும், 6,987 மற்றவர்களும் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இம்மாவட்டத்தில் சத்துணவுத் திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 5 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

### இலவசச் சீருடை வழங்கும் திட்டம்

சத்துணவுத் திட்டத்தில் பயன் பெறும் மாணவ மாணவிகள் அனைவருக்கும் 1985-86 மற்றும் 1986-87-ஆம் ஆண்டுகளில் இலவசச் சீருடைகள் வழங்கப்பட்டன. இதன் வாயிலாக 5,76,283 மாணவ மாணவியர்கள் பயன்பெற்றுள்ளனர்.

### குடிநீர்த்திட்டம்

தருமபுரிக் கோட்டம் : இக்கோட்டத்தில் 10 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. அவற்றில் மொத்தம் 2,066 குடியிருப்புகள் அடங்கி உள்ளன. இவற்றில் 860 குடியிருப்புகளுக்கு கையிரைப்பான் மூலமாகவும், 70 குடியிருப்புகளுக்கு மின் இறைப்பான் மூலமாகவும் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,53,505 மக்கள் பயனடைந்துள்ளனர். இதில் தாழ்த்தப்பட்டவர்களின் மக்கள் தொகை 23,310 ஆகும். இதற்காக ரூபாய் 159.426 இலட்சம் செலவீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் '86-87ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 97 குடியிருப்புகளுக்குக் கையிறைப்பான் மூலமாகவும் 27 குடியிருப்புகளுக்கு மின்ஶிறைப்பான் மூலமாகவும் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. இதனால் பயனடையும் மக்கள் தொகை 60,420. இதில் தாழ்த்தப்பட்ட மக்கள் தொகை 12,080. இதற்காக ரூ. 80 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் 40 கிராமங்களில் ரூ. 96 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

கிருஷ்ணகிரி கோட்டம்: இக்கோட்டத்தில் 8 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. இதில் உள்ள மொத்தக் குடியிருப்புகள் 2,313 ஆகும். அதில் 1977-ஆம் ஆண்டில் இருந்து 1986-ஆம் ஆண்டு வரை வருடாந்திரத் திட்டத்தில் 1098 குடியிருப்புகளுக்கு கையிறைப்பான்கள் மூலமாகவும், குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. இதனால் பயனடைந்த மொத்த மக்கள் தொகை 2,56,850. இதில் தாழ்த்தப்பட்ட மக்கள் தொகை 47,600 ஆகும். இதற்காக ரூ. 446 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

இதைத் தவிர பாதகமான பருவநிலைத் திட்டத்தின் கீழ் 1977-ஆம் ஆண்டு முதல், 1986 ஆம் ஆண்டு வரை 470 குடியிருப்புகளுக்குக் கையிறைப்பான் மூலமாக ரூ. 90 இலட்சம் செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. இதனால் பயனடைந்த மக்கள் தொகை 1,01,050. இதில் தாழ்த்தப்பட்ட மக்கள் தொகை 16,350 ஆகும்.

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்**

தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி மலைப்பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின் மூலம் 23,076 பழங்குடிய்னர் பயனடைந்து வருகின்றனர். இதனால் 425 பழங்குடியினர்களின் நிலங்களுக்கு மண்வளப்பாதுகாப்புப் பணிகள் இலவசமாகச் செய்து தரப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் 830 ஆடுகளும், 138 உழவு மாடுகளும் 278 கறவை மாடுகளும் 20 வெள்ளாடுகளும், ஒரு பொலிகாளையும் 50 சதவீதம் மான்யத்தில், கடனாக வழங்கப்பட்டுள்ளன. சித்தேரி, கோட்டப்பட்டி ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மலையில் வாழும் பழங்குடியினரின் நிலைமையினைச் செவ்வனே உணர்ந்து அதற்கு ஏற்றவாறு திட்டங்களைத் தீட்டி வெளியாட்களின் சுரண்டலை ஒழித்து மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்கான சேவை ஆற்றிடும் நோக்கில் சித்தேரியில் பெரிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புளி, கடுக்காய், சீயக்காய், தேன் போன்ற மலைப்பகுதிகளில் உற்பத்தியாகும் பொருட்களை இச்சங்கத்திடம் விற்பனை செய்து, பழங்குடியினர் தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைப் பெறவும், நியாயமான விலை பெறவும் அரசு வழிவகை செய்து மலைவாழ் மக்களுடைய பொருளாதாரத்தை வளப்படுத்த முற்பட்டுள்ளது.

பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 1984-85-ல் 54 பழங்குடியினர் குடும்பங்களுக்கு 1985-86-ல் 50 குடும்பங்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் பொருளாதாரத்தில் மேம்பாடடைய வழி வகை செய்யப்பட்டுள்ளது.

**நீர்ப்பாசனத் திட்டம்**

கடந்த 10 ஆண்டுகளில் இத்திட்டத்தின் மூலம் பாம்பாறு நீர்த்தேக்கத் திட்டம் ரூ. 320 இலட்சம் செலவிலும், தும்பனஹள்ளி நீர்த்தேக்கத் திட்டம் ரூ. 229 இலட்சம் செலவிலும், வாளியாறு நர்த்தேக்கத் திட்டம் ரூ. 1203 இலட்சம் செலவிலும், ஈச்சம்பாடி நீர்த்தேக்கத்திட்டம் ரூ. 375 இலட்சம் செலவிலும், நாகாவதி நீர்த்தேக்கத் திட்டம் ரூ. 313 இலட்சம் செலவிலும், தொப்பையாறு நீர்த்தேக்கத் திட்டம் ரூ. 592 இலட்சம் செலவிலும், சூளகிரி சின்னா நீர்த்தேக்கத் திட்டம் ரூ. 175 இலட்சம் செலவிலும் மற்றும் கேசரகுலி அள்ளா நீர்த்தேக்கத்திட்டம் ரூ. 349 இலட்சம் செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 35,468 ஏக்கர் பாசன வசதி பெற்றுள்ளது. மேலும் ரூ. 551 லட்சம் செலவில் கௌவரபள்ளி நீர்த்தேக்கத் திட்டம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் 8,000 ஏக்கர் பாசன வசதி பெறும். இவை தவிர 374 இல்ட்சம் ரூபாய் செலவில் 43 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதன் வாயிலாக 10,059 ஏக்கர் பாசன வசதி பெற்றுள்ளது.

**பி. பிச்சையா**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தர்மபுரி.**


**DEPARTMENT OF CONTINUING EDUCATION.**

**INSTITUTE FOR SOCIAL SCIENCES AND RESEARCH**

**VELLORE—632 006**

Announces the following One-year Post-graduate Diploma Programmes by Correspondence-cum-Contact Classes for the academic year 1987-88 :

1. Hospital Administration
2. Health Education
3. Public Health Administration
4. Social Welfare Administration
5. Family Welfare and Child Development
6. Nutrition and Dietetics Management
7. Educational Administration
8. Personnel Management
9. Public Relations and Advertising
10. Journalism and Mass Communication
11. Materials Management
12. Production Management
13. Panchayat & Municipal Administration
14. Computer Programming—BASIC Language

ELIGIBILITY : **Graduates and Post-graduates of any discipline, including Doctors and Nurses with or without experience can join in any of the above courses. Admissions** commence from May 1987.

EXAMINATION CENTRES : **In addition to Vellore, there will be Examination Centres** at Nagpur and New Delhi.

The cost of Prospectus and Application Form is **Rs. 25 by M.O/D.D. drawn in favour of the Institute.**

**REGISTRAR.**

**Phone : 25808**



முதல்வரும் செய்யாத அளவிற்கு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் பொன்மனச் செம்மல் அவர்கள், தமிழுக்கு, தமிழருக்குத் தொண்டு செய்தவர்க்கெல்லாம் நூற்றாண்டு விழா, சிலை திறப்பு என்று பெரும் பெரும் காரியங்களைச் செய்து வருகிறார். அவருக்கு இந்தத் தமிழகமே நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளது.''

மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள், காயிதெ மில்லத் திருவுருவப்படத்தினைத் திறந்து வைத்தும், 'கண்ணிய மிக்க காயிதெ மில்லத்' என்ற கருத்தரங்கினைத் தொடங்கி வைத்தும், தொடக்க உரை ஆற்றினார்.

# கண்ணியம் மிக்க காயிதெ மில்லத்

கண்ணியம் என்னும் அழகிய தமிழ்ச் சொல்லுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்கள். இந்தியன் யூனியன் முஸ்லீம் லீகின் தனிப்பெரும் தலைவராக விளங்கிய அவர், முஸ்லீம் சமுதாயத்தின் அரசியல் உரிமைகளுக்காகவும் சிறுபான்மை மக்களின் சட்ட ரீதியான உரிமைகளுக்காகவும் பொதுவாக பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும் போராடியவர். நாட்டு மக்களின் பொதுப் பிரச்னைகளுக்கு நடுநிலை தவறாமல் தீர்வு காண்பதற்குப் பெரிதும் பாடுபட்டார் அவர்.

நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் இடம் பெற்றிருந்தபோது முஸ்லீம்களின் பிரச்னைகளைவிட அனைத்துத் தரப்பு மக்களின் பொதுப் பிரச்னைகள் குறித்தே அதிகம் உரையாற்றினார். நெய்வேலித் திட்டம், குடிநீர்ப் பிரச்னைக்கான தீர்வு, தொழில் மயமாக்கும் அவசியம் போன்றவை குறித்து அவர் ஆற்றிய உரைகள் இன்றளவும் மக்களால் நினைத்து போற்றப்படுபவையாகும்.

காயிதெ மில்லத் அவர்கள் தலை சிறந்த அரசியல்வாதியாக மட்டுமின்றி இந்திய விடுதலைப் போராட்ட வீரராகவும் விளங்கினார்.


அந்தப் பெருமகனாரின் 92-வது பிறந்த நாள் விழா 5-6-87 அன்று திருச்சி தேவர் மன்றத்தில் அரசின் சார்பில் சிறப்புடன் நடைபெற்றது.

அன்று காலை நாயன இசை மற்றும் திரு எஸ். எம். யூசுப் அவர்களின் மெல்லிசைப் பாடல்களுடன் விழா நிகழ்ச்சிகள் துவங்கின.

விழா வரவேற்புரையாற்றிய திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) திரு மு. காசி விஸ்வநாதன் அவர்கள் ''இஸ்லாமிய மதத்திற்காகவும், தமிழ் வளர்ச்சிக்காகவும் மட்டுமின்றி நாட்டு விடுதலைக்காகவும் பாடுபட்டவர் காயிதேமில்லத் அவர்கள்'' என்று கூறி அனைவரையும் வரவேற்றார்.

முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம்அவர்கள் விழாத் தலைமை ஏற்றார்கள். தமது உரையில் அவர் குறிப்பிட்டதாவது: ''இந்திய மக்களின் நல்லெண்ணத்தையும் தமிழக மக்களின் அன்பையும் பெற்றவர் காயிதெ மில்லத் அவர்கள். ஒவ்வொரு வேளை சாப்பிடும் போதும் ஒரு ஏழைக்கு உணவளிப்பார். தமிழ் நாட்டில் இந்து முஸ்லீம் வேற்றுமை இன்று கிடையாது. அதற்கு வழிகாட்டியவர் காயிதே மில்லத் அவர்கள். ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்வது விலங்கு குணம். மக்கள் குணம் அல்ல என்று அவர் அடிக்கடி கூறுவார். எந்த

''சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்க்கும், தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்க்கும் சமுதாயத் தொண்டாற்றியவர்க்கும் அரசியல் வழிகாட்டிகளுக்கும்,இப்படி அத்தனை பேருக்கும் தமிழகத் தலைநகரில் விழா எடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாவட்டத் தலைநகர்களிலும் விழா நடத்தி சிறப்புச் சேர்க்க ஆணையிட்டார்கள். தமிழ்நாட்டில் இந்து முஸ்லீம் ஒற்றுமையாக வாழ்வதற்குக் காரணமானவர்களில் காயிதெ மில்லத் அவர்களும் ஒருவர், தேசியத் தலைவர்களில் ஒருவராகப் போற்றத்தக்கவர் அவர். சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் ஏறத்தாழ 22 ஆண்டுகள் பணியாற்றினார். அரசியல் நிர்ணய சபையில், ஒரு பொதுமொழி இந்தியாவின் ஆட்சி மொழியாக வேண்டும் என்று கருத்து வெளியிடப்பட்டபோது, தொன்மைமிக்கதும், இலக்கண, இலக்கிய வளம் நிறைநததுமான தமிழ்தான் அதற்குத் தகுதி பெற்றது. அதுவும் எனது தாய்மொழி தமிழ் தான் ஆட்சி மொழியாக வர



மாண்புமிகு சத்துணவு மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் திரு சவுந்தரராசன் அவர்கள் விழாவில் கடன் உதவிகளை வழங்குகிறார்.

வேண்டும் என்று நெஞ்சுயர்த்திக் கூறியவர் காயிதெ மில்லத் அவர்கள்'' என்று கூறி தமிழின் பால் அவருக்கிருந்த பற்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளிப்படுத்தினார்.

கருத்தரங்கில் கலந்துகொண்ட டாக்டர் சி. நயினார் முகம்மது அவர்கள், 'காயிதெ மில்லத் அவர்களுடைய உள்ளம் சிறந்த உள்ளம், அவர் வாழ்ந்த வீடு குடிசை, அவர் படுத்திருந்தது நார்கட்டில். பயன்படுத்திய பொருட்கள் எல்லாம் எளிய பொருட்கள். மிகச் சிறந்த தொண்டராக வாழ்ந்த காயிதெ மில்லத் அவர்கள் நமக்காக, நாட்டிற்காக, செயற்கரிய செயல்களைச் செய்தார்' என்று கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் திரு சோ. சத்திய சீலன் அவர்கள், 'நரேந்திரன் விவேகானந்தர் ஆனார், சித்தார்த்தன் புத்தரானார், இராம கிருஷ்ணர் பரமஹம்சரானார், மோகன்தாஸ் காந்தி மகாத்மா ஆனார், ஆமாம், முகமது இஸ்மாயில் காயிதெ மில்லத் ஆனார். பிறப்பில் வைக்கும் பெயரைவிட மக்களால் வழங்கப்படும் பெயரே நிலைத்து நிற்கிறதென்றால் அவர்களே உயர்ந்தவர். இந்த நாடு வாழும் வரை, உலகம் உள்ளவரை அவர் திருநாமம் நிலைத்து நிற்கும்' என்றார்.

திரு கே. எஸ். அப்துல்வகாப் (ஜானி) அவர்கள் உரையாற்றுகையில், ''அரசுக்கு நன்றி கூறக் கடமைப்பட்ட சமுதாயம் இது. காரணம், இத்திருமகனாருக்கு அரசு எடுக்கும இந்த விழா, முஸ்லீம் லீகை ஈன்றெடுத்தத் தலைவர் அவர். தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரம் முஸ்லீம் பெருமக்கள் சிதறி ஓடிக்கொண்டிருந்த நேரம், அவர்களைத் திரட்டி ஒற்றுமை ஏற்படுத்தினார். கொண்ட கொள்கைக்காக தியாக வாழ்வு வாழ்ந்தவர் அவர். அவர் நினைத்திருந்தால் செல்வச் சீமானாக வாழ்ந்திருக்க முடியும். திராவிட இயக்கம் ஆட்சிப் பொறுப்பேற்க அடிப்படைக் காரணம் அவர் தான். பிரிந்து கிடந்த சக்திகளை எல்லாம் ஒன்று திரட்டி, தேர்தலில் போட்டியிடச் செய்தார் அவர்'' என்றார்.

'முஸ்லீம் சமுதாயத்தின் வழி காட்டி அவர். பல்வேறு துறைகளில் அவ்வப்போது ஆக்கபூர்வ கருத்துக்களை வழங்கியவர். அவர் காட்டிய வழியில் இந்த சமுதாயம் நடந்து வருகிறது. அவர் ஆற்றிய உரைகள். செய்த செயல்கள் இவை அனைத்தையும் மக்கள் அறியச்செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இந்த விழா நடைபெறுகிறது' என்று கூறிய பேராசிரியர் திரு கே. எம். காதர் மொய்தீன் அவர்கள் தொடர்ந்து பேசும்போது ''அவரது பிறந்த நாள் விழா இந்திய தேசிய விழாவாக நடத்தப்பட வேண்டும்.'' என்று கூறினார்.

காலை நிகழ்ச்சிகளின் இறுதியில் திருச்சி மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. ப. சாமிநாதன் அவர்கள் நன்றி கூறினார்.

மெல்லிசையுடன் துவங்கிய மாலை நிகழ்ச்சிக்கு வரவேற்புரை ஆற்றிய செய்தி - மக்கள் தொடர்புத் துறையின் துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் அவர்கள் ''நாட்டிற்கும் ஒற்றுமைக்கும் கேடில்லாமல் வாழ வேண்டும் என்று வலியுறுத்தி எளிமைக்கு ஓர் எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்தவர் காயிதெ மில்லத் அவர்கள்'' என்று கூறி அனைவரையும் வரவேற்றார்.

தலைமை ஏற்ற மாண்புமிகு சத்துணவு மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் திரு ஆர். சவுந்தரராசன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''ஆன்றோர்களும், சான்றோர்களும் ஒரு நாட்டில் தோன்றுவது இயற்கை. நல்ல பல கருத்துக்களை மக்கள் மன்றத்திற்குத் தந்த அந்த உத்தமர்களுக்குச் சிறப்புச் சேர்க்க வேண்டும் என்பதற்காக இந்த விழா நடத்தப்படுகிறது. தனிப்பட்ட இனத்திற்கு, தனிப்பட்ட மதத்திற்குச் சொந்தக்காரரல்ல காயிதெ மில்லத் அவர்கள். ஒட்டுமொத்தமான இந்தியாவின் சொத்து அவர். கண்ணியமிக்க ஒருவன் அரசியலில் இருக்க முடியும் என்பதற்கு அவர் ஓர் எடுத்துக் காட்டு. ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டுமோ, அப்படி வாழ்ந்து காட்டிய மேதை அவர். திறந்த உள்ளத்திற்குச் சொந்தக்காரர். தங்கள் தலைவர்களுக்கு அந்தந்த மதத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் விழா எடுப்பார்கள். ஆனால் அவர்கள் இந்த நாட்டிற்கே சொந்தக்காரர்கள் என்பதற்காக அரசே விழா எடுக்கிறது'' என்றார்.

'காயிதெமில்லத் அவர்களின் பண்பால் கவரப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில் 'கண்ணியமிக்க காயிதெமில்லத்' என்று அழைத்தார்கள். தன்னை முதலில் இந்தியனாக்கிக் கொண்டு இந்திய யூனியன் முஸ்லீம் லீகை அவர் உருவாக்கினார். அவர் புகழ் என்றென்றும் நிலைக்கும்' என்று திருவெறும்பூர் சட்டமன்றஉறுப்பினர் திரு அண்ணாதாசன் அவர்கள் வாழ்த்துரை வழங்குகையில் தெரிவித்தார்.

தொடர்ந்து வாழ்த்துரை வழங்கிய சட்ட மன்ற உறுப்பினர் திரு ஏ. கே. ஏ. அப்துல் சமது அவர்கள் குறிப்பிட்டதாவது :

'கண்ணியம் மிக்க காயிதெ மில்லத் அவர்களின் புகழுக்கு, மேலும் புகழ் சேர்க்க முடியாது. அவரது புகழினை எடுத்துச் சொல்வதன் மூலம் நமக்குப்புகழ் தேடிக் கொள்கிறோம். முஸ்லீம் சமுதாயத்திற்கு ஒரு கொள்கையில்லை, ஒரு கூடாரமில்லை. ஒரு தலைவரில்லை என்று பேசப்பட்டு வந்தபோது, 'நான் இருக்கிறேன்' என்று கூறி இறை நம்பிக்கையால், தளராத உழைப்பால் நிரூபித்துக் காட்டினார். இந்தச் சமுதாயத்தின் விடிவெள்ளியாய்த் திகழ்ந்தார். புறக்கணிக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட இந்த சிறுபான்

மைச் சமுதாயத்திறகு ஒரு பெரும் போதகப் பெரியாராக விளங்கினார். எங்கே அடித்தள மக்கள் பாதிக்கப்பட்டாலும் அவர்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தார். தமிழ் நாட்டின் பொருளாதாரம் மேம்படக் காரணமாயிருந்தார். அவரின் நினைவாக உருவாக்கப்படவிருக்கும் காயிதெ மில்லத் மாவட்டத்தை இவ்வாண்டே அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.'

கிராமப் புறப் பெண்கள் வறுமைக் கோட்டிலிருந்து மீள அவர்களுக்கென பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருச்சி மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் 1986-87-ஆம் ஆண்டில் 150 - குழுக்கள் நியமிக்கப்பட்டு, கறவை மாடு, செம்மறி ஆடு வளர்ப்பு, காய்கறித் தோட்டங்கள் மற்றும் சமூக நலப்பயிர் வளர்ப்பு, பட்டுப்புழு வளர்த்தல், பாய்நெசவு, போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தில் ஈடுபடும் ஒவ்வொரு குழுவிற்கும் மாண்புமிகு சத்துணவு மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் திரு ஆர். சவுந்தரராசன் அவர்கள் விழாவில் கடன் உதவிகளை வழங்கினார்.

பெருமளவில் முஸ்லீம் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்த இந்த விழாவின் இறுதியில் செய்தி - மக்கள் தொடர்புத் துறையின் துணை இயக்குநர் (நினைவகங்கள்) திரு ஆர். வைகுந்தம் அவர்கள் நன்றி கூறினார்.

—நமது செய்தியாளர்



# குடும்ப நல நட்சத்திரக் கலை விழா!

சென்னை இராயபுரம் பகுதியில், மாநகராட்சித் திடலில் கண்ணைக் கவர்ந்திடும் வகையிலும், எண்ணத்தை ஈர்த்திடும் வகையிலும் வண்ணமிகு குடும்ப நல நட்சத்திரக் கலைவிழா 27-5-1987 அன்று சிறப்புடன் நடைபெற்றது.

இதில் பல முன்னணித் திரைப்பட நட்சத்திரங்கள் கலந்து கொண்டு, குடும்பநலத் திட்டத்திற்கு ஆதரவு பெருகும் வகையில் சிறப்புரையாற்றினர். இவ்விழாவினைத் தமிழ்நாடு அரசு குடும்ப நலத்துறை, சென்னை மாநகராட்சி, அரசினர் ஆர்.எஸ் ஆர்.எம். மருத்துவ மனை ஆகியவை இணைந்து நடத்தின.

ஒரே சமயத்தில் பல திரைப்பட நட்சத்திரங்கள் கலந்து கொண்ட குடும்பநல நட்சத்திரக் கலை விழா, தமிழ்நாட்டிலே மட்டுமில்லாமல், **அகில இந்திய அளவிலும் இதுவே முதலாவதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.**

வரவேற்புரையாற்றிய மாவட்ட மக்கள் கல்வி தகவல் அலுவலர் திரு எஸ். மெய்யப்பன் நோயுறும் குழந்தைகளுக்குக் கசப்பு மருந்தைத் தேன் தடவிக் கொடுப்பதைப் போல, சமுதாய மக்கள் கசப்பென்று கருதும் குடும்ப நலத் திட்டத்தை, சினிமா நட்சத்திரங்கள் கலந்து கொண்டு வண்ணப் பொலிவு மிக்க நிகழ்ச்சி மூலம் எடுத்துச் சொல்லும் முயற்சியே குடும்ப நல நட்சத்திரக் கலை விழா' என்று குறிப்பிட்டார்.

விழாவிற்குத் தலைமையேற்ற அரசு ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனைக் கண்காணிப்பாளர் டாக்டர் திருமதி ஷீலா ராஜரத்தினம் பேசுகையில் குடும்ப நல சிகிச்சைக்காக அரசு பல நவீன வசதிகளைச் செய்துள்ளது என்றும், அதை ஏழை எளிய மக்கள் முன் வந்து பயன்படுத்திக் கொண்டு, அளவான குடும்பம் அமைத்து ஆனந்தமாக வாழ முன் வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

விழாவைத் துவக்கி வைத்துச் சிறப்புரையாற்றிய குடும்பநலத் துறை இயக்குநர் திருமதி ஜெயந்தி பேசுகையில் உணவுப் பற்றாக்குறை, உடைப் பற்றாக்குறை இடநெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டம், குடிநீர்ப் பிரச்சினை என்று எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக இருப்பது மக்கள் தொகைப் பெருக்கம்தான் என்றும், ஒவ்வொருவரும் அளவான குடும்பம் அமைத்துக் கொண்டு நாட்டின் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுக்குள் வைத்தால்தான், அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் பயனை மக்கள் பெற்று பொருளாதார ரீதியில் பயனடைய முடியும் என்றும் குறிப்பிட்டார்.

சிறப்புரையாற்றிய குடும்ப நல விளம்பர இணை இயக்குநர் திரு கோ. இராதாகிருஷ்ணன் பேசுகையில், "ஒன்றிரண்டு குழந்தைகளைத் தகுதிமிக்க தம்பதிகள் அனைவரும் சிறு குடும்பம் அமைத்துச் சிறப்பாக வாழ வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

திரைப்பட நட்சத்திரங்கள் செல்வி சோபனா, திருமதி ஜெயசித்ரா, செல்வி பல்லவி ஆகியவர்கள் மூலமாக, குடும்ப நலச் சிகிச்சை செய்து கொண்ட தாய்மார்களுக்கும், 'காப்பர்-டி' என்ற கருத்தடை வளையம் பொருத்திக் கொண்ட தாய்மார்களுக்கும், எவர்சில்வர் பாத்திரங்களும் பரிசுகளாக வழங்கப்பட்டன. திரைப்பட நடிகர்கள் மேஜர் சுந்தரராஜன், திரு பாண்டியன், திரு நாகேஷ், திரைப்பட இயக்குநர், திரு ஏ. செகந்நாதன் மற்றும் திருமதி தாசரி பத்மா அவர்களும் சிறப்புரையாற்றினார்கள்.

அரசு ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனையின் குடும்ப நல விரிவாக்க அலுவலர் திருஏ.சிவன் நன்றி கூறினார்.

இறுதியில் குடும்பநலத் தொடர்பான நாடகம் டணால் கே. ஏ. தங்கவேலு குழுவினரால் நடத்தப்பட்டது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



# தமிழகத்தில் புதுமையான தொழிற் புரட்சி!

## டிட்கோவின் எதிர்காலத் தொழிற் திட்டங்கள்

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் உருவாகும் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்.
- ரூ.5.5 கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் தொழிற்திட்டம்.
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்திட்டம்.
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் 'பென்சிலின்' மருந்து தயாரிக்கும் தொழிற்திட்டம்.
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் தொழிற் திட்டம்
- ரூ. 12 கோடி மூலதனத்தில் உருவாகும் செராமிக் டைல்ஸ் தொழிற் திட்டம்



ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

டிட்கோ

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002